

GOKULAM

கோகுலம்


டிசம்பர் 2002

ரூ.6/-

இலவசம் :
வண்ண வாழ்த்து
அட்டைகள்!



மனதைக் கவரும் மணிப்புரி நடனம்!


பிங்கி
விங்கி
எந்தக் குரங்குக்கு வாழைப்பழம் கிடைக்க வாய்ப்பு உள்ளது?

மீனே... மீனே...




* ‘கிஜெண்டாக்ஸ்’ என்ற ஒருவகை மீன் டார்ச் விளக்கின் ஒளியைப் போன்ற வெளிச்சத்தைத் தன் உடலில் கொண்டது.



* ‘ஷில்வேல்’ என்ற ஒருவகை மீன், குட்டிப் போட்டு பால் கொடுக்கக் கூடியது.
* ‘கட்டல் ஃபிஷ்’ என்ற ஒருவகை மீனுக்கு மூன்று இதயங்கள் உள்ளன.
* ‘சியாமிஸ்’ என்ற மீன்கள் பெரும்பாலான நேரங்களில் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டே இருக்கின்றன.
* ‘பிளெயஸ்’ என்ற மீனுக்கு இரண்டு கண்களும் ஒரே பக்கத்தில் அமைந்துள்ளன.
* ‘ஸ்டார் ஃபிஷ்’ என்ற ஒருவகை மீனைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும், ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு மீனாக வளர்ந்து விடும்!
* ‘சிவப்பு நெருப்பு மீன்’ என்ற மீன் நீர்மட்டத்துக்கு மேலே வந்து காக்கையைப் போல கத்தும்.

— மு. பெரியசாமி,
விட்டுக்கட்டி.



ஜம்மு — காஷ்மீரில் சட்டசபைத் தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. 45 சதவீத வோட்டு பதிவான நிலையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. காங்கிரஸ் மற்றும் மக்கள் ஜனநாயகக் கட்சி கூட்டணியில் முஃப்தி முகமது சையத் முதல்வராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டருக்கு வழங்கப்படுகிறது. சர்வதேசப் பிரச்னைகளுக்கு அமைதித்தீர்வு காண அவர் எடுத்து வரும் முயற்சியைப் பாராட்டியும், ஜனநாயகம், மனித உரிமைகளை நிலை நாட்ட அவர் ஆற்றிய பங்கு, பொருளாதார சமூக வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவை ஆகியவற்றைக் கருதியும், நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

ஃபிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியன் மறைந்து சுமார் இருநூறு ஆண்டுகள் ஆன பின்பும் மக்கள் உள்ளங்களிலிருந்து அவர் இன்னும் மறையவில்லை. 1821ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டு அவர் காலமானார். அதிலிருந்து அவரைப் பற்றி இதுவரை 80 ஆயிரம் புத்தகங்கள் வெளி வந்துள்ளன. இணைய தளங்களில் அவரைப் பற்றி 55 படங்கள் வெளிவந்துள்ளன. 6 தொலைக்காட்சித் தொடர்கள் வந்துள்ளன.

அரபு நாடுகளில் சட்ட திட்டங்கள் கடுமையாக இருக்கும். பஹ்ரைனில் நடைபெற்ற சர்வதேச நகைக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த 7.5 கோடி ரூபாய் மதிப்புடைய வைர நெக்லஸ் திருடு போய் விட்டது. கண்காட்சியைக் காண வந்த இருவர் விற்பனையாளர்களின் கவனத்தைத் திசை திருப்பி, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி, திருடிச் சென்று விட்டனர். அவர்கள் அகப்பட்டால் அதோ கதிதான்!

உலகிலேயே மிக உயரமான மனிதர் அல்ஜீரியாவில் இருக்கிறார். அவரது உயரம் எட்டு அடி, வயது 29, எடை 180 கிலோ. அவருக்கு என ஸ்பெஷலாக ஆடைகள், செருப்புகள், ஷூக்கள் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்படுகின்றன. அவரது உயரத்தைப் பார்வையிட தினந்தோறும் ஏராளமான சிறுவர்களும், பெரியவர்களும் இனிப்பு, பரிசுப் பொருட்களுடன் அவரது வீட்டுக்குச் செல்கின்றனர்

இரண்டாம் உலகப் போரின் போது முஸோலினியின் பாசிச ஆட்சிக்கு இத்தாலிய அரசர் ஆதரவளித்தார். போர் முடிந்த பிறகு, மன்னர் ஆட்சியை ஒழிக்க இத்தாலிய நாடாளுமன்றம் முடிவு செய்தது. அரச குடும்பம் நாட்டை விட்டு ஓடியது. அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் இத்தாலியில் வசிக்கவோ, அந்நாட்டுக்குச் செல்லவோ கூடாது, என்று அரசியல் சட்டம் இயற்றப்பட்டது. இத்தாலியை விட்டு ஓடியபோது இளவரசர் விட்டோரியோ இம்மானுவேலுக்குப் பத்து வயது. இப்போது 65 வயதாகிறது. சுவிட்சர்லாந்தில் வசித்து வருகிறார். நாடு திரும்ப அனுமதி கோரி, ஐரோப்பாவில் உள்ள மனித உரிமை நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் இளவரசர். அவரது கோரிக்கையைப் பரிசீலிக்குமாறு மனித உரிமை நீதி மன்றம் உத்தரவிட்டது. இத்தாலிய நாடாளுமன்றம் பலமுறை விவாதித்து, அரச குடும்பத்து ஆண்கள் நாடு திரும்ப அனுமதி அளித்து விட்டது.

கோகுலம்

டிசம்பர் 2002

மலர்: 20
இதழ்: 11

மீனே... மீனே... - 1
கோகுலம் நியூஸ் - 2
குரு - சிஷ்யன் (படக்கதை) - 4
எந்தக் கல் சரியானது? - 6
மனதைக் கவரும் மணிப்புரி நடனம்! - 8
கதை கதையாம் காரணமாம் - 11
பரிசு ஜோக்ஸ் - 12
மூளைக்கு அதிகப் பசி - 14
பூதம் தந்த வரம் (படக்கதை) - 16
குறுக்கெழுத்துப்புதிர் - 17
குதிரை போட்ட தங்கக் காசுகள் - 18
விடுகதைப் பக்கம் - 24
ஆடுகிறான் கண்ணன் ஆடுகிறான்... (பாடல்) - 25
எங்கள் பள்ளியில் நடந்தது - 26
மாலா தேடிய மாயப்பெண் (படக்கதை) - 28
தேவலோகப் பயிர் - 32
அழகான தோட்ட வீடு! - 36
அரச பதவி யாருக்கு? (படக்கதை) - 45
கிறிஸ்துமஸ் ஸ்டார் தொங்க விடுவது ஏன்? - 48







வலையில் சிக்கியவை - 50
சின்னமனூர் சின்னப்பட்டாளம் (தொடர்கதை) - 52
எங்கள் ஊரில் நடந்தது - 58
1000/- ரூபாய் பரிசுப் போட்டி - 60
புதிர் உலகம் - 62
பிரபலங்கள் வாழ்வில்... - 64
இருவர் பெருமை (புராணக்கதை) - 66
பாம்புத்தாரா - 69
ஜிம்னாஸ்டிக்ஸ் (வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்) - 72
ஓவியப் போட்டி முடிவுகள் - 76
அந்தச் சில நிமிடங்கள்... - கதை - 78
குதிரையின் சேவை (படக்கதை) - 80
சார் தபால் - 83
விளையாட்டு அரங்கம் - 84


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.


- பாரதியார்


குரு-சிஷ்யன்

கதை: சு. சௌம்யாயனி,
ஒன்பதாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ்
பெ.மே.நி.பள்ளி,
தூத்துக்குடி.

படம்: முத்து






ஆசிரமத்தில் -
வேலா, ஏன் தாமதம்?
உங்கள் உபதேசத்தை யோசித்துக் கொண்டே வந்ததில் தாமதமாகிவிட்டது.
குருவே எனக்கு ஒரு சந்தேகம்.
தாராளமாகக் கேள்.
ஆயுள் என்று சொன்னீர்களே, அது உயிருள்ள பொருட்களுக்கு மட்டுமா?
எல்லா பொருட்களும் இறைவனால் படைக்கப்பட்டவை. நாம் உருவாக்கியது என்று எதுவும் கிடையாது. நம் மூலம் இறைவனே உருவாக்குகிறான்...
... ஆயுள் முடிந்ததும் இறைவனே அழித்துவிடுகிறான். இதில் உயிர், உயிரற்றது என்ற பேதம் கிடையாது.
நன்றி குருவே. தங்கள் கமண்டலத்தின் ஆயுள் முடிந்துவிட்டது.
உடைந்த கமண்டலத்தைப் பார்த்தார் குரு.
நீ செய்த தவறுக்கு என்னையும் துணை சேர்த்துக் கொண்டாய். இனி மேலாவது ஜாக்கிரதையா இரு.
நன்றி குருவே.



மேட்டுக்குடி ஒரு குக்கிராமம். விவசாயமே அங்கு முக்கியத் தொழில். குடிசை வீடுகளே அங்கு அதிகம். கல் கட்டடம் ஒன்றே ஒன்று தான். அது வட்டிக்குக் கடன் கொடுக்கும் பங்காரு என்பவருடையது. ஓட்டு வீடுகள் ஐந்தாறு உண்டு. நகை செய்யும் கேசவன் ஓட்டு வீட்டிலிருந்தான்.

பங்காரு அடிக்கடி திருட்டு நகைகள் வாங்கி கேசவனிடம் கொடுத்து, அழித்து புது ரகமாகச் செய்யச் சொல்வார். அதனால் இருவருக்கும் நெருங்கிய பழக்கம் இருந்தது.

ஒரு தடவை ஒரு கெம்பு அட்டிகையைக் கொடுத்து ஒரு ஜோடி வளையல் செய்யச் சொன்னார். கேசவனும் நுண்ணிய வேலைப் பாட்டுடன் நகை செய்து கொடுத்தான்.

பங்காருவின் மைத்துனன் நாட்டு வைத்தியரிடம் தன் வியாதிக்காக மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் நவரத்தினப் பரிட்சையில் தேர்ந்தவன். கெம்பு நகை அடமானம் முடிந்து வந்தபோதே, கற்களைச் சோதித்து 'உயர்ந்தவை' என்று உத்தரவாதம் கொடுத்திருந்தான். வளையல் செய்து வந்தபோது, மறுபடி மைத்துனனிடம் காண்பித்தார் செட்டியார்.

''கற்களை மாற்றிவிட்டான் கேசவன். இவை சாதாரணக் கற்களே! வேலைப்பாட்டில் ஏமாந்து விட்டீர்கள்'' என்றான் மைத்துனன்.

கேசவனிடம் நயமாகவும், சினந்தும் கேட்டுப் பார்த்தும் எந்தப் பயனுமில்லை. பஞ்சாயத்தார் வீட்டைச் சோதனை போட்டும் எதுவும் அகப்படவில்லை.

வழக்குமன்றத்தில் புகார் கொடுத்தார் பங்காரு. கேசவன் தனது மூன்று நண்பர்களை நிறுத்தி, 'தன் நாணயத்திற்கு இவர்கள் மூவருமே உரைகல்' என்று ஆணித்தரமாகக் கூறினான்.

நீதிபதி மிகுந்த புத்திசாலி. வழக்காட வந்தவர்களையும், அவர்களுடன் வந்தவர்களையும் அங்கேயே நிறுத்திக் கொண்டு ஒருவனை அழைத்து ''மேட்டுக்குடிக்குப் போய் கற்களை எடுத்து வா'' என்றார்.

அவன் சிறிது நேரத்தில் ஒரு மாட்டு வண்டியில் நிறைய துவைக்கும் கற்களை எடுத்து வந்தான்.

மாலதி



எந்தக் கல் சரியானது?

''ஐயா! பேச்சி துவைக்கிற கல்லை எடுக்கவிட மாட்டேங்கறா. இந்தக்கல் நல்லா அழுக்குப் போகும். இது துணி கிழியாம துவைச்சுத் தரும்'' என்று ஒவ்வொன்றாய் விளக்கினான்.

ஏனெனில் அவன் ஒரு சலவைத் தொழிலாளி!

நீதிபதி இரண்டாமவனிடம் ''ரகசியமாக உன்னிடம் இருப்பதில் ஒன்று கொண்டு வந்தால் போதும்'' என்றார்.

அவனும் விரைந்து சென்று கொண்டு வந்தான். அவன் எடுத்து வந்தது பானை பண்ணும் சக்கரம்!

''ஐயா! நானே நீங்க சொல்கிற மாதிரி பண்ணித் தரேனுங்க! கேசவன்கிட்டே என் வேலையைப் பத்திக் கேட்டுப் பாருங்க! பொம்மையெல்லாம் கூட செய்வேனுங்க'' என்றான் ஆர்வமாக.

ஏனெனில் அவன் ஒரு குயவன்.

மூன்றாமவனிடம் நீதிபதி ''பளபளன்னு இருக்கும். சின்னதா இருக்கும். உங்கிட்டே அந்தக் கல் இருக்கா?'' என்று நயமாக விசாரிக்க,

''இருக்குங்க'' என்று ஓடினான் அவன்!

அவன் கொண்டு வந்த சாணைக் கல்லைப் பார்த்து மயக்கமானார் நீதிபதி. ஏனெனில் அவன் ஒரு க்ஷவரத் தொழிலாளி! அவனுக்குத் தெரிந்ததெல்லாம் சாணைக் கல்தான்.

இந்த மாதிரி அப்பாவிகள் இருக்கும் ஊரில் புரட்டா, என சபையோர் வியந்தனர்.

கேசவன் தன் சகோதரன் மகன் அசலுக்கு மேல் வட்டி கொடுத்தும், பங்காரு நகை மூழ்கி விட்டதாக ஏமாற்றி மோசம் செய்ததால் கற்கள் தனக்கும், அட்டிகையின் தங்கம் பங்காருவுக்குமாகக் கணக்கிட்டதாக ஒப்புக் கொண்டான்.

பங்காருவின் தலை கவிழ்ந்தது.



மனதைக் கவரும்

உலகப் புகழ் பெற்ற இந்திய நடனங்களுள் மணிப்புரி நடனமும் ஒன்று. இது மணிப்புரி மக்களின் கடவுள் வழிபாட்டிலும், சமூக வாழ்க்கையிலும் கலந்து இன்பமும், ஊக்கமும் அளித்து வரும் பழைய கலையாகும்.

மணிப்புரியில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிருஷ்ணன் கோயில் இருக்கும். எல்லாக் கோயில்களிலும் நடன அரங்கு உண்டு. பண்டிகை, திருவிழாக்களின் போது, கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து மணிப்புரி நடனத்திற்கு ஏற்பாடு செய்து உற்சாகமாகக் கொண்டாடுவார்கள். ஒவ்வொரு பௌர்ணமியின்



• அல்லி





போதும் இரவு முழுவதும் மணிப்புரி நடனம் கோயில்களில் நடைபெறும்.

18ம் நூற்றாண்டில் மணிப்புரியை ஆண்ட மன்னர் ஜெயசிங் காலத்தில் கிருஷ்ணன் கோயில்கள் எழுப்பப்பட்டன. ராதை, கோபியருடன் கிருஷ்ணன் ஆடிப்பாடி மகிழும் 'இராச லீலை' நடனங்கள் தொடங்கின.

பாதத்தின் முன் பகுதியை ஊன்றி குதிகாலைச் சற்றுத் தூக்கி ஆடுவது மணிப்புரி நடனத்தின் சிறப்பு. இந்நடனம் ஆடுபவர்கள், வித்தியாசமான கண் கவர் ஆடை, ஆபரணங்களை அணிகிறார்கள். ஆழ்ந்த நிறங்களில் ஜரிகை வைத்து ஆடை தயாரிக்கப்படும்.

'குமின்' என்று அழைக்கப்படும் குடை வடிவமுடைய பாவாடை பார்ப்பதற்கு வித்தியாசமாக இருக்கும்.




மணிப்புரி நடனம்!

மணிப்புரி நடனத்திற்குப் புகழ் பெற்ற மணிப்புரி மாநிலம், இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அசாம் மாநிலத்துக்கும் பர்மா நாட்டிற்கும் இடையில் இருக்கிறது. அசாம், மணிப்புரி, நாகாலாந்து, மிசோராம், அருணாச்சல பிரதேசம், மேகாலயா,



• ஏரி



• ஓவியம்

திரிபுரா போன்றவை ஏழு சகோதரிகள் என்று அழைக்கப்படுகின்றன.

நவமணிகளுள் மரகதமும் மாணிக்கமும் இங்கு கிடைப்பதால் இம்மாநிலத்திற்கு மணிப்புரி என்ற பெயர் ஏற்பட்டது. மணிப்புரியின் தலைநகர் இம்பால்.

மணிப்புரி மலைப்பாங்கான பிரதேசம். மழை அதிகம் பொழியும். விவசாயமே முக்கியத் தொழில். நெல், தேயிலை



• கோயில்

அதிகமாகப் பயிரிடப்படுகிறது. பெட்ரோலியமும் இங்கு கிடைக்கிறது.

கைத்தறித் தொழிலில் சிறப்புற்று விளங்குகிறது. மணிப்புரி சேலைகள் பிரசித்தி பெற்றவை.

மணிப்புரியில் மணிப்புரியர், மெய்தியர் இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். மலைகளில் நாகர்களும், காக்கியரும் வாழ்கின்றனர்.

பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி மணிப்புரி. அசாம், திபெத், பர்மிய மொழிகளும் இங்கு பேசப்படுகின்றன.

இங்கு மூங்கில் மரங்கள் அதிகம் காணப்படுவதால் மூங்கில் கூடைகள், நாற்காலிகள், அலங்காரப் பொருட்கள் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

சக்கரம் இன்றி கைகளால் செய்யப்படும் மண்பாத்திரங்கள் பிரபலமானவை.

மணிப்புரியின் மற்றொரு பெருமை அரிய வகை பூக்கள். 120 வகை அரிய கண்கவர் பூக்களை மணிப்புரியில் மட்டுமே பார்க்க முடியும். ஏப்ரல், மே மாதங்களில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவில் மலர்கள் பூத்துக் குலுங்குவதை ரசிக்கலாம்.

இம்மாநிலத்தின் முக்கிய விலங்கு கொம்புடைய மான். சங்கை என்று அழைக்கப்படும் இவ்வகை மானும் அரிய இனம்தான்.

மணிப்புரியில் ஏரிகளும் பள்ளத்தாக்குகளும் அதிகம் உண்டு. நீர் நிரம்பிய ஏரிகளில் நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை பறவைகள் இனப் பெருக்கம் செய்ய வருகின்றன.


போலோ, மணிப்புரி ஹாக்கி, படகுப் பந்தயம், வில்வித்தை, குத்துச் சண்டை போன்ற விளையாட்டுகள் விளையாடப் படுகின்றன.

1971ஆம் ஆண்டு வரை மணிப்புரி மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சியில் இருந்தது. அதற்குப் பின் தனி மாநிலமாக விளங்குகிறது. இந்தியாவின் எல்லையிலுள்ள பாதுகாப்பு தொடர்பான முக்கிய மாநிலம் மணிப்புரி.

பழங்குடி மக்கள் அதிகமாக வாழும் மணிப்புரியில் நடனம், இசை, கைவினைப் பொருட்கள், நெசவு, விவசாயம் என அனைத்துக் கலைகளும் தொழில்களும் சிறப்புற்று விளங்குகின்றன.

அட்டையில் : சாரதா
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

வண்ண வாழ்த்து அட்டைகள்!



கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் எனப் பண்டிகைகள் வரிசையாக வர இருக்கின்றன. உங்கள் நண்பர்களுக்கும் உறவி னர்களுக்கும் வாழ்த்துச் சொல்ல விரும்புவீர்கள். வாழ்த்து அட் டையை நீங்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. கோகுலமே வாழ்த்து அட்டைகளை இலவசமாக நடுப் பக்கத்தில் வழங்கியுள்ளது. பத்திர மாக வெட்டி எடுத்து கவரில் போட்டு, ஸ்டாம்ப் ஒட்டி அனுப்பி விடுங்கள். என்ன மகிழ்ச்சிதானே!



நாரதர் கலகம்

'**நா**ரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பார்கள். ஒரு சமயம் அவர், தேவேந்திரனுடைய கர்வம் அடங்க ஒரு உபாயம் செய்தார். கண்ணன், ருக்மிணியுடன் இருந்த போது அவருக்கு தேவலோகத்துப் பாரிஜாத மலர் ஒன்றினைப் பரிசாக அளித்தார். கிருஷ்ணர் உடனே அதை ருக்மிணியின் தலையில் சூட்டி விட்டார்.

நாரதர் எதிர்பார்த்ததும் இதைத்தான். அவர் அடுத்தாற்போல் சத்யபாமாவின் மாளிகைக்குப் போய், "பாமா! உன்னிடம் கண்ணனுக்கு நிஜமான அன்பு இருந்தால் இப்படிச் செய்திருப்பாரா?" என்று ஆரம்பித்து, "தேவலோகத்துப் பாரிஜாத மலரை ருக்மிணிக்கு அல்லவா கொடுத்துவிட்டார்? உன் நினைவு அவருக்கு வரவே இல்லையே" என்று முடித்தார்!

சத்தியபாமாவுக்கு அவமானமாகப் போய் விட்டது. கண்ணன் தன் மாளிகைக்கு வந்தபோது, அழுது அடம் பிடித்தாள். கிருஷ்ணர், அவளைச் சமாதானப்படுத்த, "உனக்குப் பாரிஜாத மலர் என்ன, பாரிஜாத மரத்தையே கொண்டு வந்து தருகிறேன்" என்றார். அதே சமயம் கலகக்கார நாரதரும் அங்கு தலைகாட்டவே அவரிடம், "நாரதரே, தேவலோகத்துப் பாரிஜாத மரம் சில காலம் சத்யபாமாவின் தோட்டத்தில் இருக்கட்டும். இந்திரனிடம் சொல்லி அதை இங்கே கொண்டு வந்து நட ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

நாரதர், தமது திட்டம் நன்கு நிறைவேறுவதைக் கண்டு மகிழ்ந்து, மேலும் தந்திரமாகப் பேசினார். "கிருஷ்ணா! தேவேந்திரனும் இந்திராணியும் பாரிஜாத மரத்தின் மீது உயிரையே வைத்திருக்கிறார்கள். நீ கேட்டு, அவர்கள் 'இல்லை' என்று சொல்லி விட்டால் உனக்குத்தானே அவமானம்?" என்றார்.

கண்ணன் கோபத்துடன், "அப்படி இந்திரன் கூறினால், அவனைப் போரில் வென்று பாரிஜாத மரத்தைக் கொண்டு வருவேன்" என்றார்.

'கலகம் சூடு பிடித்தது' என்று மகிழ்ந்த நாரதர், இந்திரனுடைய அமராவதிப் பட்டணத்திற்குப் போய், அவனிடம் கண்ணனுடைய கருத்தை வெளியிட்டார். அவர் எதிர்பார்த்தது போலவே, இந்திரன் பாரிஜாத மரத்தைத் தர மறுத்துப் போருக்குத் தயாரானான்.

கண்ணனுக்கும் இந்திரனுக்கும் இடையே கடும் போர் நடந்தது. அப்போது கசியப மகரிஷி அந்தப் பக்கமாக வந்தார். இது தகாத யுத்தம் என்று உணர்ந்து, போரை நிறுத்துமாறு சொல்லி "என்ன நடந்தது?" என்று விசாரித்தார். விவரம் அறிந்ததும் கசியபருக்கு இந்திரன் மீது அசாத்தியக் கோபம் வந்தது. "இந்திரா! நரகாசுரன் தேவர்களைப் படாதபாடு படுத்தி வந்தான். அப்போது கண்ணன் தான், சத்தியபாமா தேரோட்டிவர, அவனுடன் யுத்தம் செய்து அழித்து உன்னையும் இதர தேவர்களையும் காப்பாற்றினார். அந்த நன்றியை மறக்கலாமா, நீ? சத்தியபாமாவின் தோட்டத்தில் சில காலம் பாரிஜாத மரம் இருந்தால் என்ன? ஏன் இப்படி முரண்டு பிடிக்கிறாய்?" என்று கடிந்து கொண்டார்.

இந்திரன் மனம் திருந்தி, வருந்தி மன்னிப்புக் கோரினான். "இந்திரா! உனக்குத் துக்கம் வரும்போது மட்டும்தான் பகவானின் நினைவு ஏற்படுகிறது; மற்ற சமயங்களில் அவரை மதிக்காமல், அவருடன் சண்டை போடவும் தயாராகி விடுகிறாய். இனிமேலாவது இப்படி நேராமல் பார்த்துக் கொள்" என்றார் கசியபர்.

— ஆசிரியர்

கதைகதையாம் காரணமாம்...

விழுங்காதே ஆபத்து!



பரிசு ரூ. 15/-

"NHO_3 என்பது என்ன?"

"அட, ஞாபகம் இருக்கு சார்... வாய்க்குள்ள இருந்துகிட்டு வரமாட்டேங்குது சார்..."

"ஐயோ, விழுங்கிடாதடா! ஆபத்து! அது நைட்ரிக் அமிலம்! துப்புடா...!"

— ராதை சு. சுந்தவேல்




பரிசு ரூ. 25/-


"மின்னலும், மின்சாரமும் ஒளியைத் தருது. ரெண்டுக்கும் என்ன வித்தியாசம்?"

"மின்சாரத்திற்குப் பணம் கட்டணும். மின்னலுக்கு வேண்டாம்...!"

— என். ஜரினா பானு

பரிசு ரூ. 50/-




பரிசு ரூ. 100/-
எப்பவும் துறுதுறுன்னு இருக்கற உங்க பையன், இப்பவெல்லாம் ரொம்ப அமைதியா இருக்கானே, ஏன்?
விலைவாசி அதிகமானதால வம்பைக் கூட விலை கொடுத்து வாங்க முடியலை யாம்!
— எம். வினோத்


பரிசு ரூ. 15/-
நாமெல்லாம் மனுஷனா பொறக்காம பறவையா பொறந்திருந்தா எப்படியிருக்கும்?
பெரிய வித்தியாசம் ஒண்ணுமில்லே; சாயந்திரம் ஆனா வீடு திரும்புறதுக்குப் பதிலா கூடு திரும்பிக்கிட்டிருப்போம்!
— டி. செல்வன்

மனித உடலில்...

மூளைக்கு

● நமது உறுப்புகளில் மிகப் பசியுள்ள உறுப்பு நம் மூளைதான். நமது மொத்த எடையில் 60ல் ஒரு பங்கே இருக்கும் நமது மூளை, நாம் உட்கொள்ளும் பிராண வாயுவில் ஐந்தில் ஒரு பங்கையும் முழு இரத்தத்தையும் பயன்படுத்திக் கொள்கிறது. இவற்றைத் தவிர நாம் சாப்பிடுவதில் ஐந்தில் ஒரு பங்கு கலோரியையும் எடுத்துக் கொள்கிறது!

● கண்ணின் விழித்திரையில் இருவகை ஒளியுணர் செல்கள் உள்ளன. மங்கிய ஒளியில் பார்க்க உதவும் செல்களுக்குக் கூம்புகள் என்று பெயர். 12 கோடியே 50 லட்சம் கூம்புகள் இப்படி உள்ளன. வண்ணங்களை அறிய உதவும் செல்களான கூம்புகளின் எண்ணிக்கை சுமார் 70 லட்சம்.

● மனித உடலில் இரத்தம் பாயாத ஒரே இடம் கண்ணிலுள்ள கருவிழிதான்.

● நமது உடலில் உள்ள தசைகளில் மிக அதிகமாக இயங்கக்கூடியது கண் தசைகள்தான். சாதாரணமாகப் படிக்கும், பார்க்கும் ஒரு மனிதனின் கண் தசைகள் ஒரு நாளைக்கு 1,00,000 தடவை இயங்குகின்றன. சாதாரண தசைநார்கள் எத்தனை உறுதியாக இருக்க வேண்டுமோ அதைப் போல் நூறு மடங்கு உறுதியானவை கண்ணிலுள்ள தசைகள்.

● நம்முடைய முகத்தில் இரு பக்கங்களும் ஒரே அளவான அமைப்பை உடையன என்று நம்பினால் அது தவறான எண்ணம். நம்முடைய கண்கள் இரண்டும் ஒரே நேர்க்கோட்டில் இல்லை. ஒரு கண் மற்ற கண்ணை விடச் சக்திவாய்ந்தது. வலக் காது, இடக்காதை விடச் சற்று உயரத்தில் இருக்கிறது.

● நாம் சிறு குழந்தையாக இருந்தபோது நம் காதில் சிறு ஒலிகள் கூட மிக நன்றாகக் கேட்கும். வளர வளர ஒலிகளைக் கேட்கும் சக்தி செவிக்குக் குறைந்து கொண்டே வருகிறது. இளமைப் பருவம் வந்ததும் மூன்றில் இரண்டு பங்கு ஒலிகளைக் கேட்க முடிகிறது. எண்பது வயதில் எட்டில் ஒரு பங்கு ஒலியைத்தான் கேட்க முடியும்.

● நம்முடைய காதுகளில் கேட்கும் திறன் ஒரே நாளில் நேரத்திற்கு ஏற்றவாறு மாறுபடுகிறது. மதிய வேளையில் சற்று மந்தமாகவும், விடிகாலை, இரவு நேரங்களில் மிகக் கூர்மையாகவும் நம் காதுகள் செயல்படுகின்றன.

● பற்களில் உள்ள எனாமல்தான் நம் உடலிலேயே எளிதில் தேயாத பொருள். நமது உடல் உறுப்புகளிலேயே சுயமாகத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள இயலாத திசுக்கள் பற்களில் உள்ள எனாமல்தான்.

● மனித மூக்குச் சாதாரணமாக இரண்டாயிரம் விதமான வாசனையை அறியும் சக்தி வாய்ந்தது. பழக்கப்படுத்தினால் இதை நான்காயிரமாக உயர்த்த முடியும்.

● நாம் உண்ணும் உணவின் சுவை அறிவதற்காக மட்டும் நம் நாக்கில் 3000 சுவை அறியும் நுண்ணிய திசுக்கள் உள்ளன.

● மனிதன் 60 வயதை எட்டிப் பிடிக்கும் போது 50 சதவிகித சுவை நரம்புகளையும், 40 சதவிகித நுகரும் சக்தியையும் இழந்து விடுகிறான்.

● மனித உடலிலேயே மிகக் குளிர்ச்சியான பாகம் மூக்கின் நுனிதான்.

● நமது தொண்டை ஏழு துவாரங்களின் சந்திப்பாகும். நடுச்செவிக்குழாய் துவாரங்



அதிகப் பசி!

கள் இரண்டு, மூக்குத் துவாரங்கள் இரண்டு, உணவுக்குழல், காற்றுக் குழல் மற்றும் வாய்த் துவாரங்கள் என ஆக மொத்தம் ஏழு.

● நமது உடலில் உள்ள ரத்த நாளங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்தால், அது ஒரு லட்சம் மைல் நீளம் கொண்டதாக இருக்கும்.

● நம் ரத்தத்தில் ஒவ்வொரு மணிக்கும் 8,000 சிவப்பு அணுக்கள் இறந்து அவற்றிற்குப் பதிலாகப் புது சிவப்பு அணுக்கள் தோன்றுகின்றன. ஒரு சிவப்பு அணுவின் ஆயுட்காலம் 127 நாட்கள்.

● நம் இதயம் ஒரு வருஷத்தில் 3 கோடியே 70 லட்சம் தடவை அடித்துக் கொள்கிறது.

● மனித இதயம் ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சம் காலன் ரத்தத்தை 'பம்ப்' செய்கிறது.

● இருபது வயதில் நம் இதயம் எவ்வளவு இரத்தத்தை வாங்கி வெளியேற்றுகிறதோ அதில் பாதியளவு இரத்தத்தையே நம்முடைய தொண்ணூறு வயதில் வாங்கி வெளியேற்றுகிறது.

● கால் விரல் நகங்களை விடக் கைவிரல் நகங்கள் நான்கு மடங்கு வேகத்தில் வளருகின்றன.



● சாதாரணமாக இடது கையைக் காட்டிலும் வலது கை நகங்களே வேகமாக வளருகின்றன. இடதுகைப் பழக்கம் உள்ளவர்களுக்கு மட்டும் இடது கை நகங்கள் வலது கையை விட வேகமாக வளருகின்றன.

● மனிதக் கைகள் 27 சின்னஞ்சிறு எலும்புகளால் உருவானவை. அதனால்தான் எல்லாப் பக்கமும் திருப்பியும் அசைத்தும் பயன்படுத்த முடிகிறது.

● மனித எலும்பு கான்கிரீட்டை விட 4 மடங்கு உறுதியானது. நம் எலும்பு கல் போன்ற கடினமான பொருள் என்றாலும் அதிலும் 22 சதவிகித நீர்ச்சத்து இருக்கிறது.

● மனித உடலில் உள்ள எலும்புகளில் தொடை எலும்புதான் மிக நீளமானது.

● நம் உடம்பில் இருக்கும் எலும்புகளில் மிகச் சிறியவை 0.25 செ.மீ. அளவுள்ள காதுகளின் உட்புறத்தில் அமைந்திருக்கின்ற எலும்புகள்தான்!

● சுவாசத்தின் எண்ணிக்கை வயதிற்குத் தக்கவாறு மாறுபாடு அடைகிறது. குழந்தைகளுக்கு இரண்டு வயது வரை சுவாசம் நிமிடத்திற்கு முப்பத்தைந்து தடவை நடைபெறும். இரண்டு முதல் ஆறு வயது வரை இருபத்தி மூன்று முறை நடைபெறும். ஆறு முதல் பன்னிரெண்டு வயது வரை இருபது தடவை நடைபெறும். பன்னிரெண்டு முதல் பதினைந்து வயது வரை பதினெட்டுத் தடவையும், அதற்கு மேல் பதினாறு தடவையும் நடைபெறும்.

● சிறுநீரகத்தில் ஒரு லட்சத்திற்கும் மேலான சிறு சிறு குழாய்கள் உள்ளன. இரு சிறுநீரகங்களிலும் உள்ள குழாய்களை இணைத்தால் சுமார் 40 மைல் நீளத்திற்கு வரும்.


● நாம் உட்கார்ந்து இருக்கும் போது உள்ள சத்தைப் போல் 8 மடங்கு காலரி அளவுச் சத்து நாம் நடக்கும்போது செலவிடப்படுகிறது.


● ஒவ்வொரு முறை நாம் ஒரு காலடி எடுத்து வைக்கும் போதும் நம் உடம்பில் 54 தசைகள் இயங்குகின்றன.

— ஏ.கே. நாசர்

பூதம் தந்த வரம்!


கதை : சூரியசக்கரதார்
படம் : முத்து





குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. இடம் விட்டு அசைய மாட்டான்; ஆனால் ஓடுவான் (5)
4. 'அழகி' என்பதை இப்படியும் கூறலாம் (2)
5. இனிமையாக இசை எழுப்பும் ஆண் பறவை (3)
6. ஹிமாசலப் பிரதேசத்தில் புகழ் பெற்ற சுற்றுலாதலம் (3)
7. தமிழ் மாதங்களில் ஒன்று (2)
11. கர்ணன் ______ வள்ளல் (2)
12. திமிங்கிலம் ______ வாழ் பிராணி (3)
15. அரண்மனையைச் சுற்றிப் பாதுகாப்பிற்காக இது எழுப்புவார்கள் (3)

வலமிருந்து இடம்

3. ஔவையார் முருகனிடம் பெற்றுக்கொண்ட பழம் (3)
9. பறவைகள், எறும்புகளின் உணவிற்காக வீட்டு வாசலில் போடப்படும் கலை (3)
10. தட்டானுக்கு இன்னொரு பெயர் (3)
13. வலிமை (3)
14. தாள்களை ஒட்டப் பயன்படுவது (2)
17. சேற்றில் பூக்கும் மலர் (5)

மேலிருந்து கீழ்

1. ______ சிறுத்தாலும் காரம் குறையாது (3)
2. திருடர்களிடமிருந்து நாய் நமது வீட்டைக் ______ காக்கும் (3)
3. மணிப்பூர், சிக்கிம், அருணாசலப் பிரதேசம் அருகில் உள்ள மாநிலம் (5)
6. முத்து இதிலிருந்து கிடைக்கிறது (3)
9. ______ இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் (3)
11. முற்றி உலர்ந்த தேங்காய் (4)

கீழிருந்து மேல்

8. மலை உச்சி (4)
15. பண்டிகைகளைச் சந்தோஷமாகவும் விமரிசையாகவும் கொண்டாடுவதை இப்படியும் கூறலாம் (5)
16. கோடையில் நா வறட்சி ஏற்பட்டு ______ எடுக்கும் (3)
17. நியூஸ் (3)


- எஸ். வெண்மணி,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மே.நி.பள்ளி, தர்மபுரி

விடை 64 ஆம் பக்கம்

ராமசாமி கொஞ்சம் ஷோக்குப் பேர்வழி. வேலை செய்யாவிட்டாலும் மற்றவர்களை வேலை வாங்கத் தெரிந்தவன். அவன் திறமையைப் புரிந்து கொள்ளாத அவன் அப்பா, அவனை விவசாய கூலி வேலைக்குப் போகும்படி சொன்னார். அவன் மறுத்ததால் "வீட்டை விட்டு வெளியே போ" என்று சொல்லி விட்டார். அவனும் அப்பர்விடம் "பணக்காரனாகிக் காட்டுகிறேன்" என்று சபதம் செய்துவிட்டு வந்துவிட்டான்.

நேரம் ஆகிவிட்டபடியால் ராமசாமிக்குத் தூக்கம் வந்துவிட்டது. வழியிலிருந்த

குதிரை போட்ட தங்கக் காசுகள்!



சுமைதாங்கிக் கல்லின் மேல் ஏறிப் படுத்தான். களைப்பில் அயர்ந்து தூங்கிவிட்டான். விடிந்தபோது தன் உடம்பெங்கும் கொசுக்களும் சிறு வண்டுகளும் கடிப்பதை உணர்ந்தான். பட்பட்டென்று இரண்டு கைகளாலும் தன் உடம்பில் அடித்துக்கொண்டான். கைகளை உதறிப் பார்த்தபோது எட்டு வண்டுகள் செத்து விழுந்ததைக் கண்டான். சிறிது நேரத்தில் அந்த வழியே காட்டில் விறகு வெட்டுவோர் போக ஆரம்பித்தனர். ராமசாமி சத்தமாகச் சொன்னான்:

"ஒரே அடியில் எட்டுப் பேர் கொலை."

வழியில் செல்வோர் இதைக் கேட்டதும் என்ன ஏதென்று ராமசாமியை விசாரித்தனர்.

"நான்தான். ஒரு அடி போட்டேன். எட்டு பேர் செத்தார்கள்."

கேள்வி கேட்டவர்கள் மிரண்டு போய், ஒருவித அச்சத்துடன் ராமசாமியைப் பார்த்து பயந்து வேகமாக நடையைக் கட்டினார்கள்.

அந்தக் காட்டின் எல்லையிலே முனியம்மா என்ற கிழவி தேனீர் கடை நடத்திக்

எஸ். துர்கா காத்யாயனி

கொண்டிருந்தாள். வழிப்போக்கர்கள் பேசிக் கொண்டு போவதை அவளும் கேட்டாள்.

சில சமயங்களில் ஒரு சிலர் வந்து சாப்பிட்டுவிட்டுக் காசு தராமல் போவதுடன் இருக்கும் காசையும் பிடுங்கிக் கொண்டு போய் விடுவார்கள். அவர்களிடமிருந்து தப்பிக்க தன் கடைக்கு இப்படியொரு அடியாள் தேவை என்று நினைத்தாள் கிழவி. உடனே கிளம்பிச் சென்று ராமசாமியைச் சந்தித்தாள்.

மூன்று வேளை சாப்பாடு, மாதம் பத்து ரூபாய் சம்பளம். கூடவே தங்கிக் கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் கிழவியின் உதவியாளாகச் சேர்ந்து கொண்டான் ராமசாமி.

வீட்டுக்கு வந்ததும் கிழவி கேட்டாள்:


"தம்பி, உன் பேர் என்ன?"

"என் பெயர் போன வருஷம்" என்றான் ராமசாமி.

"என்னது போன வருஷமா? இப்படியும் ஒரு பேரா?" என்று வியந்தாள் கிழவி.

"எங்கள் தாத்தாவுக்குச் சரியாகக் காது கேட்காது. நான் பிறந்தவுடன் என்ன பெயர் வைக்கலாமென்று அவரைக் கேட்டபொழுது 'எப்போ காசிக்குப் போனீங்க?' என்று கேட்கறதா நினைச்சு 'போன வருஷம்' என்றார். பெரியவர் சொன்னதால் எனக்குப் 'போன வருஷம்'ன்னு பேரு வைச்சிட்டாங்க"

ராமசாமியின் பதிலில் கிழவி நம்பிக்கை வைத்தாள். கிழவிக்கு வியாபாரம் நன்றாக நடந்தது. கிழவியின் நடவடிக்கைகளை ராமசாமி கூர்ந்து கவனித்தான். கிழவி செலவுக்குப் போக மிஞ்சும் லாபத்தையெல்லாம் தங்கக் காசுகளாக்கி ஒளித்து வைத்தாள். மிகவும் கஷ்டப்பட்டு தங்கக் காசுகள் வைக்கு



மிடத்தைக் கண்டுபிடித்தான் ராமசாமி. அதைத் திருடிக்கொண்டு போக திட்டமிட்டான்.

ஒருநாள் ராமசாமியைக் கடையில் நிறுத்திவிட்டு அருகிலிருந்த ஊருக்குப் பொருட்கள் வாங்கச் சென்றாள் கிழவி. கிழவி சென்றபின் தங்கக் காசுகளையெல்லாம் ஒரு துணியில் கொட்டி, கட்டிக்கொண்டு கம்பி நீட்டி விட்டான் ராமசாமி.

கடைக்குப் போன கிழவி திரும்பி வந்தாள். ராமசாமியைத் தேடினாள். அவனைக் காணவில்லை என்றதும் கிழவிக்குச் சந்தேகம் ஏற்பட்டது. தங்கக் காசுகள் ஒளித்து வைத்திருந்த இடத்திற்குச் சென்று பார்த்தாள். காசுகளைக் காணவில்லை. கிழவி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள். வழிபோக்கர்களும், கடைக்குச் சாப்பிட வந்தவர்களும் கிழவியை விசாரித்தனர்.

"பதற்றப்படாதே பாட்டி! எப்ப தொலைஞ்சது? யார் எடுத்தா? சொல்லு கண்டு பிடிச்சிருவோம்" என்றார் ஒருவர்.

"காலைலதான் களவு போயிருக்கு. போன வருஷம்தான் திருடிட்டுப் போயிருக்கான்" என்றாள் கிழவி.

திரும்பத் திரும்ப காலையில் களவு போனது. போன வருஷம் திருடினான் என்று கிழவி சொன்னதைக் கேட்ட மற்றவர்கள் பணம் தொலைந்த அதிர்ச்சியில் கிழவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்து, தங்கள் வேலைகளைப் பார்க்கப் போய்விட்டார்கள். கிழவி மட்டும் புலம்பியபடியே இருந்தாள். கடைசியில் தன்னை ஏமாற்றியவனிடமிருந்து தங்கக் காசுகளைத் திரும்பவும் பிடுங்கிவிடுவேன் என்று சபதம் செய்து கடையைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள் கிழவி.

ராமசாமி தங்கக் காசு பொட்டலத்தைத் தலையில் வைத்துக்கொண்டு வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தான். வழியில் ஒரு கரடி அவனைக் கொல்ல வந்தது. ராமசாமி சுதாரித்துக்கொண்டு அந்தக் கரடியின் முன்னங்கால்கள் இரண்டையும் பிடித்துக் கொண்டான். அதற்குள் தலையிலிருந்த மூட்டை கீழே விழுந்துவிட்டது. காசுகள் சிதறிவிட்டன. 'கிழவியை ஏமாற்றிவிட்டுக் கரடியிடம் மாட்டிக் கொண்டோமே' என்று தவித்தான் ராமசாமி.

அப்பொழுது அந்த வழியே வீரன் ஒருவன் குதிரையில் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் ராமசாமி அவனைப் பார்க்காதவனைப் போல் முகத்தில் புன்னகையைத் தவழ விட்டபடி "இன்னும் போடு, இன்னும் போடு" என்று சொல்ல ஆரம்பித்தான். அதைக் கண்ட குதிரை வீரன் ஆச்சர்யப்பட்டு விசாரித்தான்.

"இது ஒரு அதிசயக் கரடி. இதன் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு 'இன்னும் போடு, இன்னும் போடு' என்று கெஞ்சினால் ஒரு மணிக்கு ஒரு தங்கக் காசு கொடுக்கும். நானும் இவ்வளவு நேரம் போராடி கொஞ்சம் காசு சேர்த்திருக்கிறேன்" என்றான் ராமசாமி.

"கரடி காசு கொடுக்குமா? எங்கே, எனக்குக் காட்டு" என்றான் குதிரை வீரன்.

"அடடா, இப்போதுதான் ஒரு காசு போட்டது. அடுத்த காசு வர இன்னும் ஒரு மணி நேரம் காத்திருப்பாயா?"

"சரி."


"அப்படியென்றால் ஒரு உதவி செய். சிறிது நேரம் இந்தக் கரடியை பிடித்துக் கொள். நான் இதுவரை கரடி போட்ட காசுகளை எல்லாம் தனியாக எடுத்து கட்டி வைத்துவிட்டு வருகிறேன். இல்லாவிட்டால் நானே பொற்காசுகளைப் போட்டதாகச் சொல்லுவாய்"

"சரி" என்று சொல்லிவிட்டுக் குதிரை வீரன் குதிரையிலிருந்து இறங்கி கரடியைப் பிடித்துக்கொண்டான். ராமசாமி முகத்தில்

பள்ளி வாசல்

உலகின் முதல் பள்ளிவாசலை முகமது நபிதான் கட்டினார். மெதினாவிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள 'குபா' என்ற இடத்தில் கட்டினார். அது மண்ணாலும் பேரீச்சமர ஓலைகளாலும் கட்டப்பட்டது. அப்போது 4200 ச.அ பரப்பில் கட்டப்பட்ட பள்ளிவாசலுக்கு 3 வாசல்கள் இருந்தன. இன்று புதிப்பிக்கப்பட்ட இப்பள்ளிவாசல் 10327 ச.அடியில் 16 வாசல்களுடன் உள்ளது. ஒரே நேரத்தில் ஒன்றரை லட்சம் பேர் தொழுகை நடத்தலாம்.

- பா. டால்மியா,
ஆறாம் வகுப்பு, மேலச்சீத்தை
இராமநாதபுரம் மாவட்டம்.



மகிழ்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் காசுகளைப் பொறுக்கி பொட்டல மாகக் கட்டிக்கொண்டு சரேலென குதிரை மீது தாவி ஏறித் தப்பித்தான். தான் ஏமாற்றப்பட்டதை அப்போது தான் உணர்ந்தான் குதிரை வீரன். ராமசாமியைத் தேடிக் கொண்டு கிழவி அங்கு வந்து சேர்ந்தாள். ராமசாமியின் அடையாளங்களைச் சொல்லி "இப்படி ஒரு மனிதனை இந்தப் பக்கம் பார்த்தாயா?" என்று கேட்டாள். தான் ஏமாற்றப்பட்டதை குதிரை வீரன் சோகத்தோடு சொன்னான்.

"அவன் உன்னையும் ஏமாற்றி விட்டானா?"

"அப்படியானால்...?"

"ஆமாம் என்னையும் ஏமாற்றி விட்டான்" என்ற கிழவி தான் ஏமாந்த கதையைச் சொன்னாள்.

"அவனைச் சும்மா விடக் கூடாது. முதலில் இந்தக் கரடியிடம் இருந்து தப்பிக்க வேண்டும். என் இடுப்பில் இருக்கும் கயிற்றை எடுத்து கரடியின் கழுத்தில் கட்டுங்கள்" என்றான் குதிரை வீரன்.

கிழவி அவ்வாறே செய்ய, கரடியை ஒரு மரத்தில் கட்டிவிட்டு இருவரும் தப்பிச் சென்றனர்.



அதற்குள் ராமசாமி அருகிலிருக்கும் நகரத்தை அடைந்துவிட்டான். அந்த ஊரில் இருக்கும் பணக்காரர் வீட்டில் இரவு தங்க இடம் கேட்டான். அவர் மறுத்துவிட்டார்.

ஒரு இரவு தங்குவதற்கு மட்டும் பத்து பொற்காசு தருவதாக ஆசைக்காட்டினான் ராமசாமி.

ராமசாமிக்கு ஒரு அறையை ஒழித்துக் கொடுத்து தங்கச் சொன்னார் வீட்டுக்காரர்.

குதிரையை வாசலில் இருந்த மரத்தில் கட்டிவிட்டுப் படுத்துத் தூங்கினான் ராமசாமி. விடிகாலையில் எழுந்து கையில் சில பொற் காசுகளை எடுத்து சத்தமில்லாமல் வெளியே வந்து குதிரையின் சாணத்தின் உள்ளே சொருகிவிட்டு ஓசையின்றி வந்து படுத்துக்கொண்டான் ராமசாமி.

விடிந்தது. வீட்டுக்கார அம்மாள் வாசல் தெளிக்க வெளியே வந்தாள். முதலில் குதிரையின் சாணத்தை விளக்குமாற்றால் தள்ளினாள். உள்ளேயிருந்து பொற் காசுகள் உருண்டோடின. ஆச்சர்யப்பட்ட வீட்டுக்காரி கையால் கிளறி, கிளறி பொறகாசுகளைப் பொறுக்கினாள். முப்பது பொற்காசுகள் கிடைத்தன. சாணியை அள்ளி கொல்லையில் போட்டுவிட்டு வாசலைப் பெருக்க ஆரம்பித்தாள் வீட்டுக்காரி. அதுவரை பொறுமையாக இருந்த ராமசாமி மெள்ள எழுந்து வந்தான். "சாணத்தை அள்ளியது யார்?" என்று அதிகாரமாகக் கேட்டான்.

"நான்தான். ஏன் கேட்கிறாய்?" என்றாள் வீட்டுக்காரி.

"அதிலிருந்த தங்கக் காசுகளை என்ன செய்தீர்கள்?"

"பொற்காசுமில்லை, ஒண்ணுமில்லை."

"ஒரு இரவு இங்கு தங்கதான் பத்து பொற் காசுகளே ஒழிய என் குதிரையின் சாணத் திலிருந்து பொற்காசுகளை எடுத்துக்கொள்ள நான் வாடகை பேசவில்லை."

"குதிரையின் சாணத்திலிருந்து பொற் காசுகளா?..."

"ஆமாம். இது ஒரு அதிசயக் குதிரை. அதிகாலை நேரத்தில் இது இடும் சாணத் திலிருந்து பொற்காசுகள் கிடைக்கும். ஒரு இரவுக்குப் பத்து பொற்காசுகள் என நான் பணத்தைத் தண்ணீராகச் செலவழிப்பது எப்

படியாம்? என் வருமானமே இந்தக் குதிரை தான்''

வீட்டுக்காரியிடமிருந்து பொற்காசுகளைப் பறித்துக்கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றான் ராமசாமி.

அந்தக் குதிரையை எப்படியும் வாங்கி விட வேண்டும் என்று திட்டமிட்டாள் வீட்டுக்காரி. உடனடியாகத் தன் கணவரை எழுப்பி, விஷயத்தைச் சொன்னாள். அவரும் எழுந்து போய் ராமசாமியிடம் பேச ஆரம்பித்தார்.

''ஐயா என் பிழைப்பில் மண்ணைப் போட்டு விடாதீர்கள். நான் செல்வச் செழிப்போடு நிம்மதியாக இருப்பதே அந்தக் குதிரையால்தான். அதை விற்பதாக இல்லை.'' இரு கைகளையும் எடுத்து கும்பிட்டான் ராமசாமி. வீட்டுக்காரர் விடவில்லை.

''நீ என்ன விலை சொன்னாலும் நான் தருகிறேன். தயவு செய்து அந்தக் குதிரையை எனக்குக் கொடுத்து விடு'' என்று கெஞ்சினார் வீட்டுக்காரர். சிறிது நேரம் மாட்டேன் என பிகு செய்தான் ராமசாமி. கடைசியாக ''சரி, நீங்க ரொம்பக் கெஞ்சறதாலே உங்களுக்கு விற்கிறேன். விலையாக ஐந்தாயிரம் பொற்காசுகள் கொடுத்து விடுங்கள்.''

''ஐந்தாயிரமா! ரொம்ப அதிகமாச்சே'' என்றார் வீட்டுக்காரர்.

''கொள்ளைப் போட்டு பொற்காசுகளை அள்ளப் போறீங்க. அப்புறம் ஏன் யோசிக்கிறீங்க? நான் வேறாளுக்கு இன்னும் அதிக விலைக்கு விற்று விடுவேன்'' என்றான் ராமசாமி.

''சரி, நீங்க கேட்டதைக் கொடுக்கிறேன். ஆனால் எங்கிட்ட மூவாயிரம் பொற்காசுகள் தானிருக்கு. மீதி இரண்டாயிரம் பொற்காசுகளுக்குத் தங்க நகைகளாகக் கொடுத்து விடட்டுமா?''

''தாராளமாகக் கொடுங்கள்'' என்றான் ராமசாமி.

அவரிடமிருந்து நகைகளையும் பொற்காசுகளையும் வாங்கிக்கொண்டான். கிழவியின் பொற்காசுகளுடன் மற்ற பொற்காசுகளையும் சேர்த்து ஒரு மூட்டையாகவும் தங்க நகைகளை ஒரு மூட்டையாகவும் கட்டிக்கொண்டு கிளம்பினான்.

வீட்டுக்காரரும் அன்று முழுவதும் குதிரைக்கு அருகிலே இருந்து நன்றாகக் கவனித்துக் கொண்டார். மறுநாள் காலையில் ஆவலோடு குதிரையின் சாணத்தைக் கிளறிப் பார்த்தார். பொற்காசுகள் கிடைக்கவில்லை. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார். அப்பொழுது அங்கே கிழவியும் குதிரை வீரனும் வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்காரரிடம் விவரம் கேட்டார்கள். அவர் சொன்னதிலிருந்து அவரை ஏமாற்றியது ராமசாமிதான் என்று தெரிந்துகொண்டார்கள்.

ராமசாமி அன்று முழுவதும் நடந்து இரவில் ஒரு கல்யாண மண்டபத்தை அடைந்தான். கல்யாண மண்டபத்திற்குள் தாராளமாக நுழைந்தான். 'நீ யார்?' என்று கேட்டவர்களிடம் ஆளுக்குத் தக்கபடி பதில் சொன்னான். கடைசியாக மணப்பெண்ணின் அப்பா அவனை விசாரித்தார். தன் பெயர் மாப்பிள்ளை என்றும் மணமகனுக்குச் சொந்தம் என்றும் சொல்லிக்கொண்டான்.

இரவு எல்லோரும் உறங்கியதும் மெள்ள மணமகளின் அறைக்குச் சென்றான். தூங்கிக் கொண்டிருந்த மணமகளை எழுப்பினான். மணமகள் உடலெங்கும் நகைகள் அணிந்திருந்தாள். அவளிடம் தான் கொண்டு வந்திருந்த நகைகளையும் காண்பித்தான். ''இவ்வளவும் உனக்குத் தான்; என்னைக் கல்யாணம் பண்ணி கொள்கிறாயா?'' என்றான்.

ஏற்கெனவே அந்தப் பெண்ணுக்கு அவள் அப்பா பார்த்திருந்த மணமகனைப் பிடிக்கவில்லை. எனவே ராமசாமி கேட்டதும் உடனே 'சரி' என்று சொல்லிவிட்டாள்.

இருவரும் வெளியே வந்தனர். வாசலில் நின்றிருந்த ஒரு குதிரையை அவிழ்த்து மணப்பெண்ணை அதில் ஏற்றி அவனும் ஏறி சிட்டாய்ப் பறந்தான். மறுநாள் காலை, கல்யாண சத்திரத்தில்

முதன் முதலில்...

- முதன்முதலில் தாடி வளர்ப்பதற்கு வரி விதித்தவர் முதலாம் எலிசபெத் ராணி.
- நாளிதழ்களுடன் இலவச இணைப்பை வெளியிட்ட முதல் பத்திரிகை 'நியூயார்க் டைம்ஸ்'
- பாரதியார் தமது இலக்கிய வாழ்வில் முதலில் வைத்துக் கொண்ட



புனைப்பெயர் 'ஷெல்லிதாசன்'.

● காவல்துறையில் முதன்முதலில் பெண்களைச் சேர்த்த நாடு பிரிட்டன்.

- கிரிஜாராணி, எட்டாம் வகுப்பு.
ஸ்ரீ சேதுமாணிக்கம் பள்ளி,மேலச்சீத்தை

மணமகளைக் காணாமல் ஒரே கலாட்டா. மணமகளின் அப்பா மட்டும் அங்கு ராமசாமி இல்லாததைக் கவனித்துவிட்டார்.

"என் பெண்ணை மாப்பிள்ளைதான் கூட்டிக் கொண்டு போயிருக்கான்" என்று கத்தினார்.

"நல்லவேளை! வேறு அசம்பாவிதம் ஒன்றும் நடக்கவில்லை. மாப்பிள்ளைதான் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறாராம்" என்று சிலரும், "'தாலி கட்டிய பிறகு பெண்ணை அழைத்துக்கொண்டு போனால் என்ன?" என்று பலரும் மணமகளின் அப்பாவைச் சமாதானம் செய்தனர்.

இப்படியாக அங்கே சண்டை நடந்து கொண்டிருக்கும்போது கிழவியும், குதிரை வீரனும், வீட்டுக்காரரும் வந்து சேர்ந்தார்கள். நடந்ததைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். மணப்பெண்ணைக் கடத்திப் போனது ராமசாமிதான் என்று உறுதி செய்தார்கள். பின்னர் ராமசாமியைத் தேடி நான்கு பேரும் புறப்பட்டார்கள்.

ராமசாமி வளவனூரில் வியாபாரம் ஆரம்பித்தான். வாய் சாமர்த்தியத்தினால் வியாபாரம் செழித்தது. விரைவிலேயே அந்த ஊரில் விரல் விட்டு எண்ணக்கூடிய பெரிய பணக்காரர்களில் ஒருவனானான். அதனால் அரசரின் நட்பும் அவனுக்குக் கிடைத்தது.

நால்வரும் ஊர் ஊராக ராமசாமியைத் தேடி அலைந்தார்கள். கடைசியாக வளவனூரில் ராமசாமியைக் கண்டுபிடித்தார்கள்.

கடையில் உட்கார்ந்திருந்த ராமசாமியை ஓடிப்போய் பிடித்துக்கொண்டார்கள்.

அவர்கள் அனைவரையும் தன் வீட்டிற்கு அழைத்துப்போனான் ராமசாமி.

தன் மனைவியிடம் சிறிது நேரம் ஏதோ பேசினான். பின்னர் "சரி எல்லோருக்கும் சாப்பாடு போடு" என்றான். ஆனால் அவளோ ஒரு பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு வந்து தன் தந்தையிடம் கொடுத்தாள்.

"இவர் உங்களை ஏமாற்றி என்னைத் திருமணம் செய்துகொண்டது உண்மைதான். ஆனால் நீங்கள் எனக்குப் பார்த்த மணமகனைவிட இவர் பணக்காரர், திறமையானவர். என்னை ஒரு அரசியைப் போல் வைத்திருக்கிறார். நான் விதவை ஆக வேண்டும் என்று நினைத்தால் இந்தக் கத்தியால் அவரைக் கொன்று உங்கள் கோபத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

அப்பாவுக்கு மனம் இளகிவிட்டது.


"எப்படியோ நீ நன்றாய் இருந்தால் சரிதான். மருமகனை நான் மன்னித்து விட்டேன்" என்று சொல்லி மகளின் பக்கம் போய் நின்று கொண்டார். "என்னிடம் கொள்ளையடித்த பணத்திற்கு வழி சொல்?" என்றாள் கிழவி.

உடனே உள்ளே சென்று ஒரு மூட்டையை எடுத்து வந்து கொடுத்தான்.

"இந்த வயசான காலத்திலே ஏன் தனியா காட்டோரத்துல கிடந்து கஷ்டப்படுறீங்க? உங்களுக்கு இந்த ஊரிலே ஒரு கடை வைச்சு தரேன்" என்று ராமசாமி சொன்னதும் "என்ன தங்கமான பிள்ளை" என்று சொல்லி கிழவி ராமசாமியை வாழ்த்தினாள்.

குதிரை வீரனுக்கு ஒரு குதிரைக்குப் பதிலாக இரண்டு குதிரைகள் கொடுத்தான். மேலும் அரசரிடம் சொல்லி அவனுக்கு ஒரு வேலை வாங்கித் தருவதாக உறுதியளித்தான். அவனும் ராமசாமியை வாழ்த்தினான். "வேலையில்லாமல் சும்மா ஊர் சுத்திட்டு இருந்தேன். எனக்கு அரசாங்க வேலை வாங்கிக் கொடுத்த நீங்க என் அண்ணன் மாதிரி" என்று கும்பிட்டான். வீட்டுக்காரருக்கு அவருடைய நகைகளை எல்லாம் திருப்பிக் கொடுத்தான். அவர் இந்த ஊரிலே வியாபாரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் போவதாக உறுதியளித்தான். அவரும் மனமகிழ்ந்து அவனை மன்னித்தார்.

ராமசாமியும் தான் வாக்குக் கொடுத்த அனைத்தையும் செய்து முடித்தான். எல்லோரும் அவன் நண்பர்களாயினர். ஊரிலிருந்து தன் பெற்றோரை வர வழைத்து தன்னோடு வைத்துக்கொண்டான். இப்பொழுதெல்லாம் அவன் தந்தை அவனைப் பற்றிச் சொல்லும்பொழுது "வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" என்கிறார்.



விடுகதைப் பக்கம்!

I) 1. தொட்டால் சுருங்கிக்குத் தொண்ணூறு கால்! - அது என்ன?

2. திங்க முடியாத பழம் - என்ன பழம்?

3. தலையில்லை, இடையில்லை, கையுண்டு, விரல் இல்லை! - அது என்ன?

4. வாய் இல்லாத பறவை ஊர் ஊராய்ப் பறக்கிறது! - அது என்ன?

5. ஒன்பது பிள்ளைக்கு ஒரு குடுமி! - அது என்ன?

6. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு! - அது என்ன?

7. கத்திரியின்றி இலையை வெட்டித் தள்ளும் - அது என்ன?

8. கொளுத்திய பின் கோடி கும்பிடு! - அது என்ன?

9. கூடவே வரும் உதவி செய்யாது! - அது என்ன?

- பா. இலக்கியா,
பட்டுக்கோட்டை.

செய்யாத குடத்தில் சுவையான நீர்!

II) 1) செய்யாத குடத்தில் சுவையான நீர் இருக்கு - அது என்ன?

2) சிகப்பு தம்பி தண்ணீர் குடித்தான்; கண நேரத்தில் கறுப்பாய் போனான் - அது என்ன?

3) நெருப்பில் எரித்தேன்; நீரில் நனைத்தேன். நிறம் மாறவே இல்லை - அது என்ன?

- பாசு. தமிழடியான்,
சர்க்கார் கொல்லப்பட்டி.

III) 1) பறிக்கப் பறிக்கப் பெரிதாகிறது - அது என்ன?

2) நிலத்திலே முளைக்காத செடி; நிமிர்ந்து நிற்காத செடி — அது என்ன?

3) பாலாற்றில் கறுப்பு மீன் மேயுது - அது என்ன?

4) போருக்குப் போகாத வீரன், போர்க் களத்தையே விரட்டிடுவான் - அவன் யார்?

5) நூறு கடையை மூடினால் ஒரு கடை - அது என்ன?

6) தண்ணியில்லாக் குட்டையிலே தத்தளிக்குது கெண்டை மீன் - அது என்ன?

- இரா. விக்னிஷா,
இடையர்காடு.

IV) 1) அரங்கன் வயிற்றுக்குள் ஆயிரம் பொருட்கள்! - அவன் யார்?

2) அடிக்காமல் திட்டாமல் கண்ணீரை வரவழைப்பான்! - அவன் யார்?

3) அடிக்கடி காலை வாரி விடுவான் - அவன் யார்?

4) அடித்தால் மட்டும் கண்ணீர் வடிப்பான்! - அவன் யார்?

5) அசைவு நோய் வந்த கன்றுக்குட்டி ஆகாரமே சாப்பிடாது! - அது என்ன?

6) அநேக நாடுகள் செல்வான்; ஆனால் நாட்டுக்குள் செல்ல மாட்டான்! - அவன் யார்?

- இரா. ரெங்கசாமி,
வடுகப்பட்டி.

விடைகள்: *I)* 1. மரவட்டை, 2. ஞானப்பழம், 3. சட்டை, 4. விமானம், 5. வெள்ளைப்பூண்டு, 6. இரத்தம், 7. வெட்டுக்கிளி, 8. கற்பூரம், 9. நிழல்

II) 1) இளநீர், 2) நெருப்புக்கட்டி, 3) தங்கம்

III) 1) குழி, 2) தலைமுடி 3) கண் - கருவிழி, 4) பாம்பு, 5) புத்தகம், 6) நாக்கு.

IV) 1) கடல், 2) வெங்காயம் 3) பாசி, 4) போரிங் குழாய் 5) கடிகாரப் பெண்டுலம், 6) கப்பல்

ஆடுகிறான் கண்ணன் ஆடுகிறான்...

ஆர்.பி. சாரதி

ஆடுகிறான் கண்ணன் ஆடுகிறான்,
ஆனந்தம் பொங்கிட ஆடுகிறான்;
ஓடுகிறான் அரவம் மீதினிலே,
உதைத்து, மிதித்து ஆடுகிறான்.

காளிங்கன் தலையினில் கால்வைத்தே,
குதித்துக் குதித்து ஆடுகிறான்;
வாலினைப் பற்றி வலித்தேதான்
வளைத்து வளைந்தே ஆடுகிறான்.


ஆற்றில் நஞ்சைக் கக்கியவன்,
காற்றை நெருப்பாய் ஆக்கியவன்,
சுற்றுப் புறத்துச் சோலையெல்லாம்
சுட்டு எரித்த கொலைகாரன்.

கண்ணை மூடிக் கண்ணனுமே
களைத்தவன் போலக் காட்டுகிறான்;
விண்ணைத் தொட்டுக் குதித்தெழுந்து
'விர்'ரென அவன் மேல் விழுகின்றான்.

காலில் வீழ்ந்தான் காளிங்கன்,
கருணை பொழிந்தான் கண்ணபிரான்;
வாலைச் சுற்றி வைத்தபடி
விரைந்தான் வேறு கடலடிக்கே.

"வேண்டாம், கண்ணா, வந்துவிடு"
என்றே வேண்டி யழைத்தவரும்
கொண்டார் பெருமிதம் களிப்புடனே
கண்ணன் வெற்றி கண்டவுடன்.

கூடினர் அனைவரும் கரையினிலே,
கொஞ்சினர் கண்ணனைப் பரவசத்தில்,
பாடினர், ஆடினர் கோபியரும்
போற்றினர் கண்ணன் புகழினையே!




பிறர் கடிதத்தைப் படிக்கலாமா?

கடிதமும் பாடமும்

ஒரு நாள் எங்கள் வகுப்பாசிரியருக்கு அவரது நண்பர் ஒருவர் தபால் அட்டையில் கடிதம் எழுதியிருந்தார். அதை போஸ்ட்மேன் பள்ளி வாட்ச்மேனிடம் கொடுத்தார். வாட்ச்மேன் ஒரு மாணவனிடம் கொடுத்து ஆசிரியரிடம் கொடுக்கச் சொல்ல, அவன் அந்தக் கடிதத்தைப் படித்தவாறே வந்து அவரிடம் கொடுத்தான். அவனிடம் ஆசிரியர், ''பிறர் கடிதங்களைப் படிக்கக் கூடாது. அது நல்ல பழக்கமோ, நாகரிகமோ கிடையாது'' என்று அறிவுரை வழங்கினார். மறுநாள் அம் மாணவன், ஆசிரியர் படித்து வரச் சொன்ன பாடத்தைப் படிக்காமல் வரவே அவனை விசாரித்தார் ஆசிரியர். ''பிறர் கடிதத்தைப் படிப்பது தவறு என்று கூறியிருக்கிறீர்களே. அதனால் தான் நான் படிக்கவில்லை'' என்றான். ''அதற்கும் நீ பாடத்தைப் படிக்காததற்கும் என்ன சம்பந்தம்?'' என்று ஆசிரியர் கேட்டார். ''நீங்கள் படித்து வரச் சொன்னது 'அறிஞர் அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதம்' எனும் பாடத்தைத்தானே, அதான் படிக்கவில்லை'' என்று அவன் கூறியதும் வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்



உதாரணம்

எங்கள் தமிழ் ஆசிரியர் தமிழ் எழுத்துகளின் உருவமும் பருவமும் பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ''ஏதாவது உதாரண எழுத்துகளைச் சொல்ல முடியுமா?'' என்று எங்களைக் கேட்டார். உடனே ஒரு மாணவன் எழுந்து ''குண்டு 'ல' வாழைப்பழ 'ழ', ஒத்தைக் கொம்பு, இரட்டைக் கொம்பு'' என்று அடுக்கிக் கொண்டே போக வகுப்பே சிரிப்பலையில் மிதந்தது.



- க. ரவி, ஏழாம் வகுப்பு,
ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை,
இராமநாதபுரம் மாவட்டம்.


ஷூ போட்டு வா

எங்கள் வகுப்பில் ஒரு மாணவன் 'ஷூ' போட்டு வந்திருந்தான். அவனது ஷூவைக் கழற்றச் சொன்ன ஆசிரியர் ''வீட்டுக்குப் போகும்போது மறக்காமல்



போட்டுப் போ'' என்று சொன்னார். அவன் செல்லும்போது 'ஷூ'வை மறந்துவிட்டுப் போய்விட்டான். மறுநாள் இது பற்றி அவனிடம் கேட்டபோது ''நீங்க தானே சார் போகும்போது ஷூவைப் போட்டுப் போகச் சொன்னீங்க. அதுதான் போட்டுட்டுப் போயிட்டேன்'' என்றான். அதைக் கேட்ட அனைவரும் சிரித்தோம்.

- மு. பிரிதிவிராஜன்,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை



யார்?

தமிழாசிரியர் ''அறிஞர் அண்ணாதுரையைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அதைக் கவனிக்காமல் ஒரு மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி ''அண்ணா யார்?'' என்று கேட்டார். அதற்கு அம்மாணவன் ''என்னைவிட 2 வயசு அல்லது 3 வயசு மூத்தவங்கதான் சார் அண்ணா'' என்று சொன்னான். ஆசிரியர் உட்பட எல்லாரும் சிரித்துவிட்டோம்.

- சி. இராஜசேகரன்,
இராஜபாளையம்

ஏன்?

எங்கள் தமிழாசிரியர் கோவலன் கண்ணகி பற்றிய கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவர் ''கோவலனுக்கு அப்பெயர் ஏன் வந்தது தெரியுமா?'' என்றார். நாங்கள் தெரியாது என கோரஸ் பாட எங்கள் ஆசிரியர் ''அவன் கண்ணகியை விட்டுப் போனதால் (go = கோ) அப்பெயர் வந்தது'' என்றார். அவரது சிலேடை பேச்சைக் கேட்டு மகிழ்ந்



தோம்.

- கி. புனிதாராணி,
ஏழாம் வகுப்பு,
இராமநாதபுரம்


பேனா

எங்கள் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவன் அடிக்கடி எதுகை மோனையில் பேசுவான். அவனிடம் ஒரு நாள் நான் எழுதுவற்கு பேனா கேட்டேன். அதற்கு அவன் ''நீ கேட்டால் தராமல் இருப்'பேனா'' என்று சொல்லித் தந்தான். அவனிடம் பேனாவைத் திருப்பிக் கொடுக்கும் போது 'மை' முழுவதும்

எங்கள் பள்ளியில் நடந்தது

தீர்ந்து போனதால் மை நிரப்பிக் கொடுத்தேன். கவனித்த அவனிடம், ''மையை நான் காலியாக்கியதால் அதை நிரப்பித் தருவது என் கட'மை'' என்று நான் கூற அவன் சிரித்துக் கொண்டே வாங்கினான்.

- பேச்சி, விருதுநகர் மாவட்டம்



6. மாலா தேடிய மாயப் பெண்

கதை: விஜி
படம்: சேகர்




மாயக்காரி எங்கு வேண்டுமானாலும் இருப்பாள். சரியாகச் சொல்ல முடியாது. ம்... அமாவாசை வர்றதுனால கிழக்கில் இருக்கும் கோட்டையில்தான் வசிப்பாள் என்று நினைக்கிறேன்.
நன்றி வருகிறேன்.
கிழக்கு நோக்கி நடந்த மாலா, மிகவும் களைப்புற்று ஒரு மரத்தடியில் அமர்ந்தாள்.
சே! அமாவாசைக்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் உள்ளன. இன்னும் இந்த மாயக்காரியைக் கண்டு பிடிக்க முடியலையே!


என்னை நம்பி மூன்று பேர் விடுதலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வேன்?
மாலா கண் அயர்ந்தாள்.
ஹா...ஹா... ஹா...ஹா...
திடுக்கிட்டுக் கண் விழித்தாள் மாலா.
ம்... யாருமே இல்லையே. கனவு கண்டிருக்கேன் போலிருக்கு.


மீண்டும் தூங்கினாள்.
ஹா...ஹா...ஹா...
ஹி...ஹி...ஹி...
ஹஹஹஹா...
இது கனவு இல்லை. பூமி அதிர சிரிப்பது யார்? மந்திரகலாவோ?
ஹா....ஹா....ஹா....
ஹி...ஹி...ஹி...
ஹூ...ஹூ...ஹூ....
மாலா வில்லை எடுத்துக் கொண்டு தயாரானாள்.
தொடரும்

தேவலோகப் பயிர்!

நெல், உலகிலுள்ள முக்கியமான பயிர்களில் ஒன்றாகும். மேலுறை நீக்கப்பட்ட நெல்தான் 'அரிசி' எனப்படுகிறது. உலகிலுள்ள பாதி மக்கள் அரிசியையே உணவாகக் கொள்கின்றனர். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் முக்கிய உணவு அரிசிதான். உலகிலுள்ள மக்களில் மூன்றில் ஒருவர், அரிசியைத் தினமும் ஏதோ ஒரு வடிவில் உட்கொள்கிறார்கள். 10 கோடி மக்களின் வாழ்க்கை நெல்லைச் சார்ந்தே உள்ளது.

அரிசி போஷாக்கு மிகுந்த தானியமாகும். அரிசியில் 92 சதம் மாவுப் பொருள், 7 சதம் புரதம், கொஞ்சம் கொழுப்பு, தாது உப்புகள் மற்றும் வைட்டமின்கள் உள்ளன. சிவப்பு மற்றும் கறுப்பு அரிசியில், அதன் மெல்லிய உறையில் புரதம், கொழுப்பு, கால்சியம், பாஸ்பரஸ் போன்றவை உள்ளன. சிவப்பு அல்லது கறுப்பு நிறம் போகுமாறு அரிசியைச் சுத்தப்படுத்தி விட்டால், அதிலுள்ள தாது உப்புகளும் வைட்டமின்களும் போய்விடும்.

நெல்லின் வரலாறு 13 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது. எல்லா தாவரங்களையும் போலவே நெல்லும் காட்டுத் தானியமாகவே துவக்கத்தில் இருந்தது. பின்னரே வயல்களில் பயிரிடப்பட்டது. தொல்பொருள் ஆய்வுகளின்படி, நெல் தாய்லாந்தில் கி.மு. 3500களிலும், சீனாவில் கி.மு. 3000த்திலும், இந்தியாவில் கி.மு. 2500களிலும் பயன்பட்டது தெரிய வந்துள்ளது. நெல்லில் ஆசிய இனம், ஆப்பிரிக்க இனம் என இருவகை இருப்பினும், ஆசிய இன நெல்லே பரவலாக உலகமெங்கும் பயிரிடப்படுகிறது.

உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நெல் பயிரிடப்பட்டாலும், 94 சதம் நெல் இந்தியா, பங்களாதேஷ், சீனா, ஜப்பான், கொரியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, தென் வியட்நாம், கம்போடியா, இலங்கை போன்ற கீழை நாடுகளிலேயே பயிரிடப்படுகிறது. மேலும் பிரேசில், அமெரிக்கா, எகிப்து, மேற்கு ஆப்பிரிக்கா, ஸ்பெயின், இத்தாலி போன்ற











எஸ். மோகனா

நாடுகளும் நெல்லை விளைவிக்கின்றன.

நெல்லின் பிறப்பு பற்றி சுவையான கதைகள் பல உண்டு. தேவலோகத்தில் பறந்து சென்ற ஓர் அன்னம், சூரிய பெண் கடவுளான அமத்ரிசூ ஓமிகாமியிடம் சில நெல் தானியங்களைத் தந்தது. அமத்ரிசூ இவற்றை விதைத்து பயிரிட்டார். பின்னர் அவர் இவற்றை இளவரசி நினிகியிடம் அன்பளிப்பாகத் தந்ததுடன், பூமியிலுள்ள எட்டுத் தீவுகளுக்கு, குறிப்பாக ஜப்பானுக்கு எடுத்துச் செல்லுமாறு ஆணையிட்டார். இப்படித்தான் நெல் தேவலோகத்திலிருந்து பூவுலகிற்கு வந்ததாகப் புராணக் கதை சொல்லுகிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் இதைவிட உருக்கமான கதை ஒன்று உண்டு. அம்மாவை இழந்த 'அக்மே' என்ற சிறுமி, மலையருவி அருகே சோகமாக அமர்ந்திருந்தாள். அவள் அப்பா ஒரு கொடூர எஜமானனிடம் அடிமைப்பட்டிருந்தார். அக்மே அப்பாவின் துன்பத்தை நினைத்து கண்ணீர் வடித்தாள். அப்போது மலை ஓடையில் ஒரு தங்கப்பெட்டி மிதந்து வந்தது. அக்மே அதனை எடுத்து திறந்து பார்த்தபோது, அதில் 'ஒரு தங்க நெல் மணி' இருந்தது. அதனை எடுத்து ஓடையின் அருகில் நட்டாள். அதிலிருந்து தங்க நெற்கதிர்கள் விளைந்தன. அக்மே அவற்றை விதைத்து, விளைவித்து, அவளின் குடிசை நிறைய தங்க நெல் தானியங்களை நிறைத்தாள். அதன் மூலம் தந்தையைக் கடனிலிருந்து மீட்டு, சுதந்திர மனிதனாக்கினாள்.

அருணாசலப் பிரதேசத்திலுள்ள ஒரு கோவிலில், ஒரு மலைவாழ் பெண்தான் முதல் விவசாயி என்று சொல்லப்பட்டு, அவளின் உருவம் கோவிலில் வரையப்பட்டுள்ளது. இந்து புராணப்படி விஷ்ணு, மழைக்கடவுளான இந்திரனிடம் நெல் விவசாயம் செய்வது பற்றி பூவுலக



மக்களுக்குச் சொல்லித் தரச் சொன்னாராம்.

புத்த கலாசாரத்தில் அரிசி முக்கிய பொருளாக இருந்தது. கௌதம புத்தரின் தந்தையின் பெயர் சுத்தோதனர். சுத்தோதனர் என்பதற்கு 'சுத்தமான அரிசி' என்று பொருளாம். புத்தர் போதி மரத்தின் கீழ் அமர்ந்து, தியானம் செய்து, ஞானம் பெற்ற பின், காட்டில் வசித்த ஒரு பெண்மணி கொண்டு வந்த அரிசிக் கஞ்சியைக் குடித்தாராம். பின் புத்த மதம் பக்கத்து நாடுகளான பர்மா, இந்தோனேசியா, தாய்லாந்து, சீனா, ஜப்பான், கொரியா போன்றவற்றிற்குப் பரவிய போது, நெல் விவசாயமும் அங்கெல்லாம் பரவியது.


சீனாவில் பாரம்பரிய வழக்கம் ஒன்று உண்டு. சீனத் தலைநகரான பெய்ஜிங்கிற்குத் தெற்கே தேவலோகக் கோவில் ஒன்று உள்ளது. அங்கு பல நூற்றாண்டுகளாக விவசாயத் திருவிழா நடைபெறுகிறது. இதில் சீனப் பேரரசர், விவசாயி போல் உடையணிந்து வந்து, வாத்தியங்கள் முழங்க, புனித வயலில் ஏர் கலப்பை கொண்டு, 3 ஆழமான கோடுகள் போடுவார். அதன் பின்னரே மக்கள் வயலில் விவசாயம் செய்வார்கள். பழங்காலத்தில் நாடுகளை இணைக்க சாலைகள் இல்லாததால் நெல், கடல் வாணிபம், போர் வீரர்கள் மற்றும் பயணிகள் மூலமே பரவியது. அதுவரை மக்கள் நெல்லைப் பார்த்திராததால், தங்கத்தையும், வெள்ளியையும் கொடுத்து, நெல்லைப் பண்டமாற்றுப் பொருளாகப் பெற்றனர்.

நெல் பற்றி பைபிளிலோ, எகிப்திய பதிவேடுகளிலோ காணப்படவில்லை. நைல் நதிப் பள்ளத்தாக்கிலும்கூட கி.பி 639ல், அலெக்சாண்டர் வந்து திரும்பிய பின்னரே நெல் பயிரிடப்பட்டது. அராபிய வணிகத்தினர் நெல்லை ஈரான், எகிப்து நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.

அமெரிக்காவுக்கு கி.பி 1609ல் தான் நெல்லின் அறிமுகம் கிடைத்தது. இந்தியாவில் எந்த ஒரு மதச் சடங்கும், விழாவும் அரிசி இன்றி நடப்பதில்லை.

அரிசியின் நிறத்துக்குக்கூட கதை உண்டு. இந்தோனீசியாவில் பாதாரா சிவாக் கடவுள் சில தானியங்களை ஒரு பறவையிடம் கொடுத்து பூமிக்குக் கொண்டு போகச் சொன்னார். பறவை அவற்றைப் பார்த்தபோது, அதில் கறுப்பு, வெள்ளை, மஞ்சள், சிவப்பு நிற நெல்மணிகள் இருந்தன. பறவை அவற்றைச் சுமந்து பறந்து சென்றபோது, அதற்குப் பசி எடுத்தது. எனவே மஞ்சள் நிற நெல்லை மட்டும் தின்றுவிட்டு, மீதியை வயல்களில் போட்டது. அவைதான் சிவப்பு, வெள்ளை, கறுப்புத் தோல் உள்ள அரிசிகளாயின.

நெல், புல் வகையைச் சேர்ந்த தாவர இனம். சதுப்பு நிலத்தில் வளரும். உயரம் 2-6 அடி வரை இருக்கும். சில வகைகள் இதைவிட உயரமாகவும் இருக்கும். ஒரு தண்டில் 10-20 கணுக்கள் வரை இருக்கும். கணுக்களின் இடைப்பட்ட பகுதி கூடாக இருக்கும். நெல்லில் தன் மகரந்த சேர்க்கையே நடைபெறுகிறது. இதன் பூக்கள் கொத்து, கொத்தாய் இருக்கும். நெல் ஒரு விதையிலைத் தாவரமாகையால், நெல் பூவுக்குள் ஒரே ஒரு அரிசிதான் இருக்கும். நெல் பல்வேறு வகைப்பட்ட தன்மை, நிறம், உருவம் மற்றும் அளவுகளில் உண்டு. அரிசியின் நிறமே தாத்தையும், குணத்தையும் நிர்ணயிக்கிறது. சிவப்பு அரிசி மட்டமான அரிசி எனக் கருதப்பட்டாலும், அதில்தான் சத்துகள் உள்ளன. நெல்லில் வாசனையுள்ள பாஸ்மதி போன்றவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. பொதுவாக நெல் 80-200 நாட்களில் வளரும். 1965லிருந்து நெல்லில் வீரிய ஒட்டு ரகங்கள் வந்துவிட்டன. இவை குறைந்த காலத்தில் நிறைய மகசூல் தரவல்லவை. இதனால் நம் நாட்டின் உணவு உற்பத்தி அதிகரிக்கும்; மக்கள் பசியிலிருந்து மீள வழி காட்டும்.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

அழகான தோட்ட வீடு!


அழகான அந்த வெள்ளை முயல் தன் தோட்ட வீட்டில் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. தோட்ட வீடு என்றால் அந்த வீட்டைச் சுற்றி சாதாரண தோட்டம் இல்லை. அழகழகாப் பூத்துக் குலுங்கும் மலர்ச்செடிகள், குலைகளைச் சுமந்து நிற்கும் வாழை மரங்கள், கேரட், உருளைக் கிழங்கு போன்ற காய்கறிச் செடிகள், திராட்சைக் கொடிகள், கொய்யா, முருங்கை, தென்னை மரங்கள்... எந்த மிருகம் அந்தப் பக்கம் வந்தாலும் முயலின் தோட்ட வீட்டைப் பார்த்து ஒரு நிமிடம் நின்று அதை வியப்போடு ரசித்து விட்டுத் தான் செல்லும். முயலும் அதன் குடும்பத்தினரும் சந்தோஷமாகத் தோட்ட வீட்டின் தோட்டத்தில் பாடுபட்டனர்.

பக்கத்து காட்டிலிருந்து அக் காட்டிற்கு நரி குடும்பத்தோடு வந்தது. ஒருநாள் காலை நேரத்தில் முயலின் தோட்ட வீட்டு வழியே சென்ற நரி தோட்டத்தின் அழகைப் பார்த்து அப்படியே மெய் மறந்து நின்றுவிட்டது. பந்தலில் தொங்கும் பன்னீர் திராட்சைக் கொத்தைப் பார்த்ததும் அதன் வாயில் உமிழ் நீர் ஊறியது... தினம் தினம் அந்தவழியே சென்று முயலை சிநேகம் பிடித்துக்கொண்டது. அது கொடுத்த திராட்சைப் பழங்களை "ஆஹா அருமை" என்று புகழ்ந்து கொண்டே தின்றது. நாட்கள் செல்லச் செல்ல முயலின் தோட்ட வீட்டைத் தானே அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது நரிக்கு.

ஒருநாள் நரி வேண்டும் என்றே முயலிடம் "இந்தத் தோட்ட வீட்டை விற்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். நீ விலைக்கு விற்றால் எனக்கே கொடுத்து விடு. நான் வாங்கிக் கொள்ள ரெடியா இருக்கேன்" என்றது.

இதைக் கேட்ட முயல், "நான் விற்பதாக யாரிடமும் சொல்லவில்லை. அப்படி விற்கும் நிலை ஏற்பட்டால் உனக்கே தருகிறேன். இப்போது நான் வேண்டுமானால் உனக்குக் கொஞ்சம் விதைகள், கன்றுகள் எல்லாம் தருகிறேன்; உன் வீட்டைச் சுற்றி நட்டு, பாடு பட்டால் இந்த மாதிரி அழகான தோட்டத்தை உன்னாலும் உண்டாக்க முடியும்" என்றது.

நரிக்கு வேலை செய்ய சோம்பல். என்றைக்கு விதை போட்டு,



என்றைக்கு முளைத்து, என்றைக்கு அவை பெரிதாக வளர்ந்து... என்றைக்குப் பலன் தரப் போகின்றன...?


பெருமூச்சு ஒன்றை வெளியிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றது.

தன் வீட்டிற்கு வந்த நரி தன் மூத்த மகனிடம் முயலின் தோட்ட வீட்டைப் பற்றி, அது தன்னிடம் பேசியது பற்றி எல்லாம் சொன்னது. "அப்பா! நாளைக்கு நான் இந்த காட்டோட கிழக்குப் பகுதிக்கு வேலைக்குப் போகப் போறேன். அங்கே நிறைய கூலி தர்றாங்களாம். அங்கேயே ஒரு வருஷம் தங்கி வேலை செய்து நிறைய சம்பாதித்துக் கொண்டு வரேன். முயல் அங்கிள் தோட்ட வீட்டை விற்றால் அதை வாங்க நம்மிடம் பணம் வேண்டாமா?" என்றது நரி மகன்.

எட்டு மாதங்கள் உருண்டோடி விட்டன. அன்று தோட்ட வீட்டிற்குச் சென்ற போது முயல், "நரியாரே! இது விதை இல்லாத புது வகை திராட்சை. சாப்பிட்டுப் பாருங்க" என்று கொடுத்தது. விரும்பிச் சாப்பிட்ட நரியால் பழத்தின் சுவையை, இனிப்பை மறக்க முடியவில்லை. மறு நாளே விடியற்காலையில் முயல் வீட்டிற்குச் சென்று தான் கொண்டு வந்திருந்த ஏணியை முள்வேலி மேல் வைத்து தோட்டத்திற்குள் புகுந்தது. திராட்சைப் பழங்களைப் பறித்து தான் கொண்டு வந்திருந்த பைக்குள் போட்டுக் கொண்டு சத்தம் செய்யாமல்

த. ஜானகி





"நீச்சல் தெரியாத ஒருத்தன் குளத்துல விழுந்தும் முழுகாமல் இருக்கணும்னா என்ன பண்ணணும்?"

"குளத்துல தண்ணி இல்லாமல் இருக்கணும்!"

- சீர்காழி வி.ரேவதி

கிளம்பியது. வீட்டிற்குச் சென்று ருசித்து ரசித்துச் சாப்பிட்டது. மறுநாளும் அவ்வாறே செய்தது. பழங்களோடு காய்கறிகளையும் திருடியது. இவ்வாறு அடிக்கடி செய்ய ஆரம்பித்தது.

முயலுக்குக் கோபம் தாங்கவில்லை.

"என் தோட்டத்தில் அடிக்கடி திருட்டுப் போகிறது. யார் எடுக்கிறார்கள் என்றே தெரியவில்லை. அந்தத் திருடனுக்கு ஒரு வழி செய்கிறேன் பார்" என்று கத்தியபடி நிறைய முட்களைத் தோட்டம் எங்கும் போட்டது.

மறுநாள் விடியற்காலையில் பெரிய சாக்குடன் வந்திருந்த நரி, தோட்டத்திற்குள் நுழைந்ததும் முள் அதன் கால்களில் குத்தின. தடுமாறி விழுந்தது. உடல் எங்கும் வலி தாங்க முடியவில்லை. சத்தம் போட்டால் மாட்டிக் கொள்வோம் என்று அஞ்சியது. எப்படியோ கஷ்டப்பட்டு வேதனையோடு தன் இருப்பிடத்தை அடைந்தது. வலியின் கொடுமையை நரியால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. அலறியபடி வைத்தியர் கரடியின் வீட்டிற்குச் சென்றது.

நரியை நன்கு பரிசோதித்த கரடி, "நாலு காலிலும், உடம்பிலும் நிறைய முள் குத்தியிருக்கு. நான் தர்ற மருந்தை உடம்பு முழுவதும் தடவிக் கொண்டு மாத்திரையை விடாமல் சாப்பிடு. வீட்டை விட்டு அசையாமல், எங்கும் நடக்காமல் இரு. நான் சொன்ன மாதிரி செய்யலே, நீ செத்துப் போயிடுவே" என்று எச்சரித்து அனுப்பியது.

மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. நரிக்குப் பழையபடி நன்றாக நடக்க முடிந்தது. முள்ளைப் போட்டு தனக்கு வைத்தியச் செலவு வைத்த, முயல் மீது அதற்குக் கோபம் கோபமாக வந்தது. எப்படியாவது முயலைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று பொருமியது.

மறுவாரம் டிப்டாப்பாக டிரஸ் செய்து கொண்டு தோட்ட வீட்டிற்குச் சென்றது நரி.

"ஹி...ஹி... முக்கிய வேலையாக அடுத்த காட்டிற்குப் போயிருந்தேன். அதனாலதான் என்னால உன்னை வந்து பார்க்க முடியலே" என்று பொய் சொல்லி இளித்த நரியை முயல் வரவேற்றது.

அந்தச் சமயம் வீட்டிற்கு வெளியே ஆடு ஒன்று கூப்பிடவே, முயல் வெளியே சென்றது.

"இந்தா நீ கேட்ட விதைகள். இன்னிக்குக் குடும்பத்தோட கிளம்பறேன். வருகிற ஞாயிற்றுக்கிழமைதான் வருவேன்" - முயல் பேசியது நரியின் காதில் தெளிவாக விழுந்தது. 'இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறோடு ஞாயிறு எட்டு நாள்.ம்... முயல் திரும்பி வர இன்னும் ஒரு வாரம் ஆகும். அது திரும்பி வருவதற்குள் முயலின் தோட்டத்தை அழித்து விட வேண்டும்.'

நரியின் மூளையில் சதி திட்டம் உருவானது.

அன்று இரவே பெருச்சாளியின் வீட்டிற்குச் சென்றது. "நாளை விடியற்காலை நீ என் வீட்டிற்கு வர்றே. ஒரு அண்டா நிறைய வெந்நீர் தயாராக இருக்கும். நீயும் நானும் முயலின் தோட்ட வீட்டிற்கு வெந்நீரை எடுத்துச் செல்கிறோம். நீ தோட்டத்திற்குள் சென்று மரம், செடி, கொடிகளின் வேர்ப்பக்கம் வரை மண்ணைத் தோண்டி அதில் வெந்நீரை ஊற்ற வேண்டும். இதேமாதிரி ஒரு வாரம் செய்ய வேண்டும்" என்று நரி உத்தரவிட்டது. முதலில் பெருச்சாளி மறுத்தாலும் நரி கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு யோசித்தபடியே சம்மதம் தெரிவித்தது.

மறுநாள் விடியற்காலை கொதிக்கும் அண்டா நீரை, தூக்க முடியாமல் தூக்கிச் சென்றது நரி. "நீ வெளியே காவல் காத்துக்

கொண்டிரு. நான் உள்ளே போய், நீ சொன்னபடி செய்யறேன். காலையிலே நீ ஒருமுறை என்னோட வருவதோடு சரி. அப்புறம் இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காதே. முயல் ஒரு பறவையைக் காவலுக்கு வைத்திருக்கிறது. சரியா சூரியன் உதிக்கும் போது அந்தப் பறவை இங்கே வரும். ராத்திரிதான் தன் வீட்டுக்குப் போகும்" என்று பெருச்சாளி கூறவே நரியும் சம்மதம் தெரிவித்தது.

நரி காவல் காக்க, பெருச்சாளி உள்ளே வேலை செய்ய, சூரியன் உதிக்கும் சமயத்தில் இரண்டும் அவ்விடத்தை விட்டு மாயமாய் மறைந்தன. இவ்வாறே ஒரு வாரம் இரண்டும் சேர்ந்து செய்தன. வெந்நீர் ஊற்றியதால் சிறிய செடி கொடிகள், பூச்செடிகள் எல்லாம் அழிந்து விட்டன என்றும் பெரிய செடிகள் வாடிக் கொண்டிருக்கின்றன என்றும் நாலு மரங்களை வெட்டிவிட்டேன் என்றும் சனிக்கிழமை பெருச்சாளி சொன்னபோது நரிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. முயல் தான் மட்டும் வரவில்லை. நரியின் மகன் குட்டி நரியையும் அழைத்துக் கொண்டு தன் தோட்ட வீட்டிற்குக் கூடப் போகாமல் நரியின் இருப்பிடத்திற்கே நேரில் வந்தது. குட்டி நரி தன் தந்தையைப் பார்த்து, "அப்பா... நீங்க ஆசைப்பட்டபடி இந்த முயல் அங்கிளோட அழகான, பசுமையான தோட்ட வீட்டை நமக்குச் சொந்தமாக வாங்கி விட்டேன். நாம இனிமேல் அதில்தான் வசிக்கப் போகிறோம்" என்று மகிழ்ச்சியோடு கூறியது.

"என்ன?" அதிர்ச்சியில் அப்படியே உறைந்து நின்றது நரி.

"ஆமாம்! உன் மகன் சொல்றது அத்தனையும் உண்மைதான். போன வருஷம் உன் மகன் என்கிட்டே வந்து காட்டின் கிழக்குப் பகுதிக்குப் போய் சம்பாதிக்கப் போவதாகச் சொன்னான். உனக்கு என்னோட வீடு ரொம்பப் பிடிச்சிருக்குன்னு எனக்குத் தெரியும். அதனால நான் என்ன சொன்னேன் தெரியுமா?"



என்றது முயல்.

உடனே குட்டி நரி, ''நானே சொல்லிடறேனே'' என்று கூறிவிட்டு சொல்ல ஆரம்பித்தது :

''கிழக்குப் பகுதியிலே என்னோட முயல் இனத்துக்காரங்க நிறையப் பேர் இருக்காங்க. எனக்கும் அங்கேயே வசிக்கணும்னு ஆசை. அதனால நீ வேலை பார்த்துக் கொண்டே அதே இடத்திலே இதே மாதிரி தோட்ட வீடு அமையும் இடத்தைத் தேர்ந்தெடு. நான் தரும் விதைகளை, கொடுத்தனுப்பும் கன்றுகளை, பதியன்களை, நட்டுப் பாடு பட்டுவா. பயிர்கள் எல்லாம் உயிர் பெற்று வளர ஆரம்பித்ததும் என்னிடம் வா. நான் இங்கு இருக்கும் என்னோட தோட்ட வீட்டை உன் அப்பாவிற்குக் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பதிலாக கிழக்குப் பகுதியில் நீ உண்டாக்கியிருக்கும் தோட்ட வீட்டை நான் எடுத்துக் கொள்கிறேன், என்று முயல் அங்கிள் சொன்னார். அவர் சொன்னபடியே செய்தேன். போன ஞாயிற்றுக்கிழமைதான் புறா மூலம் செய்தி அனுப்பி குடும்பத்தோடு வரச் சொன்னேன்.'' குட்டி நரி சொல்லி முடிக்கவும் -

முயல் மேற்கொண்டு கூற ஆரம்பித்தது:

'''சொத்தைப் பல்' என்ற தலைப்பிலே கதை எழுதி பத்திரிகைக்கு அனுப்பியிருந்தியே பிரசுரமாயிடுச்சா?''

'''சொதப்பல்'ன்னு சொல்லி திருப்பி அனுப்பிட்டாங்க!''


- ச. ஜெய கவிதா, திருத்தங்கல்



''புறா மூலம் எல்லாவற்றையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டேன். அதனால அன்றைக்கே என் குடும்பத்தோடு கிழக்குப் பகுதிக்குக் கிளம்பிச் சென்று விட்டேன். எங்க எல்லோருக்கும் அந்தத் தோட்ட வீடு பிடித்திருக்கிறது. நாங்க இன்னும் பாடு பட்டு இன்னும்கூட அதை அழகாக, பசுமையாக மாற்றப் போகிறோம். 'என் அப்பாவிடம் முன்பே இந்த விஷயத்தைச் சொல்லாதீர்கள். எல்லாம் நல்லபடியாக முடிந்த பின்பு எதிர்பாராமல் விஷயத்தைச் சொல்லி அவரை திடீரென்று வியப்பில் ஆழ்த்த வேண்டும்' என்று உன் மகன் கேட்டுக் கொண்டதால்தான் நான் உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. இதோ என் வீட்டின் சாவி. இனி இது உன் வீட்டுச் சாவி. உன் மகன் சொன்னபடி நீ மகிழ்ச்சியால் அப்படியே பேசக் கூட முடியாதபடி பூரித்துப்போய் நிக்கறே. வரட்டுமா?''.

முயல் விடை பெற்றுக் கொண்டு சென்றது. பதில் கூட சொல்ல முடியாமல் நரி சிலை போல் நின்றது. எத்தனை நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தது என்று அதற்கே தெரியாது. தன்னை யாரோ தொட்டு உலுக்குவது போல் தோன்றவே நிமிர்ந்து பார்த்தது. அங்கே பெருச்சாளி நின்று கொண்டிருந்தது.

''எந்த பசுமையான அழகான தோட்ட வீட்டைப் பார்த்து ஆசைப் பட்டாயோ அந்த வீடு இப்போது அந்த மாதிரி இல்லை என்று நினைக்கும்போது உன் மனத்திற்கு எத்தனை வருத்தமாக இருக்கிறது. அப்படித்தானே முயலுக்கும் இருந்திருக்கும். இந்த ஒன்றை மட்டும் மறக்காதே. அழிக்கறது சுலபம். ஆக்கறது கஷ்டம். மரம் செடிகளை அழிப்பது எளிது. நட்டு, பயிர் செய்து வளர்ப்பது அவ்வளவு சுலபம் அல்ல. உனக்குப் புத்தி வர வேண்டும் என்றுதான் தோட்ட வீட்டை அழித்துக் கொண்டிருப்பதாகப் பொய் சொன்னேன். ஆனால் உண்மையில் வெந்நீரை நான் செடிகளுக்கு ஊற்றவில்லை. மரம், செடி, கொடிகளை அழிக்க எண்ணாதே. அவை நமது செல்வம்'' பெருச்சாளி கூறியதைக் கேட்ட நரி மீண்டும் சிலையாகியது. ஆனால் இம்முறை மகிழ்ச்சியில்.



அரச பதவி யாருக்கு?
வேணுவாரியத்
ஜாய் தாமஸ்
மகதாவை நந்தவர்மன் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரே வயதில் மூன்று மகன்கள். ஒரு நாள் -
இந்த மூவரில ஒருவனை அரசா னாகக வேண்டும். ஆனால்... யாரை அரசனாக்குவது?
விரைவில் இளவரசர்களின் பிறந்த நாள் வர இருந்தது. மூவரையும் அழைத்தா அரசா.
உங்களுக்கு என் னுடைய சிறிய பரிசு.
என்ன இது?
இது செப்புக்காசு. என் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.
செப்புக்காசா?
சரி.
ஆமாம். இதைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்.


பிறகு -
இந்தச் செப்புக்காசை எப்படி பாதுகாப்பது?
இப்பொழுதெல்லாம் செப்புக்காசுக்கு மதிப்பே கிடையாது.
மூன்றாவது இளவரசன் மட்டும் -
இந்தச் செப்புக்காசு மிகவும் மதிப் புடையது.
பிறந்த நாள் நெருங்கியது.
நாளை நம்முடைய பிறந்த நாள்.
ஆமாம். 25 வயதாகிறது.
மறுநாள் இளவரசர்களை அழைத்தார் அரசர்.
நான் கொடுத்த பரிசுப் பொருள் எங்கே?
என்ன பரிசு?
செப்புக் காசுகளைக் கொடுத்தேனே.


நான் கொடுத்த செப்புக் காசுகளைக் கொடுத்தால் மிக உயர்ந்த பரிசினைத் தருவேன்.
ஐயோ! அந்தச் செப்புக்காசைத் தொலைத்து விட்டேன்.
ஆமாம். நானும் தொலைத்துவிட்டேன். வேறு காசு தரலாமா?
என்ன, இருவரும் தொலைத்து விட்டீர்களா?
மூன்றாவது இளவரசன் -
நான் பத்திரமா வைத்திருக்கிறேன்.
இதோ நீங்கள் கொடுத்த செப்புக்காசு.
என்ன?
உன்னை நினைத்து பெருமைப்படுகிறேன். நீதான் நாட்டை ஆளத் தகுதி வாய்ந்தவன். ஒரு செப்புக்காசைப் பாதுகாக்காதவர்களால் நாட்டை எப்படி காப்பாற்ற முடியும்?
மூன்றாவது இளவரசனுக்கு முடி சூட்டப்பட்டது


கிறிஸ்துமஸ் ஸ்டார் தொங்கவிடுவது ஏன்?

* கிறிஸ்துமஸ் விழாவில் மெழுகு வர்த்திகள் கொளுத்தி வைப்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி. விருந்தினர்களை வரவேற்கும் ஒரு சின்னமாக மெழுகுவர்த்தி கருதப்படுகிறது. வீட்டு ஜன்னலில் மெழுகு வர்த்தி இருப்பதைப் பார்த்ததும், அந்த



வீட்டில் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதை அறிந்து கொள்வார்கள். அன்று வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கும், வழிப் போக்கர்களுக்கும் விருந்து அளிப்பார்கள்.

* கிறிஸ்துமஸ் மரம் வைத்துக் கொண்டாடும் வழக்கம் முதலில் ஜெர்மனியில் தான் ஏற்பட்டது. அங்கிருந்த வியாபாரிகள் மூலம் இங்கிலாந்துக்குப் பரவியது. இங்கிலாந்தில் இந்த வழக்கத்தைப் பரப்பியவர், ஆல்பர்ட் இளவரசர். இவர் தன் குழந்தைகளுக்காக 1841-ல் அரண்மனையில் ஒரு கிறிஸ்துமஸ் மரத்தை வைத்து, அதில் பரிசுப் பொருட்களைத் தொங்கவிட்டார். மரத்தைச் சுற்றிலும் மெழுகு வர்த்திகளை ஏற்றி, அலங்காரமும் செய்தார். அப்பழக்கம் இன்னும் தொடர்கிறது.



* கிறிஸ்துமஸ் விழாவில் வீட்டு முகப்பில் நட்சத்திரக் கூண்டுகளை உள்ளே ஒளி விளக்குகளுடன் தொங்கவிடுவதைக் காணலாம். இயேசு பிறந்த சமயம், அவரைத் தரிசிக்க வந்த ஞானியர் மூவருக்கு வழிகாட்டி வந்த வால் நட்சத்திரம் 'பெத்லேகம்' சிற்றூரை அடுத்த மாட்டுத் தொழு




வத்திற்கு நேராக வந்து நின்றது. மூவரும் அங்கு சென்று பார்க்கவே, இயேசு பிறந்திருப்பதைக் கண்டு இன்புற்றனர் என்பது வரலாறு. இவ்வால் நட்சத்திரத்தை நினைவூட்டவே கிறிஸ்துமஸ் நட்சத்திரக் கூண்டுகள்.

* மெக்சிகோவில் கிறிஸ்துமஸ் நாளன்று பானையின்மீது சாத்தான் படத்தை வரைந்து அந்தப் பானைக்குள் இனிப்புகளையும், பொம்மைகளையும் நிரப்பி உயரத்தில் கட்டித் தொங்கவிடுகிறார்கள். சிறுவர் சிறுமியர் அந்தச் சாத்



தான் பானையைத் தடியால் அடிக்க, அது நொறுங்க, அதிலிருந்து இனிப்பு மழையும் பொம்மை மழையும் பொழியும். அதைக் கண்டு குழந்தைகள் கும்மாளம் இடு கிறார்கள்.

* இத்தாலி நாட்டில் கிறிஸ்துமஸ் தினத் தன்று பசுக்களுக்கு ராஜமரியாதைதான். அன்றைய தினம், பசுக்களைக் குளிப்பாட்டி அவற்றிற்கு விசேஷ மரியாதை செலுத்தும் வழக்கம் இத்தாலியில் இப்போதும் நடை முறையில் உள்ளது. இயேசுநாதர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தபோது அருகிலிருந்த



ஒரு பசு, மாட்டுத் தொழுவத்தில் நிலவிய கடுங்குளிரிலிருந்து இயேசுநாதரைக் காப்பாற்றுவதற்காக அவரை அவ்வப்போது நெருங்கி பெருமூச்சு விட்டு அவருக்கு உஷ்ணம் கொடுத்ததாம். அந்த நம்பிக்கை யின் அடிப்படையில்தான் இத்தாலியர் கிறிஸ்துமஸ் அன்று பசுக்களுக்கு மரி யாதை செலுத்துகின்றனர்.

* சுவீடன் நாட்டில் கிறிஸ்துமஸ் தினத்தன்று, வீட்டிலிருக்கும் சின்னப் பெண்ணை வெள்ளை நிற உடை உடுக்கச் செய்து, தேவதைபோல அலங் கரித்து, அவள் தலையில் ஒரு கிரீடம் சூட்டி, அதில் சுற்றிலும் பொருத்தப்பட் டுள்ள மெழுகுவர்த்திகளை ஏற்றி வைப் பார்கள். அந்த அலங் காரத்துடன் அந்தச் சிறுமி, குடும்பத் தில் உள்ள எல்லோ ருக்கும் காபி, ரொட்டி கொடுப்பாள். இதன் மூலம் இயேசுவே நேரில் வந்து தங் களை ஆசீர்வதித்து விட்டதாக அந் நாட்டு மக்கள் நினைக்கிறார்கள்.




* ஃபிரான்ஸ் நாட்டுக் குழந்தைகள் தங்கள் காலணிகளை வீட்டு வாசலில் கதவின் அருகே கிறிஸ்துமஸ் இரவு வைத்துவிட்டுப் படுத்துக் கொள்வார்கள்.



தேவகுமாரனைக் காண அந்த வழியாகப் போகும் மூன்று அரசர்கள் வீட்டு வாசலில் நின்று இந்தக் காலணிகளில் பரிசுப் பொருள்களை நிரப்பிவிட்டுப் போவார்கள் என்று நம்புகிறார்கள்.

* பாபோஷ்கா என்றொரு பாட்டி வரு வாள். இந்தப் பாட்டி கிறிஸ்துமஸ் தினத் தன்று மாலை தனது கூடையில் பொம் மைகளை நிரப்பிக் கொண்டு படுத்துத் தூங்கும் ஒவ்வொரு குழந்தையின் அரு கிலும் ஒரு பரிசு வைத்து விட்டுப் போவாள். இது ரஷ்ய நாட்டுக் குழந்தை களின் நம்பிக்கை.



- என். ஜரினா பானு

வலையில் சிக்கியவை



வழக்கம் போலவே சில நெட் ஜோக்ஸ் ரசிக்கலாமா?

அம்மா, தன் மகனிடம், சமையல் அறைக்குப் போய், துடைப்பம் எடுத்துக்கொண்டு வரும்படிச் சொன்னாள்.

பையன்: ஐயோ! அங்கே ஒரே இருட்டு. எனக்குப் போக பயமாக இருக்கிறது.

அம்மா: பயப்படாதே! அங்கே சாமி இருக்கிறார். 'சாமி' எனக்குத் தைரியம் கொடு' என்று சொல்லிவிட்டு, அங்கே போ! தைரியம் வந்துவிடும்.

பையன்: சாமி அங்கே நிச்சயமாக இருக்கிறாரா?

அம்மா: சாமி அங்கே நிச்சயமாய் இருக்கிறார்.

உடனே, சமையல் அறையை நோக்கித் திரும்பி நின்றுகொண்டு, பையன் சொன்னான்:

''சாமி! அம்மாவுக்குத் துடைப்பம் வேணுமாம்! எனக்கு இருட்டு என்றால் பயம்! எனவே, நீயே அம்மாவுக்குத் துடைப்பம் கொண்டு வந்து கொடுத்துவிடேன்! ப்ளீஸ்!''

சாலை விதிகளை மீறியதற்காக, போலீசாரிடம் சிக்கிக் கொண்டார் ஒரு பள்ளிக்கூட டீச்சர். நீதிபதி முன்பு நிறுத்தப்பட்டார் அவர். ''சாலைவிதிகளை மீறி, என் முன் நிற்கிற போது, எனக்கு என் பள்ளிக்கூட டீச்சர் நினைவுக்கு வருகிறார். உங்களுக்கு என்ன தண்டனை தெரியுமா? 'இனி சாலைவிதிகளை மீற மாட்டேன்' என்று இருநூறு தடவை எழுதிக் கொண்டு வாருங்கள்'' என்றார் நீதிபதி.

டிராஃபிக் சார்ஜெண்ட், ஒரு காரை நிறுத்தி, காரை ஓட்டி வந்தவரது முகத்தைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்துவிட்டு, ''உங்களைப்



பார்த்தால், கை தேர்ந்த டிரைவர் போலத் தோன்றுகிறது. இதோ... பிடியுங்கள்... 'பாதுகாப்பான டிரைவர்' என்பதற்கான ஒரு சர்டிபிகேட்டும், ரொக்கப் பரிசு நூறு டாலரும்'' என்றார்.

''தேங்க்ஸ்'' என்று சொல்லி டிரைவர் வாங்கிக்கொண்டார்.

''இந்த நூறு டாலரை என்ன பண்ணுவீர்கள்?'' என்று போலீஸ்காரர் கேட்க, தயக்கத்துடன் டிரைவர் சொன்னார்: ''டிரைவிங் லைசென்ஸ் வாங்குவதற்காகச் செலவழிப்பேன்!''

பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்த பெண்மணி, ''அவர் சும்மா இப்படித்தான் ஏதாவது சொல்லுவார். இந்த ஆள் சரியான குடிகாரன்! இப்போது கூட குடித்திருக்கிறார்!'' என்றாள்.

பின் சீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவர், திடீரென்று கண் விழித்தார். போலீஸ்காரர் தலையைக் கண்டதும், மிரண்டு போய், ''திருடின காரை எடுத்துக்கொண்டு மெயின் ரோடு வழியாகப் போக வேண்டாம் என்று நான் சொன்னதைக் கேட்டிருந்தால், இப்படி மாட்டிக் கொண்டிருப்போமா?'' என்றார்.

போலீஸ்காரர் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

இந்தப் படத்தில் நீங்கள் பார்ப்பது, கன சதுர வடிவ, தர்பூசணி பழம்தான்! இது என்ன புதுமை என்று ஆச்சரியப்படுகிறீர்களா? எதையும் புதுமையாய் செய்யும், ஜப்பானியர்களின் கைவண்ணம்தான் இது!

வழக்கமான உருண்டை வடிவத்தில் உள்ள தர்பூசணி பழங்களை, வெளியூர்களுக்கு பாக் பண்ணி அனுப்புவது சிரமமாக உள்ளது. நிறைய இடம் வீணாகிறது என்பதற்காக, கன சதுர வடிவில், பழங்களை உருவாக்கி விட்டார்கள்.

இது எப்படி சாத்தியமாகும்?

செடியில் காயாக இருக்கிறபோதே அவற்றைச் சுற்றி, கன சதுர வடிவில் ஒரு பெட்டியை வைத்து விடுகிறார்கள். அந்த பெட்டி உருவத்திலேயே பழம் வளர்ந்து, பெரிதாகிறது. பாக்கிங் செய்ய சௌகரியமாகவும் இருக்கிறது.

இன்டர்நெட்டில் தேடிப் பிடித்த சில உபயோகமான பொன்மொழிகளைப் பார்க்கலாமே!

- உன்னுடைய கனவு நிறைவேற வேண்டுமானால் தேவையில்லாத தூக்கத்தை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, உழைக்கத் தொடங்கு.
- உன்னுடைய இலக்கு மீதான பார்வையை நீ விலக்குகிறபோது, இடையில் உன் கண்களுக்குத் தென்படுபவைதான் தடைகள்.

சிவப்பு இந்தியரா, எஸ்கிமோ மனிதரா?



இது வழக்கம் போல, கண்களை ஏமாற்றும் ஒரு படம்:

சட்டென்று பார்க்கிறபோது, ஒரு சிவப்பு இந்தியர் இடது பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு இருப்பது போலத் தோன்றுகிறதா?

கண்ணை மூடித் திறந்து, மறுபடி வேறு கோணத்தில் பாருங்கள். ஒரு எஸ்கிமோ மனிதன் முதுகைக் காட்டியபடி திரும்பி நின்று கொண்டிருப்பது போலத் தெரிகிறதா?

டீ இன் ஒன்!

- கௌதம் ராம்

சின்னமனூர் சின்னப்பட்டாளம்

துப்புக் கிடைத்தது

கறுப்புத் துணியால் கண்களைக் கட்டி சிட்டழகை அந்த அறையை விட்டு வெளியே அழைத்து வந்தனர்.

''பொண்ணு ரொம்ப துள்ளறா போலிருக்கே'' என்றார் ஒருவர்.

அவரது கரகரப்பான குரலே அவர் பண்ணையார்தான் என்பதைக் காட்டியது. அதைச் சிட்டழகு புரிந்துகொண்டாள்.

அவரை தான் அறிந்து கொண்டதை வெளிக் காட்டிக் கொள்வதால் வேறு ஏதேனும் பிரச்னை வரலாம் என்று நினைத்தாள்.

''ஆமாங்கய்யா ரொம்பத்தான் முரண்டு பிடிக்கிறா'' என்றான் அவள் கையை இருகப் பிடித்திருந்தவன்.

''அந்தக் கடைசியில் இருக்கும் சின்ன அறையில் கொண்டு போய் அவளைப் போடுங்க. மற்றதை அப்புறம் பார்க்கலாம்'' என்றார் பண்ணையார்.

அவர்கள் அவளை இழுத்துச் சென்றனர்.

சிறிது தூரத்தில் இருந்தது, அவர் சொன்ன அறை. ஒருவன் அவள் கையை விட்டு விட்டு அறையைத் திறந்தான். மற்றவன் உள்ளே அவளை இழுத்துச் சென்றான். அவர்கள் உள்ளே நுழைந்ததும் அவளது கண்ணில் கட்டப்பட்டிருந்த கறுப்புத் துணி அவிழ்க்கப்பட்டது.

கண்களைக் கசக்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். அதற்குள் விரைவாக வெளியே சென்று கதவை இழுத்து மூடினார்கள்.

சிட்டழகு அறையின் உள்ளே கண்களைச் சுழல விட்டாள். முன்பு இருந்த அறையை விட இது அளவில் சிறியது என்றாலும் சுத்தமாக இருந்தது.

படுக்கை வசதியும், மேசை, நாற்காலியும்கூட இருந்தது. மேசையின் மீது அழகான கண்ணாடி ஜாடியில் சுத்தமான நீரும் இருந்தது.

கதவு ஓரமாக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு வெளியே நடப்பதை உன்னிப்பாகக் கேட்டாள் சிட்டழகு.

வெளியே ஆட்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்ததும் எதையோ தூக்கிக் கொண்டு வேகமாக நடப்பதும் படிகளில் ஏறி இறங்குவதுமான ஓசைகள் கேட்டன.



''ஏய் மெதுவடா, கீழே போட்டுறாதே பார்த்து பார்த்து'' என்று கத்திக் கொண்டிருந்தார் பண்ணையார்.

தான் இருந்த அறையில் உள்ள பெட்டிகளையே வெளியே எடுத்துச் செல்வதாக நினைத்

தாள் சிட்டழகு. அதில் என்ன இருக்கிறது என்பதைத் திறந்து பார்க்காமல் விட்டதற்காக வருத்தப்பட்டாள். உட்கார்ந்தபடியே அசதியால் தூங்கி விழுந்தாள் சிட்டழகு.

அந்தக் குடிகாரர் வீடு அருகில் நால்வரும் வந்து சேர்ந்தபோது வெயில் சுள்ளென அடித்துக் கொண்டிருந்தது.

சாலை ஓரத்தில் இருந்த ஒரு புதர் மறைவில் நால்வரும் உட்கார்ந்தனர். அங்கிருந்து குடிகாரர் வீடு தெளிவாகத் தெரிந்தது. குடிகாரரின் மனைவி ஏதேதோ திட்டிக் கொண்டிருப்பதும்கூட காதில் விழுந்தது.

அதை எல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாதவன் மாதிரி அவன் வெளியே வருவதும் சாலையின் இரு புறங்களையும் பார்ப்பதுமாக இருந்தான். அவன் யாரையோ எதிர்பார்ப்பது மாதிரி இருந்தது.


''ஏன் இப்படி குட்டி போட்ட பூனை மாதிரி வாசலுக்கும் உள்ளுக்குமாக அலையற... பேசாம உட்காரேன் ஒரு இடத்தில்'' என்று அவன் மனைவி கத்தினாள்.

இம்முறை வெளியே வந்தபோது அவன் முகம் மலர்ந்து காணப்பட்டது.



ரா. சுந்தரமூர்த்தி

9



''ரெண்டு நாள் முன்னாடிதானே அவன்கூட 'காய்'விட்டே; அதுக்குள்ள எப்படிடா ராசி ஆனே?"

"ரெண்டு நாளில் காய் தானாவே பழமா யிடிச்சுடா!"

- சீர்காழி வி. ரேவதி

''அந்தாளு முகம் மலர்வதைப் பார்த் தால், அவன் எதிர்பார்க்கிற ஆள் வந்தாச் சுன்னு நினைக்கிறேன். அவங்க யாருன்னு பாரு'' என்றான் முத்துக்குமார்.

செந்தில் கொஞ்சம் புதரில் இருந்து விலகி, சாலையைப் பார்த்தான். இரண்டு பேர் வேகமாக வந்துகொண்டிருந்தனர். ''இரண்டு பேர் வர்றாங்க. ஆனா ஆள் யாருன்னு எனக்குத் தெரியலை'' என்றான் செந்தில்.'

கிட்டானும் எட்டிப் பார்த்தான். ''ஆமா... அவங்க யாருன்னு எனக்கும் தெரியலையே'' என்று உதட்டைப் பிதுக்கினான்.

''அவங்க யாரா இருந்த என்ன? என்ன செய்யப் போறாங்கன்னு பார்ப்போம். அமை தியாக இருங்க'' என்றான் உதாரணம்.

''அதுவும் சரிதான்'' என்றான் கிட்டான்.

நால்வரும் அமைதியாக நன்றாகப் புதருக்குள் பதுங்கினர்.

வேகமாக வந்த இருவரை வாயெல்லாம் பல்லாக வரவேற்றான் குடிகாரன். ''தாகத் துக்குக் கொஞ்சம் தண்ணீர் சாப்பிடுறீங் களா?'' வந்தவர்களை உபசரித்தான்.

''யாராது?'' என்றபடி வெளியே வந்தாள் அவன் மனைவி.

வெளியே நின்றிருந்த ஆட்களைக் கண் டதும் அவள் முகம் மாறியது. ''என்னது இன்னிக்கும் வந்துட்டீங்களா அவரைக் கூட்டிட்டுப் போக. நேற்றுக் குடிச்சிட்டு கும்மாளம் போட்டது போதாதா?'' என்று எரிந்து விழுந்தாள்.

அவர்கள் மிரண்டு போனார்கள். என்றாலும் சமாளித்துக் கொண்டு, ''இல் லீங்க. இன்னிக்கு வேலைக்குத்தான் கூப்பிட வந்தோம்'' என்றனர் பவ்யமாக.

''போதும் உங்ககூட வேலைக்கு வந்தது. அவருக்கு உடம்பு சரியில்லை. அவர் வேலைக்கு எல்லாம் வரமாட்டார். நீங்க போகலாம்'' என்றாள் அவள் கோபமாக.

வந்த ஆட்கள் செய்வது அறியாது நின்றனர். பின்பு வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினர். அவர்கள் போனதும் உள்ளே போய் கதவைச் சாத்தினாள் குடி காரரின் மனைவி.

''போச்சுடா! இப்ப என்ன பண்றது?'' என்றான் செந்தில்.

''அதானே இப்படி சப்புன்னு போச்சே'' என்றான் முத்துக்குமார்.

''என்ன ஆயிடுச்சின்னு இப்படி அலுத் துக்கறீங்க? நமக்குத்தான் வழி கிடைச் சிடுச்சே...'' என்றான் உதாரணம்.

''அவன் இல்லாட்டி என்ன அவனைத் தேடி வந்தவங்களை ஃபாலோ பண்ண வேண்டியதுதான்''

''அட ஆமாம். வாங்க அவங்க ரொம்ப தூரம் போறதுக்குள்ள பின் தொடருவோம்'' என்று செந்தில் சொல்ல எல்லோரும் புறப் பட்டனர்.

இருவரும் பேசியபடியே சாலையை விட்டு வயல் வெளியில் இறங்கி வரப்பு மீது குறுக்கு வழியே நடக்கத் தொடங்கினர்.

பிறகு இருவரும் தோப்பில் நுழைந்தனர். இவர்களும் ஓடிப் போய் தோப்பில் நுழைந்து பின் தொடர்ந்தனர். தோப்பு அடர்த்தியாக இருந்ததால் மறைந்து பின் தொடர்வது எளிதாகவே இருந்தது.

தோப்பின் மையப் பகுதி வந்தபோது உள்ளே திடல் மாதிரி இருந்தது. அதைக் கண்ட நால்வரும் திடுக்கிட்டனர். அங்கே ஒரு மாதிரி வாடை அடித்துக் கொண் டிருந்தது. பத்துப் பதினைந்து பேர் சாராயம் காய்ச்சுவதிலும் வடி கட்டுவதிலும் சுறுசுறுப் பாக இருந்தனர்.

சிலர் சாராயத்தைக் குடித்து விட்டுப் புறப் பட்டனர். அங்கே நுழைந்த இருவரும் இடுப் பில் இருந்த ஒரு அடையாள அட்டையைக் காட்டிவிட்டு இரண்டு பாட்டில் சாராயத்தை வாங்கிக் கொண்டு, மறைந்தனர்.

''என்னடா இது அநியாயமா இருக்கு? ஊருக்குள் சாராயம் கூடாதுன்னு கட்டுப்பாடு போட்ட பண்ணையாரின் தோப்புக்குள்ளேயே இப்படி சுஜோரா நடக்குது தொழில்'' என் றான் செந்தில்.

''மெதுவா பேசு. சத்தம் கேட்கப் போகுது. சரி வாங்க புறப்படலாம்'' என்றான் கிட்டான்.

''எங்கே?'' என்றான் முத்துக்குமார்.

''தோப்புக்கு வெளியே போக வேண்டியதுதான். நீண்ட நேரம் இங்கே இருப்பது நல்லதில்ல. நாம எதைக் கண்டுபிடிக்க நினைச்சமோ அதைக் கண்டு பிடிச்சாச்சு. இனி போக வேண்டியதுதான்'' என்றான் கிட்டான்.

அந்தச் சமயம் பார்த்து தனது டிராயர் பாக்கெட்டில் கைவிட்ட உதாரணம் ஒரு சிறு மடக்கு கத்தியை எடுத்தான்.

எல்லோரும் திடுக்கிட்டனர். ''எதுக்கடா இது?'' என்றான் செந்தில்.

''தோப்பை விட்டுப் போன பிறகு திரும்ப வர வேண்டாமா? அதுக்கு நாம ஏதாவது அடையாளம் வைக்க வேண்டாம்? போகும் போதே மரங்களில் அடையாளம் வச்சிட்டுப் போனால் திரும்பி வர சுலபமாக இருக்கும்'' என்றபடி மரங்களில் சிறு சிறு வெட்டுகள் போட்டபடியே நடந்தான். அவனை ஆச்சரியமாகப் பார்த்தபடி எல்லோரும் நடந்தனர்.

கனகசபை கொடுத்த டாலரை உற்றுப் பார்த்த அதிகாரி மகிழ்ச்சி பொங்கச் சொன்னார்: ''நல்லவேலை செய்தீர்கள் கனகசபை. இந்த டாலரில் உள்ள முத்திரை ஒரு கோஷ்டியின் அடையாளமாகத்தான் இருக்க வேண்டும். பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். சமயத்தில் பயன்படும்.''

''எதுக்கும் ஒருமுறை 'அன்அபிஷியலா' சின்னமனூர் கிராமத்துக்கு விசிட் அடிச்சிடுங்க. யாருக்கும் சந்தேகம் வரக் கூடாது. சந்தேகம் வந்தால் குற்றவாளி முழிச்சிக்க வாய்ப்பு உண்டு.''

''சரிங்க. நானே அங்கே போய் வர உங்க உத்திரவு வாங்கணும்னுதான் நினைச்சிக்கிட்டு இருந்தேன். நீங்களே சொல்லிட்டீங்க'' என்றார் கனகசபை.

''எதுக்கும் நாலு கான்ஸ்டபிளை துணைக்கு அழைச்சிக்குங்க'' என்றார்.

''சரி சார்''

''புதுசா எந்தத் தகவல் கிடைத்தாலும் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். ஆனா அவசரம் காட்டாதீங்க. ஆதாரங்களைத் தவற விட்டுடாதீங்க, அதுதான் முக்கியம்'' என்றார் அதிகாரி.

அவர் அறையை விட்டு வெளியே வந்தார் கனகசபை. தனது இருக்கையை நோக்கி



நடந்தார். எதிரே வந்த ராமகிருஷ்ணன் என்ற காவலரை ''வாங்க என் சீட்டு வரைக்கும்'' என்று அழைத்துக் கொண்டு போனார்.

அவரை எதிர் இருக்கையில் உட்கார வைத்து விட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தார்.

''ராமகிருஷ்ணன், நீங்க உடனே சின்ன மனூர் வரைக்கும் போறீங்க. போய் அந்த ஊரில் புதுசா ஏதாவது நடந்தால் என்னிடம் வந்து சொல்லணும்'' என்றார்.

''சரிங்க சார். நான் இப்பவே புறப்படு கிறேன்'' என்று எழுந்தார்.

''நீ அங்கே போலீஸ்காரரா போகலை. ஒரு வியாபாரி மாதிரி போகணும். உளுந்து, பருப்பு வாங்க சில வியாபாரிகள் வந்து போவாங்கன்னு கேள்விபட்டிருக்கேன். நீங்க அப்படித்தான் போகணும்.''

''சரிங்க சார். அப்படியே செய்யறேன். எல் லாம் ரகசியமாக நடக்கணும். அவ்வளவு தானே சார். இதை முன்னமே சொல்லக் கூடாதா?'' என்றார்.

''சரி கிளம்புங்க. நல்ல தகவல்களோட வாங்க'' என்றார் கனகசபை.

அவர் கிளம்பும்போதே இன்னொரு கான்ஸ்டபிள் வந்தார் கனகசபையைப் பார்த்து சல்யூட் செய்துவிட்டு ''உங்களைப் பார்க்க நாலு பசங்க வந்திருக்காங்க சார்'' என்றார்.

''உடனே உள்ளே அனுப்புங்க அவங் களை'' என்றதும் அவர்களை உள்ளே அழைத்து வந்தார் கான்ஸ்டபிள்.

''வாங்க, வாங்க சின்னப் பசங்களா. என்ன விஷயம் ஸ்டேஷனுக்கே வந்துட்டீங்க'' என்றார் கனகசபை.

''மேலும் ஒரு புதுத்தகவல். அதான் சொல்லிட்டுப் போகலாமுன்னு வந்தோம்'' என்றான் கிட்டான்.

''சொல்லுங்க, சொல்லுங்க. அதைத்தான் எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்'' உற்சாகப் படுத்தினார் அவர்.

கிட்டான் நடந்ததை எல்லாம் விவரித் தான்.

''அட அப்படியா? நிஜமாவா?'' என்று வியப்பவர் போல் கேட்டுக் கொண்டிருந்தார் கனகசபை. ''உங்க ஊர் பற்றி எவ்வளவு நல்ல அபிப்ராயம் இருந்திச்சு. இப்ப என்ன டான்னா எல்லாம் நேர்மாறாக இருக்கே'' என்றார். ''நீங்க தோப்புக்குள்ள போனதை

''டி.வி சீரியலில் நடிக்க நம்ம மகா லட்சுமிக்கு சான்ஸ் கிடைச்சிருக்கு.''

''அதுக்காக தன் பெயரை மெகாலட்சுமி என்று மாத்திக்கணுமா?''

— எஸ். மோகன்

யாரும் கவனிக்கலையே.''

''இல்லை சார். நாங்க அதில் கவனமாகத் தான் இருந்தோம்'' என்றான் கிட்டான்.

''ரொம்ப சரி. நான் நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யறேன்.''

''உடனே சாய்ச்சுற இடத்துக்குப் போனா கையும் களவுமாகப் பிடித்து விடலாம் சார்'' என்றான் முத்துக்குமார்.

''இல்லை. நீ சொல்ற மாதிரி சட்டுன்னு போய் பிடிக்கக் கூடாது. அப்படி செய்தால் அவங்க செய்கிற மற்ற விஷயங்கள் எல்லாத் தையும் கண்டுபிடிக்கிறது கஷ்டமாகி விடும். ஒட்டு மொத்தமாகக் கண்காணித்துப் பிடிக்க வேண்டும்'' என்றார் கனகசபை.

''நல்லா சொன்னீங்க சார். அவங் களுக்குக் கள்ளச்சாராயம் ஒரு உபரி தொழில். பெரிசா வேறு ஏதோ பண்றாங்க. அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றான் உதாரணம்.

''சரி, இப்ப நீங்க கிளம்புங்க. அடிக்கடி தொடர்பு கொள்ளுங்கள். ஆனா இப்படி வெளிப்படையாக ஸ்டேஷனில் வேண்டாம். அதுக்கான இடங்களை நானே அப்புறம் உங் கக்கிட்ட சொல்றேன்'' என்றார் கனகசபை.


''நீங்களே எங்களிடம் சொல்வீங்களா? எப்படி சார்?'' என்றான் செந்தில்.

''அதுதான் சஸ்பென்ஸ்'' என்றார் கனக சபை.

கான்ஸ்டபிள் ராமகிருஷ்ணன் ஒரு வியாபாரியைப் போல் மாறுவேடமணிந்து ஊருக்குள் நுழைந்தபோது அங்கு தமுக்குச் சத்தம் கேட்டது.

தமுக்கு அடிப்பவன் பெரும் குரலில் கத்தி ''வர்ற வெள்ளிக்கிழமை மாலை நம்ம அய்யனார் கோயிலில் சிறப்பு வழிபாடு நடக்க இருப்பதால் ஊர் மக்கள் அனைவரும் திரண்டு வந்து அய்யனாரை வழிபட்டு அருள் பெற வேண்டுகிறோம்'' என்று அறி வித்து விட்டு, மீண்டும் படபடவென்று தமுக்கை அடித்தான்.

அவன் அருகில் போன ராமகிருஷ்ணன், ''அய்யா கோயில் பூசையில் ஆட்டம்பாட்டம் எல்லாம் உண்டா?'' என்று கேட்டார்.



"அது இல்லாமலா? அது சரி. நீங்க யாரு? ஊருக்குப் புதுசா இருக்கு?" என்றான் அவன்.

"ஆமா புதுசுதான். உளுந்து, பருப்பு வியாபாரி" என்றார்.

'ஆட்டம்பாட்டம் இதை அய்யாவுக்குத் தெரிவிக்கணுமே' என்று யோசித்த ராம கிருஷ்ணன் அருகில் இருந்த ஆலமரத்தின் பக்கம் பதுங்கினார். வேஷ்டியோடு இடுப்பில் கட்டி இருந்த 'செல்ஃபோனை' எடுத்து எண்களை அழுத்தி உயிர்பித்தார்.

"ஹலோ"

"சொல்லுங்க ராமகிருஷ்ணன். நான் கனகசபைதான்."

"இங்க உள்ள அய்யனார் கோயிலில் திருவிழா."

"அதுக்கு என்ன இப்போ?"

"அய்யா விழா திடீர்னு ஏற்பாடு ஆன மாதிரி தெரியுது. சிறப்பு வழிபாடு என அறி விப்பு. அதில் ஆட்டம்பாட்டம் எல்லாம் கூட உண்டாம்."

"ஓஹோ! அப்படி போகுதா சங்கதி. சரி சரி. நீங்க தொடர்ந்து அங்கேயே இருந்து கவனிங்க. சந்தேகப்படும்படி எது நடந்தாலும் சொல்லுங்க."

"ஓகே சார்" ராமகிருஷ்ணன் போனை கட் செய்துவிட்டுப் பழையபடி மடியில் வைத்துக் கட்டிக் கொண்டார்.

ஊருக்குள் நடந்த ராமகிருஷ்ணன் சாலைகள் பிரியும் ஓர் இடத்தில் இருந்த பெரிய மரத்தின் கீழே வட்டமாக சிமெண்ட் மேடை அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். மரம் செழித்து அடர்ந்து வளர்ந்து நின்றதால் எங்கும் நிழல் பரவிக் கிடந்தது. காற்று வேறு குளுமையாகச் சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருந்தது.

ராமகிருஷ்ணன் அந்த மேடை மீது போய் உட்கார்ந்தார். மேடையில் சாய்ந்து படுத்தார் அவர். களைப்பு மிகுதியால் தூக்கம் சொக்கவே கண்ணயர்ந்தார் சிறிது நேரம்.

யாரோ அவரைத் தட்டி எழுப்பவே எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தார்.

எதிரே ஒரு முரடன் நின்றிருந்தான். அவரைப் பார்த்து "யார்யா நீ? ஏன் இங்கே படுத்துக் கிடக்கே?" என்றான்.

அவனுக்குப் பின்னால் சாலையில் ஒரு வேனும் காரும் நின்றிருந்தன. அவன் காரில் இருந்து இறங்கி வந்திருக்கக் கூடும் என்றும் யூகித்தார் ராமகிருஷ்ணன். காரின் கண் ணாடிகள் நன்கு தூக்கி விடப்பட்டிருந்ததால் உள்ளே இருப்பவர்கள் யார் எனத் தெரியவில்லை.

"நான் ஒரு வியாபாரிங்க. உளுந்து வாங்க வந்தவன். அசதியில் தூங்கிவிட்டேன்" என்றார் ராமகிருஷ்ணன்.

அவன் கார் அருகே போய் ஏதோ சொல்லி விட்டு வந்தான். பிறகு "சரி, ஒழுங்கா உளுந்து வாங்கிக்கிட்டு ஊர் போய்ச் சேரு. அங்கே இங்கே கண்ட இடத்தில், தூங்கக் கூடாது" என்று சொல்லிவிட்டுப் போய் காரில் ஏறினான்.

கார் சீறிப் பாய்ந்து சென்றது. வேனும் பின்னே தொடர்ந்தது.

அந்தச் சில நிமிடங்கள் காரின் எண் ணையும் வேனின் எண்ணையும் மனதுக்குள் குறித்து வைத்துக் கொண்டார் ராமகிருஷ் ணன்.

மீண்டும் மறைவிடமாகச் சென்று செல்ஃபோனை உசுப்பினார்.

"ஹலோ"

"சொல்லுங்க ராமகிருஷ்ணன்.ஏதாவது புது செய்தியா?"

"எஸ் சார்" என்று ஆரம்பித்த ராம கிருஷ்ணன் கிசுகிசுப்பான குரலில் தகவல் களை அடுக்கினார்.

"ஓகே..ஓகே தொடர்ந்து கவனிங்க" என்று போனை கட் பண்ணினார் கனகசபை.

உடனே முக்கிய சாலைகளில் உள்ள செக் போஸ்ட்களுக்குத் தகவல் அனுப்பினார். "இந்த எண் வண்டி வந்தால் நிறுத்தி வையுங்க. எனக்குச் செய்தி அனுப்புங்க. எதுக்கும் நானே புறப்பட்டு வருகிறேன்" என்றார் கனகசபை.

வண்டியை லாவகமாக ஓட்டி வந்த டிரைவர் செக்போஸ்டில் சாலை குறுக்கே விழுந்த தடுப்பைக் கண்டு திகைத்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

'கோல்கேட்டு'க்கு ஒரு டிக்கெட்!

A to Z

எனக்குக் காலாண்டுத் தேர்வு நடந்து கொண்டிருந்தது. அன்று அறிவியல் தேர்வு. படித்துக் கொண்டிருந்தேன். வேலைக்குக் கிளம்பிய என் அம்மா,''A to Z தரோவா படிச்சு, நல்லா எழுது'' என்று சொன்னார். ஐந்து வயது தங்கை, ''ஏம்மா, அக்கா என்ன LKG-யா படிக்குது, Aலேருந்து Z வரைக்கும் படிக்கறதுக்கு'' என்றாளே பார்க்கலாம்! அனைவரும் சிரித்து விட்டோம்.

- ப. சௌந்தர்யா, ஏழாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை - 91.

கோல்கேட்




வடசென்னையை நோக்கி பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தோம். பேருந்தின் முன்பக்கம் ஏறிய ஒரு பயணி என்னருகில் நின்று கொண்டிருந்த பெண்மணியிடம் பணத்தைக் கொடுத்து, ''டோல்கேட் ஒண்ணு வாங்குங்க'' என்று கூறினார். அப் பெண்மணி அந்தப் பகுதிக்குப் புதியவர் போல. 'டோல்கேட்' என்பதை 'கோல்கேட்' எனப் புரிந்துகொண்டு, கண்டக்டரிடம் ''ஒரு கோல்கேட் கொடுங்க!'' என்று கூற, கண்டக்டர், ''ஏம்மா இது மளிகைக் கடை இல்லே, பஸ்'' என்று கூறினார். பஸ்ஸில் அனைவரும் சிரித்து விட்டனர். அப் பெண்மணி ஒன்றும் புரியாமல் விழிக்க, நான் அவரிடம், 'கோல்கேட் அல்ல, டோல்கேட்' என்று விளக்கினேன்.

- ப. அசோக், ஆறாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி,
மடிப்பாக்கம்

உப்புமா



அம்மா வெளியூர் சென்று திரும்பும்போதெல்லாம் தம்பிக்கு மிக்ஸர் வாங்கி வருவார். அவன்தான் முதலில் பிரித்து தின்று விட்டு மீதியை எனக்குக் கொடுப்பான். அன்று வாங்கி வந்த மிக்ஸரைத் தின்றுகொண்டே சமையலறைக்குச் சென்றவன் ''உப்புமா'' என்றான், மிக்ஸரில் அதிகம் உப்பு போடப்பட்டிருந்ததைச் சொல்லும் விதமாக. ஆனால் அம்மாவோ, ''இல்லைடா இன்னிக்குத் தோசைதான்! நாளைக்கு 'உப்புமா' செஞ்சு தரேன்!'' என்று சொல்லவும் தம்பி வாயில் மிக்ஸரை மென்ற




■ எங்கள் ஊரில் நடந்தது





படி திகைத்து நின்றான்! எனக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

-ப.காளிதாசன்,
நீர்விளங்குளம்.



குரங்கு

நானும், என் தங்கையும் எங்கள் அப்பாவுடன் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தோம். என் அப்பா பத்தடி முன்னால் சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையோர மரம் ஒன்றில் ஒரு குரங்கு செல்வதை என் தங்கை பார்த்து, ''அப்பா குரங்கு, அப்பா குரங்கு'' என்று கத்தினாள். அப்பா திரும்பிப் பார்த்து, ''அப்பாவையெல்லாம் குரங்குன்னு சொல்லக் கூடாது'' என்றாரே பார்க்கலாம்! நாங்களிருவரும் சிரித்து விட்டு, பின்னர் அவரிடம் விபரம் கூறினோம்.

- சௌமி, மடிப்பாக்கம்.

படம்

திருவாரூரிலிருந்து மயிலாடுதுறைக்குத் தனியார் பேருந்தில் சென்று கொண்டிருந்தோம். அது ஒரு வீடியோ கோச். என் தம்பி மூன்று பேர் இருக்கையில் நடுவில் அமர்ந்திருந்தான். அவன் உயரத்திற்கு வீடியோ திரை தெரியாது. அவன் பக்கத்து கண்ணாடியைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் எப்படி சினிமா பார்க்கப் போகிறான் என்று படத்தைப் பற்றி அவனுக்கு இருபுறமும் அமர்ந்திருந்த நானும் நண்பனும் கமெண்ட்ஸ் கொடுத்தோம். உடனே தம்பியும் அக்காட்சி பற்றி ஒரு கமெண்ட் கொடுத்தான். ''நீ எப்படி படம் பார்த்தே?'' என்று கேட்டோம். அவன் பார்த்துக் கொண்டிருந்த பக்கவாட்டு கண்ணாடியைக் காட்டினான். 'அட' என்று சொல்லுமளவுக்குப் படம் தெளிவாக ரிஃப்ளக்ட் ஆகிக் கொண்டிருந்தது.

- டி.வரதராஜன், அம்மையப்பன்

என்ன தெரிகிறது?

எங்கள் பாட்டி நன்றாகக் கதை சொல்வார். அதனால் நாங்களும் அவரிடம் அடிக்கடி கதை கேட்போம். ஒருநாள் வழக்கம் போல என் தங்கை மினு அவரிடம் ஒரு கதை கேட்டாள். அவரும் அரிச்சந்திரன் கதையைக் கூறினார். பிறகு, ''இதிலிருந்து என்ன தெரியுது?'' என்று கேட்டார்.

உடனே மினு ''கதை முடிஞ்சு போச்சுன்னு தெரியுது'' என்றாள். பாட்டியோ, ''சரி! மணி 11 ஆகுதுன்னும் தெரியுது. தூங்கு'' என்று கூற அனைவரும் சிரித்து விட்டோம்.

- எம். வினோத் விருத்தாசலம்.



1000/- ரூபாய் பரிசுப் போட்டி

ஒவ்வொரு மாதமும் பள்ளி மாணவ, மாணவியருக்கு உதவும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். உங்கள் படிப்புக்குத் தேவையான பொருட்களை இதில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.12.2002



ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.

இந்த மாதப் போட்டி

பொருத்துக :

1. ஜிம்மி கார்ட்டர்	மூலதனம்
2. பாண்டா	2001
3. குஜராத் பூகம்பம்	கார் பந்தயவீரர்
4. காரல் மார்க்ஸ்	கொல்கத்தா
5. நரேன் கார்த்திகேயன்	நோபல் பரிசு
6. ரசகுல்லா	சீனா

7. ஒரு தாயின் வயிற்றில் ஐம்பது பிள்ளைகள் - அது என்ன?

8. மேலே உள்ள படத்தில் காண்பது என்ன பண்டிகை?

தோசையின் விலை என்ன?

I. பாட்டி அடுத்த தெருவிலிருக்கும் கோழி பண்ணைக்குப் போய் உயிருடன் சம எடையுள்ள நான்கு கிண்ணிக் கோழி களையும், ஆறு நாட்டுக் கோழிகளையும் வாங்கி வரச் சொல்லி சண்முகத்திடம் நீண்ட தடி ஒன்றைக் கொடுத்தனுப்பினார். பத்து கோழிகள் என்பதால் தடியைத் தோளில் வைத்து அதில் கோழிகளைக் கட்டித்தான் கொண்டு வர முடியும். நாட்டுக் கோழியைக் கிண்ணிக் கோழிகளுடன் சேர்த்தாலோ, கிண்ணிக் கோழியை நாட்டுக் கோழியுடன் சேர்த்தாலோ கொத்தியே கொன்றுவிடும். தடியைத் தோளில் வைத்து எப்படி கோழிகளை உயிருடன் வீட்டுக்கும் கொண்டு செல்வான்?

- தேனி பிரபு

II. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நல்லெண்ணெய் கம்பெனியில் வெவ்வேறு அளவுள்ள 6 பீப் பாய்களில் முறையே 62, 40, 38, 36, 32, 30 லிட்டர் அளவுகளில் எண்ணெய் இருந்தது.

ரமேஷ், சுரேஷ் என்ற இரு வணிகர்கள் அந்த எண்ணெய் பீப்பாய்களை விலைக்கு வாங்க வந்தனர். ரமேஷ் மூன்று பீப்பாய் களை வாங்கினார். சுரேஷ் இரண்டு பீப்பாய் களை வாங்கினார். ஒரு பீப்பாய் மீதம் இருந்தது.

பிறகு எண்ணெய்யைக் கணக்கிட்டதில் சுரேஷ் வாங்கியதைப் போல் இரண்டு மடங்கு அளவுள்ள எண்ணெய் ரமேஷிடம் இருந்தது.

அப்படியெனில் விற்பனையாகாமல் இருந்த பீப்பாயில் எத்தனை லிட்டர் எண்ணெய் இருக்கும்? இரு வணிகர்களும் வாங்கிய பீப்பாய்களில் இருந்த எண்ணெய் அளவு எவ்வளவு?

- எம்.வினோத், சங்கரன்கோவில்

III. முட்டையிலிருந்து தவளை குஞ்சு வெளிவந்ததும் அதன் கால்கள் தன்னைப் போல் இருப்பதாக ஆண் தவளையும் தன் கால்கள் போல் இருப்பதாகப் பெண் தவளையும் சொல்லின. இதில் யார் சொன்னது உண்மை?

- கு.மு.பிரிதிவிராஜன், எட்டாம் வகுப்பு, ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை

IV. இரண்டு வழிப் போக்கர்கள் ஒரு சத்திரத்தில் உணவு உண்பதற்காகத் தங்கினார்கள். ஒருவர் ஏழு தோசைகளும், மற்றவர் ஐந்து தோசைகளும் கொண்டு வந்திருந்தனர்.

இருவரும் உணவு உண்ணத் தொடங்குகையில், மற்றொரு வழிப் போக்கர் வந்து சேர்ந்தார்.

அவர், தான் உணவு ஏதும் கொண்டு வரவில்லை என்றும், தனக்குக் கொடுக்கும் உணவிற்கு உண்டான பணத்தைக் கொடுப்பதாகவும் கூறினார். அதற்கு மற்ற இருவரும் சம்மதித்து, இருந்த தோசைகளை மூவரும் சம பங்கு உண்டனர். வழிப்போக்கர் 3 ரூபாய் கொடுத்துவிட்டுப் போனார்.

அந்த 3 ரூபாயை இவர்கள் இருவரும் எப்படி பங்கிட்டுக் கொள்ள வேண்டும்?

- குட்டிபிரசன்னா, கரூர்

V. ஒரு பொருளின் விலையை 15 சதவீதம் உயர்த்தி, 15 சதவீதம் தள்ளுபடி விலையில் விற்றால் லாபமா நஷ்டமா?

- சேனா சரவணன், சென்னை.

VI. காற்றில்லா ஒரு அறையில் பஞ்சு உள்ளது. திடீரென மின் கசிவு ஏற்பட்டு தீப்பிடித்து விடுகிறது. இந்த விபத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் எவ்வளவு பணம் கொடுக்கும்?

- கி. புனிதாராணி, ஏழாம் வகுப்பு, ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை.



விடைகள் 64 ஆம் பக்கம்

பிரபலங்களின் வாழ்வில்...

என்னிடம் பணம்

நிறம்!

இந்திய குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒரு சமயம் வெளிநாடு சென்றிருந்தபோது, பத்திரிகை நிருபர் ஒருவர் அவரிடம்,

"நாங்கள் எல்லோருமே ஒரே நிறமாகத்தான், அதாவது வெள்ளை நிறமாக இருக்கிறோம். ஆனால், இந்தியர்களாகிய நீங்கள் அப்படி இல்லை. சிலர் சிகப்பாகவும், சிலர் கறுப்பாகவும், வேறு சிலர் மாநிறமாகவும் இருக்கிறீர்கள். ஆகவே, இந்தியர்கள் ஒரே இனம் அல்லர் என்று கொள்ளலாமா?" என்று கேட்டார். ராதாகிருஷ்ணன் பட்டென்று பதில் சொன்னார்:


"அதெப்படி? கழுதைகள் எல்லாம் ஒரே நிறம்தான். ஆனால் குதிரைகளில் பல வெள்ளையாகவும், பல கறுப்பாகவும், வேறு பல சிகப்பாகவும் உள்ளன. அதற்காக குதிரைகள் ஒரே இனம் அல்ல என்று சொல்லிவிட முடியுமா?"



• ராதாகிருஷ்ணன்

பணம்!

பிரபல ஓவியரான பிகாசோ நண்பர்களுக்கு ஒரு விருந்து வைத்தார். சாப்பிட்டவர்களில் ஒருவர், பிகாசோ வீட்டுச் சுவர்களில் அவருடைய ஓவியம் எதுவும் இல்லாமல் வெள்ளையாக இருப்பதைக் கண்டு "உங்களுக்கு உங்களுடைய ஓவியங்கள் பிடிக்காதா? இங்கே சுவரில் ஒன்றைக் கூட மாட்டவில்லையே?" என்றார்.



• பிகாசோ

பிகாசோ, "என் ஓவியங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அதை வாங்கி மாட்டுமளவிற்குப் பண வசதி எனக்கு இல்லையே!" என்று சொன்னார்.

- எம். ஜரினா பானு

சொர்க்கம்

பெர்னார்ட் ஷா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, சக மாணவர்கள் அவரை மட்டம் தட்டிக் கொண்டேயிருப்பார்கள்.

அவர்களுக்குப் பாடம் புகட்ட சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார் ஷா.

ஒரு நாள் வகுப்பாசிரியர் மாணவர்களைப் பார்த்து "உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்!" என்றார்.

உடனே பெர்னார்ட் ஷாவைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர். ஆசிரியர், "உனக்கு மட்டும் சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லையா?" என்று ஷாவிடம் கேட்டார்.

உடனே பெர்னார்ட் ஷா, "எனக்கும் விருப்பம்தான். ஆனால் இவர்களெல்லாம் சொர்க்கத்திற்குப் போன பிறகு அது சொர்க்கமாகவா இருக்கும்!" என்றார். மாணவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

- குட்டி பிரசன்னா,
கரூர்.

ஹலோ...

ஒரு முறை லியோ டால்ஸ்டாய் ஒரு பூங்காவிற்குப் போயிருந்தார். டால்ஸ்டாய் தன் அருகில் இருந்தவரிடம், "ஹலோ எப்படியிருக்கிறீர்கள்?" எனக் கேட்டார். அந்த ஆசாமி சரியான கோபக்காரர். "நாம் இருவரும் இதற்கு முன் ஒரு முறை கூட சந்தித்துக் கொண்டதில்லை! பிறகு எப்படி எனக்கு 'ஹலோ' சொல்லுகிறீர்கள்?" எனக் கோபமாகச் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டார்.

அதற்கு அடுத்த நாள் டால்ஸ்டாய்

இல்லையே!

அந்தப் பூங்காவிற்குச் சென்றபோது, முதல் நாள் கோபமாய்ப் பேசிய அதே நபர் எதிர்பட்டார். ''ஹலோ! எப்படியிருக்கிறீர்கள்? நாம் இருவரும் ஏற்கெனவே ஒருமுறை சந்தித்திருக்கிறோம்'' என்று சிரித்தபடி லியோ டால்ஸ்டாய் கூற, அந்தக் கோபக்கார நபர் கடகடவென சிரித்து விட்டார்.

- யோகானாந்தம், கோபி.

லேசான விபத்து

கோவிந்த வல்லப பந்த் குண்டாகவும், லால்பகதூர் சாஸ்திரி ஒல்லியாகவும் குள்ளமாகவும் இருப்பார்கள். ஒரு முறை இருவரும் காரில் செல்லும் போது விபத்து ஏற்பட்டு காருக்கு வெளியே தூக்கி எறியப்பட்டனர்.

செய்தி அறிந்த நேரு பதறி அடித்து அந்த இடத்திற்கே வந்தார்.

''என்ன பயங்கரமான விபத்து!'' என இருவரிடமும் கூறினார் நேரு.

சாஸ்திரியோ ''இது லேசான விபத்து தான்'' என்றார் சிரித்தவாறே. ''என்ன அப்படி சொல்லிவிட்டீர்கள்'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டார் நேருஜி.

''விபத்தில் நான் கோவிந்த வல்லப பந்த் மேல் தூக்கி எறியப்பட்டேன். இது மாறி என்மீது அவர் விழுந்திருந்தால்தானே இது பயங்கர விபத்தாய் இருக்க முடியும்'' என்றார் லால் பகதூர் சாஸ்திரி சிரித்துக் கொண்டே.

- ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபி


விலைக்கு விற்றால்...

சர்வாதிகாரி தைமூர் ஒரு சமயம் கவிஞர் கெர்மானியிடம், ''என்னை விலைக்கு விற்றால் பொது மக்கள் எவ்வளவு பணம் கொடுத்து என்னை வாங்குவார்கள்?'' என்று கேட்டார்.

உடனே கவிஞர் இவரது கர்வத்தை அடக்கும் விதமாக, ''இப்போதிருக்கும் நிலையில் சுமார் 25 வெள்ளிக்காசுகள் கொடுத்து வாங்குவார்கள்'' என்றார்.

அதைக் கேட்டவுடன் தைமூர் ஆச்சரியத்துடன்,

''என்ன! 25 வெள்ளிக்காசுகளா? நான் அணிந்திருக்கும் உடை, பெல்ட், ஷூ இவற்றின் மதிப்பே 25 வெள்ளிக்காசுகள் இருக்குமே!'' என்று கேட்டார்.



* பெர்னார்ட் ஷா



* டால்ஸ்டாய்

உடனே கெர்மானி, ''ஆமாம்! நானும் அதை மட்டும்தான் சொன்னேன்'' என்றார். அதைக் கேட்டவுடன் தைமூர் மனந்திருந்தி தன் கர்வத்தை விட்டொழித்தார்.

- எம்.வினோத், சங்கரன்கோவில்

நிதி

கே.ஏ. அப்பாஸும் இன்னும் சிலரும் பொது தொண்டுக்காக நிதி திரட்டினர். நகரத்தில் உள்ள முக்கிய மனிதர்களைப் பார்த்துவிட்டு மாகாண கவர்னரிடம் சென்றார்கள். கவர்னர் மால்கம் ஹெய்லி. அவரிடம் தாங்கள் வந்த நோக்கத்தைக் கூறினர். ''உங்களுக்கு ஆங்கிலேயர்களைக் கண்டால் பிடிக்கவில்லை. எங்களை அடித்து விரட்டப் பார்க்கிறீர்களே! இதற்கு மட்டும் என்னிடம் வரலாமா?'' என்று மால்கம் கிண்டலாகக் கேட்டார்.

இளைஞர் கூட்டம் எதிர்பாராத பதிலைக் கேட்டுத் திகைத்தது. அப்பாஸ் உடனே, ''நாங்கள் உங்களிடம் இனாம் பெற வரவில்லை. நீங்கள் எங்களிடமிருந்து பெறும் பணத்தில் ஒரு பகுதியைத் திரும்பப் பெறத்தான் வந்தோம்'' என்று கம்பீரமாகச் சொன்னார். கவர்னர் வாய் அடைத்துப் போய் நூறு ரூபாய் கொடுத்தார்.

- எஸ். சௌம்யாயனி, ஒன்பதாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி.

இருவர் பெருமை!

கொங்கு நாட்டில் கருவூரில் வாழ்ந்த சிவபக்தர் பத்தர். அவரிடம் எப்பொழுதும் ஒரு கோடாலி இருக்கும். சிவனடியாருக்குத் துன்பம் விளைவிப்பவர் மேல், அக்கோடாலியை எறிந்து தண்டிப்பார். அதனால் அவரை மக்கள் எறிபத்தர் என்றே அழைத்தனர். கருவூரிலுள்ள சிவன் கோவிலுக்குத் திரு ஆனிலைக் கோயில் என்று பெயர். காமதேனு பூஜித்துப் பேறு பெற்றதால் அப்பெயர் வந்தது.

சிவகாமியாண்டார் என்ற சிவனடியார் அக் கோயிலுக்குப் புஷ்பக் கைங்கர்யம் செய்து வந்தார். ஒரு கம்பினைத் தோளில் வைத்து இரு பக்கமும் பூக்குடலைகளை வைத்து சுமந்து செல்வார். குடலைகளில் நந்தவனங்களிலிருந்து பறித்த வில்வம், புது மலர்கள் நிரம்பி இருக்கும். அவற்றை மாலையாகக் கட்டி ஈசனுக்கும், அம்பிகைக்கும் சார்த்தி மகிழ்வார். தும்மல் வந்தால் குடலையில் எச்சில் தெறிக்கலாமென்று மாலை சார்த்தும் வரை வாயைத் துணியால் கட்டிக் கொண்டிருப்பார்.

அப்போது நாட்டை ஆண்டவர் புகழ்ச் சோழர். பல வெற்றிகளைத் தேடித் தந்த அவரது பட்டத்து யானையின் பெயர் பட்டவர்த்தனம். நெடுங்காலமாக யுத்தமின்றி இருந்ததால் அதற்குக் கொழுப்பு ஏறி இருந்தது.

அது நவராத்திரி சமயம். சரஸ்வதி பூஜைக்கு முதல் நாள் துர்க்காஷ்டமி. அமராவதி ஆற்றில் யானையை நீராட்டி அலங்கரித்து பாகர்கள் வீதி வழி அழைத்து வந்தனர். ஓரமாக ஒதுங்கிச் சென்ற வயோதிகரான சிவகாமியாண்டாரின் பூக்குடலையைத் தும்பிக்கையால் எட்டிப் பறித்து மண்ணில் வீசியது யானை. இறைவனுக்கு அணிவிக்க வேண்டிய மலர்கள் வீதியில் சிதறிக் கிடந்தன.

யானையின் மீது இரு பாகர்கள், யானையின் இரு பக்கங்களிலும் இருவர், முன்னே ஒருவர் என்று ஐவர் இருந்தும் இந்த அநியாயத்தை அடக்காமல் யானையை வேகமாக நடத்திச் சென்றனர்.

யானையோடு சிவகாமியாண்டார் போட்டி போட முடியாமல், "சிவபெருமானே! இன்று என் தொண்டு வீணானதே!" என்று தரையில் கையை அறைந்து கொண்டு கதறினார்.

அச்சமயம் தெருவில் வந்து கொண்டிருந்த எறிபத்தர் இதைப் பார்த்துக் கொதித்தார். ஆவேசத்தோடு



ஆர். பொன்னம்மாள்

யானை சென்ற வழிக்கு எதிர் வழியில் ஓடினார். யானையின் தும்பிக்கை மீது பரசுவை வீசினார். தும்பிக்கை துண்டாக யானை பயங்கரமாகப் பிளிறியபடி மண்ணில் விழுந்து மடிந்தது.

சீறிப் பாய்ந்த யானைப்பாகர் ஐவரையும் மழுவால் வெட்டிக் கொன்றார்.

சிலர் விரைந்து சென்று அரண்மனை வாயிற்காவலரிடம் இச் செய்தியைக் கூறினர். காவலர் அரசனிடம் இதைத் தெரிவித்தனர்.


"பட்டத்து யானையைக் கொன்ற பாதகன் யார்?" என்று உறுமியபடி பட்டத்து குதிரை மேல் ஏறி வந்தார் புகழ் சோழர். மந்திரிகளும், சேனாதிபதியும் உடனே படை திரட்டிக் கொண்டு மன்னரைப் பின்தொடர்ந்தனர்.

யானையின் தும்பிக்கையைத் துண்டித்த எறிபத்தர் எங்கும் ஓடாமல் தைரியமாக நின்று கொண்டிருந்தார். எறிபத்தர் குணத்தை அரசர் அறிவார். அதனால் குதிரையிலிருந்து இறங்கி அவரருகில் நெருங்கி,

"ஐயனே! காரணமின்றி நீர் யானையைத் தண்டித்திருக்க மாட்டீர்! நான் சென்ற பிறவியில் செய்த புண்ணியத்தால் யானை உங்களுக்குத் தீங்கு செய்யாமலிருந்ததே! பிழை செய்த யானையையும், அதை அடக்காத பாகர்களையும் தண்டித்ததோடு தங்கள் கோபம் அடங்கியதா? அதன் மேல் ஏறி பவனி வந்ததோடு, பொல்லாத யானையை இதுநாள் வரை போஷித்த என்னையும் கொல்வதே சரி" என்று உறையிலிருந்து வாளை உருவி நீட்டினார்.

மன்னரின் சொற்களைக் கேட்ட எறிபத்தர் உருகினார். அவர் கையிலிருந்த கோடாலி நழுவியது. வாளைச் சட்டென்று வாங்கிக் கொண்டார். தாமதித்தால் மன்னன் தானே கழுத்தை அறுத்துக் கொண்டுவிடலாமென அஞ்சினார்.

இப்படி பட்டத்து யானையை மதம் பிடிக்க வைத்திருக்கிறாரே என்று கொற்றவன் மேல் கோபப்பட்டதற்காகத் தன் கழுத்தை அறுத்துக் கொள்ள முற்பட்டார். அரசர் பதறி எறிபத்தரைத் தடுக்க இருவருக்கும் பெரும் போராட்டமே நடந்தது.



அப்போது அசரீரி, "அன்பர்களே! உங்கள் இருவர் பெருமையையும் உலகறியச் செய்யவே இந் நாடகம் எம்மால் நடத்தப் பட்டது. மாண்டவர் மீள்வர்" என்றொலித்தது. யானையும், ஐந்து பாகர்களும் உயிர்பெற்றெழ எறிபத்தர் விருப்பப்படி பட்டவர்த்தனத்தின் மீதேறிச் சென்றார் அரசர். சிவகாமியாண்டார் குடலையிலும் பூக்கள் நிரம்பின. விண்ணிலிருந்து மலர் மாரி பொழிந்தது.

கேப்சூல் எண்டோஸ்கோப்பி

டாக்டர் கு. கணேசன்

● கே.எஸ். காயத்ரி, கும்பகோணம்.

? உடலின் எந்தெந்த உறுப்புகளைத் தானம் செய்யலாம், டாக்டர்? உறுப்புகளைத் தானம் செய்ய விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியது என்ன?

! ஒருவர் உயிருடன் உள்ளபோது இரத்தம், சிறுநீரகம், நுரையீரலின் ஒரு பகுதி, கல்லீரலின் ஒரு பகுதி, எலும்பு மஜ்ஜை ஆகியவற்றையும், இறந்த பிறகு - அதாவது 'மூளைச்சாவு' (Brain Death) ஏற்பட்ட பிறகு - இதயம், கண்ணின் விழி வெண்படலம், தோல், எலும்பு ஆகியவற்றையும் தானம் செய்யலாம். உறுப்புகளைத் தானம் செய்ய விரும்புகிறவர்கள் உயிருடன் உள்ள போதே 'உறுப்புதான உறுதிமொழிப் படிவ'த்தைப் பூர்த்தி செய்து, தங்கள் குடும்ப உறுப்பினர்களில் ஒருவரின் சாட்சியுடன் அரசு மருத்துவமனையிலோ, நகரங்களில் உள்ள பெரிய மருத்துவமனைகளிலோ தந்து விட வேண்டும். அவர்கள் 'உறுப்புதான அட்டை' (Donor Card) ஒன்றைத் தருவார்கள். உறுப்பு தானம் செய்ய விரும்பியவர் இறந்தவுடன், அவரது உறவினர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவமனையைத் தொடர்பு கொண்டால், அவர்கள் உறுப்புகளைத் தானமாகப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்வார்கள். ஒருவர் ஒரு உறுப்பை மட்டும் தானம் செய்ய முன் வரலாம். இன்னொருவர் பல உறுப்புகளைத் தானம் செய்ய முன் வரலாம். ஒரு சிலர் உடல் முழுவதையும் தானமாகத் தருவதற்கு முன் வருவார்கள், - அண்மையில் நடிகர் கமலஹாசன் செய்துள்ள மாதிரி. இந்த விவரங்கள் உறுப்புதான அட்டையில் இடம் பெற்றிருக்கும். அதன்படி உறுப்புகளாகவோ, உடல் முழுமையாகவோ தானமாகப் பெற்றுக் கொள்ளப்படும்.

● கே.வி. குமார் ஆனந்த்ராவ், திருப்பதி.

? காலில் செருப்புப் போடாமல் நடந்தால் நமக்குப் பல நோய்கள் வருமென்று கூறுகிறார்கள். இது உண்மையா டாக்டர்?

! உண்மைதான், தம்பி. காலில் செருப்பில்லாமல் நடக்கும்போது சில நோய்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. முக்கியமாக, குழந்தைகளைக் குறி வைத்துத் தாக்கும் குடல்புழுக்களைக் கூறலாம். அதிலும் குறிப்பாக, கொக்கிப்புழு (Hook Worm) குடலில் உண்டாவதற்கு முக்கிய காரணமே காலில் செருப்பணியாமல் நடப்பதுதான். இப்புழுக்களின் லார்வாக்கள் கால் இடுக்கு வழியாகத் தோலைத் துளைத்துச் சென்று வயிற்றை அடைந்துவிடுகின்றன. பின்பு அங்கு புழுக்களாக வளர்ந்து ரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழ்கின்றன. சென்னையில் இப்போது அதிகமாகத் தொற்றிக் கொண்டிருக்கும் 'மென்சுருளிநோய்' (Leptospirosis) இவ்வகையில்தான் பரவுகிறது. கால்படை, சேற்றுப்புண் மற்றும் கழிப்பறைப் படை ஆகிய காளான்நோய்கள் ஏற்படுவதற்கும் இதுதான் காரணம்.செருப்புப் போடாமல் நடந்தால் காலில் முள், பீங்கான், ஆணி போன்ற அயற்பொருள்கள் குத்தி 'டெட்டனஸ்' நோய் வரலாம். சர்க்கரை நோயாளிகள் செருப்புப் போடாமல் நடந்தால் காலில் கொப்புளம் வந்துவிடும்.

● கு. மதிவாணன், சென்னை - 66.

? 'கேப்சூல் எண்டோஸ்கோப்பி' என்று ஒரு புதிய ஸ்கேனிங் மெஷின் வந்துள்ளதாமே, அதைப் பற்றிக் கூறுங்கள் டாக்டர்!

! மனித உடலில் வயிற்றுப்பகுதியில் ஏற்படும் புண், புற்றுநோய், இரைப்பை அடைப்பு முதலிய நோய்களை இதுவரை 'எண்டோஸ்கோபி' முறையில், நோயாளியின் வாய் மற்றும் தொண்டை வழியாக ஒரு நீண்ட ஃபைபர் குழாயை வயிற்றுக்குள் செலுத்தி, அக்குழாயின் வெளிமுனையில் உள்ள லென்ஸ் மூலம் நேரடியாகக் கண்டறிந்து சிகிச்சை அளித்து வந்தார்கள். இந்தப் பரிசோதனை மூலம் நோயாளியின் உணவுக்குழாய், இரைப்பை, சிறுகுடலின் முதல் பாகம் ஆகியவற்றை மட்டுமே காண முடியும். இப்போது மருத்துவத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக 'கேப்சூல் எண்டோஸ்கோப்பி' என்னும் புதிய முறை வந்துள்ளது. இது எண்டோஸ்கோப்பி போல பெரிய கருவியல்ல. காண்பதற்கு ஒரு



என்றால் என்ன?

குழாய் மாத்திரை (Capsule) அளவிற்குத் தான் இக்கருவி இருக்கும். இதனுள் சிறு 'சிப்' (Chip)பில் வீடியோ காமிரா, பேட்டரி, ஒளியைத் தரும் கருவி, வொயர்லெஸ் டிரான்ஸ்மிட்டர் என பல நுண்பகுதிகள் உள்ளடங்கி இருக்கும். இந்தக் குழாய் காமிராவை நோயாளியானவர் வாயில் போட்டு விழுங்கிவிட வேண்டும். அதன்பிறகு எட்டரை மணி நேரத்திற்கு வாய், உணவுக்குழாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல் மற்றும் குதம் வரை உள்ள எல்லா பகுதிகளின் செயல்பாடுகளையும், நோய்களையும் இக் கருவியில் உள்ள காமிரா படமெடுத்து, வொயர்லெஸ் டிரான்ஸ்மிட்டர் மூலம் நோயாளியின் இடுப்பில் பொருத்தப்பட்டிருக்கும் சி.டி.ஆர் எனும் கருவியில் வண்ணப்படங்களாகப் பதிவு செய்துவிடும். இந்தப் பதிவை இதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றுள்ள மருத்துவர்கள் கணினி மூலம் பார்த்து நோயின் தன்மையைத் துல்லியமாகத் தெரிந்துகொண்டு சிகிச்சை தருவார்கள். இந்தப் புதிய முறை மூலம் வயிற்றைத் திறந்து பார்க்காமலேயே வயிற்றில் செரிமான மண்டலத்தில் ஏற்பட்டுள்ள எல்லா நோய்களையும் அறிந்துகொள்ளலாம். இந்தக் குழாய் காமிராவின் விலை இருபத்தைந்தாயிரம் ரூபாய். இதனை ஒருவருக்கு ஒருமுறை தான் பயன்படுத்த முடியும். விழுங்கப்பட்ட குழாய் காமிரா மறுநாள் மலத்துடன் வெளியில் வந்துவிடும். வயிறு மற்றும் குடல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். குழாய் காமிராவைக் கண்டுபிடித்தவர் இஸ்ரேல் ராணுவப் பொறியாளர் காவ்ரீயல் ஹிட்டன்.

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்

● சே. அறிவழகன், திருப்புலிவனம்

? சிறுநீரகத்தில் கற்கள் உருவாகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

! சிறுநீரகக் கற்கள் கால்சியம், ஆக்சலேட், பாஸ்பேட், யூரிக் அமிலம், சிஸ்டின் ஆகிய தாதுக்களால் உருவாகின்றன. பால், தயிர், வெண்ணெய், பாலாடைக்கட்டி, பால்கோவா, ஐஸ்கிரீம், சாக்லேட், வெள்ளைப்பூண்டு, கருணைக்கிழங்கு ஆகியவற்றில் அதிக அளவில் கால்சியம் உள்ளது. தக்காளி, அவரை, பீட்ரூட், அசைவ உணவுகள், கீரைகள் (குறிப்பாகப் பசலைக்கீரை) இலந்தைப்பழம், சீத்தாப்பழம், முந்திரி போன்ற உலர்ந்த பழங்கள், காபி, தேநீர் முதலியவற்றில் ஆக்சலேட் மிகுதி. முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு போன்ற உலர்ந்த கொட்டைகளிலும் இறைச்சியிலும் யூரிக் அமிலம் அதிகம். சிறுநீரகக் கற்கள் உண்டாகாமல் தடுப்பதற்கு இதுவரை சொன்ன உணவுகளைத் தவிர்க்க வேண்டும் அல்லது குறைத்துக் கொள்ள வேண்டும். முட்டைக்கோஸ், முள்ளங்கி, வெங்காயம், காலிஃப்ளவர் ஆகியவை சிறுநீரகக் கற்களைத் தடுக்க உதவும். ஆகையால் இவற்றை அடிக்கடி சாப்பிடலாம். ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, மாம்பழம், பைன் ஆப்பிள் ஆகிய பழங்களைச் சாப்பிடலாம். பூரி, சப்பாத்தி, பருப்பு வகைகளை மிதமாகச் சாப்பிட வேண்டும். தண்ணீரை அதிகமாக அருந்த வேண்டும். உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

புதிர் உலகம் விடைகள்

I. தடியைத் தோளில் வைத்துக் கொண்டு முன்புறம் நான்கு கிண்ணிக் கோழிகளையும் பின்புறம் ஆறு நாட்டுக் கோழிகளையும் கட்டிக் கொண்டு வருவான். எப்படி? பின்புறம் இரண்டு நாட்டுக் கோழிகள் அதிகமாக இருப்பதால் தடி சரிந்து விழுந்து விடுமே. விழாது. இரண்டு நாட்டுக் கோழிகளின் எடையும் தடியை முன்னோக்கிப் பிடித்திருக்கும் சண்முகத்தின் கைகளின் பலமும் சரிசமமாகிவிடுகிறதே.

II. ரமேஷ் வாங்கிய பீப்பாய்களின் அளவு = 62 + 38 + 32 = 132 லிட்டர் சுரேஷ் வாங்கிய பீப்பாய்களின் அளவு = 36 + 30 = 66 லிட்டர். விற்பனையாகாமல் இருந்தது = 40 லிட்டர்.

III. இரண்டும் பொய் சொல்கின்றன. தவளை குஞ்சு முட்டையிலிருந்து வெளிவரும்போது கால்கள் இல்லாமல் வாலுடன் தலை பிறட்டையாக இருக்கும்.

IV. 5 தோசை கொண்டு வந்தவர் 75 காசுகளும், 7 தோசை கொண்டு வந்தவர் 2.25 ரூபாயும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

V. நஷ்டம்தான். எப்படி என்கிறீர்களா? உதாரணத்திற்கு ஒரு பொருளின் விலை ரூ.100 என்று வைத்துக் கொள்வோம். அதை 15 சதவீதம் விலை உயர்த்தினால் ரூ.115. இதில் அதாவது ரூ.115க்கு 15 சதவீதம் தள்ளுபடி வழங்கினால் ரூ.17.25 குறையும். அப்போது பொருளின் விலை ரூ.97.75. கடைக்காரருக்கு நஷ்டம் ரூ.2.25

VI. காற்றில்லாவிட்டால் நெருப்பு எரியாது. எனவே விபத்து நடக்க வாய்ப்பில்லை.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 க	டி	2 கா	ர	ம்	■	ல்	வ	3 நா
டு	■	வ	■	4 ர	தி	■	■	கா
5 கு	யி	ல்	■	க	■	6 சி	ம்	லா
■	■	■	7 மா	8 சி	■	ப்	■	ந்
ம்	ல	9 கோ	■	■	■	பி	ம்	10 து
ல	■	யி	■	11 கொ	டை	■	■	■
12 க	ட	ல்	■	ப்	■	ம்	ட	13 தி
லா	■	■	சை	14 ப	■	க	■	ய்
15 கோ	ட்	டை	■	ரை	ம	16 தா	ந்	17 செ



பாம்புத்தாரா

அன்புள்ள சிநேகாவுக்கு,

எப்படி இருக்கே? ஒரு வாரமாக நடைபெற்று வரும் என்.எஸ்.எஸ். கேம்ப்பில் நேற்றைய தினத்தை மிக முக்கிய நாளாகக் கருதுகிறேன். அதை உன்னுடன் பகிர்ந்து கொள்ளணும் என்ற ஆவலில்தான் இந்த அவசரக் கடிதம்.

நம் பள்ளியில் இருந்து புறப்பட்ட இருபது பேர் கொண்ட குழு, நேற்று அருகிலிருக்கும் ஓர் ஏரிக்குச் சுற்றிப் பார்க்கச் சென்றோம்.

நான் காமிராவையும், விஸ்வேஸ் பைனாகுலரையும் மறக்காமல் எடுத்துக் கொண்டு கிளம்பினோம்.

இரண்டு படகுகளில் எங்களது ஏரிப் பயணம் ஆரம்பமானது. ஏரியைச் சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென மரங்கள். மரங்களில் நிறைய விதவிதமான பறவைகள் எங்கள் கண்களைக் கவர்ந்தன.

பறவைகள் வானில் வட்டமிட்டதும், அம்பு போல் நீரில் இறங்கி மீன்களைக் கொத்திக் கொண்டு பறந்து சென்று, தங்கள் குஞ்சுகளுக்கு இரை ஊட்டிய காட்சியும் இன்னும் கண் முன்னே இருந்து கொண்டே இருக்கின்றன.

நானும் விஸ்வேஸும் பறவைகளை ரசித்துக் கொண்டு வரும் போது, திடீரென்று தண்ணீரில் ஒரு பாம்பு விரைந்து வந்து கொண்டிருந்தது. எனக்கு உடனே பயம் தொற்றிக் கொண்டது. விஸ்வேஸ் படகுக்காரரிடம் பாம்பைக் காட்டினான்.

உண்மையில் நாங்கள் பார்த்தது பாம்பு இல்லை. பாம்புத்தாரா என்ற பறவைதான் என்பது படகுக்காரரின் விளக்கத்திலிருந்து புரிந்தது.

பாம்புத்தாரா என்ற இந்தப் பறவையின் நீண்ட கழுத்தையும், சிறிய தலையையும் பார்த்தால் பாம்பு மாதிரியே இருக்கும். அதனால்தான் இப்பறவைக்குப் பாம்புத்தாரா என்ற பெயர் வந்துள்ளதாம்.

இதில் இன்னொரு அதிசயம் என்னவென்றால் பாம்புத்தாரா மீனைத் தூக்கிப் போட்டுக் காட்ச் பிடித்ததுதான். நீருக்குள் இருக்கும் மீனை வெளியில் தூக்கி எறிந்து, அது கீழே விழுவதற்குள் தன் அலகை விரித்து காட்ச் பிடித்து இரையாக்கிக் கொள்கிறது பாம்புத்தாரா.

நாங்கள் இதையெல்லாம் பார்த்துக் கொண்டே பயணித்தோம். ஓர் இடத்தில் மரக்கிளைகளில் அமர்ந்து சிறகுகளைக் காய வைத்துக் கொண்டிருந்தன பாம்புத்தாரா

பறவைகள். இடையிடையே 'சிவிட..சிவி..' என்று குரல்கொடுத்துக் கொண்டிருந்தன.

அப்போது எங்களுடன் வந்திருந்த ஒரு சில மாணவர்கள் சத்தம் எழுப்பிக் கத்தினார்கள். உடனே மரத்தில் இருந்த பாம்புத்தாரா பறவைகள் சட்டென்று நீரில் விழுந்து மிதந்து சென்றன. இறந்து விட்டனவோ என ஒரு நிமிடம் பயந்தேன். நல்ல வேளை. அவை உயிருடன்தான் இருந்தன. ஆபத்தான ஒலி கேட்டாலோ, எதிரிகள் அருகில் வந்தாலோ பாம்புத்தாரா இப்படி நீரில் குதித்து இறந்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி, தப்பி விடுமாம். எப்படி இருக்கு இந்த ட்ரிக்?

பாம்பின் உடல் போன்ற நீண்ட கழுத்தில், முன் எலும்புகள் விநோதமான அமைப்பைக் கொண்டுள்ளன. எனவே மீனைத் துரத்திச் சென்று வேகமாகப் பிடித்தவுடன் இவற்றால் உடனே விழுங்க இயலாது. அதனால் மீனைத் தூக்கிப் போட்டு, அலகை விரித்து தொண்டைக்குள் தள்ளிக் கொள்கின்றன.

வங்காளத்தில் மீன்களைப் பிடிக்க பாம்புத்தாராக்களை வளர்ப்பதாக நம் ஆசிரியர் சொன்னார். எப்படி என்கிறாயா? பாம்புத்தாராவின் கழுத்தில் இரும்புக் கம்பியை இறுக்கமாகக் கட்டி விட்டு மீன்களைப் பிடிக்கச் சொல்கின்றனர். இது தெரியாத பறவைகளும் மீனைத் தூக்கிப் போட்டு அலகில் சேமிக்கின்றன. இறுதியில் தேவையான மீன்களை எடுத்துக் கொண்டு இரும்புக் கம்பிகளைக் கழற்றுவார்களாம். என்ன ஒரு அநியாயம்?

பாம்புத்தாரா ஆண்டுக்கு ஒரு முறை இறக்கைகளை உதிர்க்கும். புது இறகுகள் முளைக்கச் சில வாரங்கள் ஆகும். அதுவரை இவற்றால் பறக்க முடியாது. அந்தச் சமயத்தில் எளிதில் வேட்டையாடப்படுகின்றன.

உடல் கறுப்பாகவும், தலை சாக்லேட் வண்ணத்திலும், வால்நுனி விறைப்பாகவும் இருக்கிறது. இவற்றின் முக்கிய உணவு மீன். தவளைகள் மற்றும் நீர் வாழ் பூச்சிகளையும் சாப்பிடுமாம்.

ஏரிக்கு அருகில் (நீர் இருக்கும் இடங்களில்) மரக்கிளைகளில் கூடு கட்டுகின்றன. கூடுகள் அலங்கோலமாக (நீ புத்தக அலமாரியை வைத்திருப்பது போல்) இருக்கும். 3 முதல் 4 முட்டைகள் வரை பெண் பாம்புத்தாரா இடும். ஆண், பெண் இரண்டும் முட்டைகளையும், குஞ்சுகளையும் காக்கின்றன. இவை மீனுக்கு இணையாக நன்றாக நீந்துகின்றன.

பறவைப் பிரியையான உனக்கு இந்தத் தகவல்கள் உதவும் என்ற நம்பிக்கையில்...

அன்புடன்
ரிஷி

செய்து பாருங்கள்!


மாஜிக் மழை!



ஒரு டப்பா, ஆணி, தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள்.

டப்பாவின் மூடியைக் கழற்றி ஆணியின் உதவியால் நிறைய ஓட்டைகளைப் போடுங்கள். (பெரியவர்களின் உதவியுடன் ஆணியால் துளை இடுவது நல்லது). பிறகு டப்பாவின் பக்கவாட்டில் ஒரு சிறு துளை இடுங்கள். உங்கள் நண்பர்களிடம் துளையிட்ட டப்பாவின் மூடியைக் காட்டுங்கள். பிறகு டப்பாவில் நீர் ஊற்றி டப்பாவின் பக்கவாட்டுத் துளையை விரலால் அடைத்துக் கொண்டு மூடியை மூடுங்கள். பிறகு டப்பாவைக் கவிழ்த்துக் காட்டுங்கள். மூடியில் உள்ள ஓட்டை வழியே தண்ணீர் வெளியே வராது. பக்கவாட்டில் உள்ள துளையில் உள்ள விரலை எடுத்தால் தண்ணீர் மழை போல் கொட்டும். மீண்டும் துளையை அடைத்தால் டக்கென்று நின்றுவிடும். இப்படி மாஜிக் மழை செய்து நண்பர்களை அசத்துங்கள்.





வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்

சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்டம். எங்கெங்கு காலி இடம் உள்ளதோ அங்கெல்லாம் கிரிக்கெட் ஆட்டம். ராஜாஜி அரங்கைப் பார்த்தாற் போல இருக்கும் ஜவஹர் பால பவன் கட்டடத்தை ஒட்டி, சிறுவர், சிறுமியர் வித்தியாசமான பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். நான்கு வயதிலிருந்து அதிக பட்சம் பதினைந்து வயதுக்குள்தான் பயிற்சி. உடலை ரப்பர் போல வளைத்து சாகசங்கள் செய்வது ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டு. ''ஆசிய ஒலிம்பிக்ஸ் ஆட்டங்களில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளும் போட்டிகளைத்தான் பார்த்திருக்கிறோம். இங்கே சென்னையில் அப்படி பெரியவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளும் நோக்குடன் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அவர்களுக்கு. இருபதடி தூரம் ஓடி வந்து ஸ்பிரிங் போர்டு எனப்படும் உபகரணத்தில் குதித்து, அதன் உந்துதலில் அந்தரத்தில் ஒன்றிரண்டு பல்டிகள் அடித்து, எதிர்புறம் இருக்கும் ரப்பர் மெத்தையில் சௌகரியமாக விழுகிறார்கள். ஸ்பிரிங் போர்டு பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் பயிற்சியாளர் பன்னீர் செல்வம், பல்டியடிப்பவர்கள் தாறுமாறாக விழாதபடி ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறார். அவர்கள் ஈடுபட்டிருப்பது ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி. ஜிம்னாஸ்டிக்ஸ் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு உடல்திறன் பயிற்சி என்று தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். 'ஜிம்' என்று சொல்லப்படும் உடற்பயிற்சிக் கூடத்துடன் 'ஜிம்னாஸ்டிக்ஸ்' விளையாட்டையும் பலர் ஒன்றுபடுத்திப் பார்க்கிறார்கள். அது வேறு, இது வேறு. உடலைத் திண்மையாக வைத்துக் கொள்ள செய்வது உடற்





✱ பன்னீர் செல்வம்

கிறார்களா?'' என்று நாம் அப்பாவித்தனமாகக் கேட்டோம்.

லேசாகப் புன்னகை புரிந்துவிட்டுப் நாட்டில் நடந்த பழைய ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ஜிம்னாஸ்டிக்ஸ் உண்டு. ஆனால் காலப் போக்கில் அந்த ஆட்டம்

உடலை ரப்பர் போன்று வளைக்க முடியுமா?



பேசத் துவங்கினார் பன்னீர்செல்வம். ''நமது நாட்டைப் பொறுத்தவரை ஜிம்னாஸ்டிக்ஸ் என்பது மிக மிக, ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது. தேசிய அளவில் நடக்கும் போட்டிகளில்கூட ஸீனியர் டீம்கள் இடம் பெறுவதில்லை. இந்த நிலையில் சாதனை படைக்கும் சீன, ரஷ்ய, கொரிய, ஜப்பான் வீரர் மற்றும் வீராங்கனைகளைப் பார்த்து நாம் பெருமூச்சு விட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டும். சர்வதேசப் போட்டிகளில் அதிக அளவு பதக்கங்களை அள்ளித் தரும் போட்டிகளில் ஜிம்னாஸ்டிக்ஸும் ஒன்று. இந்த ஆட்டத்தை ஊக்கப்படுத்த எந்தவித முயற்சியும் தேசிய அளவில் இல்லையே'' என்று வருத்தப் படுகிறார் பன்னீர்செல்வம்.

தடகளம் மற்றும் நீச்சல் போலவே ஜிம்னாஸ்டிக்ஸ் மிகப் பழமையான விளையாட்டு. கிட்டத்தட்ட 3000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த ஆட்டம் நடைபெற்றதாக வரலாறு உண்டு. கிரேக்க மறைந்து, மீண்டும் 19ம் நூற்றாண்டில் தான் ஆடப்பட்டது.

ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்தின் தந்தை எனப்படும் ஜான் என்பவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர். ஸ்வீடனைச் சேர்ந்த லிங் என்பவரும் ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்தில் பல புதிய உத்திகளைப் புகுத்தியவர். பேரலல் பார் எனப்படும் இணை விட்டமும் மேலேயிருந்து தொங்க விடப்பட்டு ஆடப்படும் ரோமன் ரிங் எனப்படும் ஆட்டமும் ஜான் கண்டுபிடித்தவைதான். தரையில் செய்யப்படும் பல சாகசங்களை உருவாக்கியவர் லிங். 1896ம் ஆண்டு ஒலிம்பிக்ஸ் ஆட்டத்தில் மீண்டும் ஜிம்னாஸ்டிக்ஸ் சேர்க்கப்பட்டது. 1974ல் ஆசிய விளையாட்டிலும் இடம் பிடித்தது.

ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டில் தரைப் பயிற்சி, குதிரைச் சுற்றல், குதிரைத் தாவல், இணை விட்டம், சமதள விட்டம், ரோமன் ரிங், பீம், சமதளமில்லாத விட்டம் என்று பலவிதப் பிரிவுகள் உள்ளன. இதில்

ஓவியப் போட்டி

பல வண்ண பலூன்கள் என்றால் எல்லோருக்கும் மிகவும் விருப்பம்தானே! பல வடிவங்களிலும் வண்ணங்களிலும் அழகாகக் காட்சி தரும் பலூன்கள்தான் இந்த மாத ஓவியப் போட்டி. உங்கள் கற்பனை குதிரையைத் தட்டிவிட்டு பலூன் ஓவியங்களை வரைந்து அனுப்புங்கள். ஓவியம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறவாமல் குறிப்பிடுங்கள். கடைசி தேதி 5.12.2002.

'பீம்' எனப்படும் ஆட்டம் பெண்கள் மட்டும் ஆடும் ஆட்டம். குதிரைத் தாவல் ஆட்டம் பெண்களால் ஆடப்படுவதில்லை. குதிரைச் சுற்றல், குதிரைத் தாவல் போன்ற ஆட்டங்களின் பெயர்களைப் பார்க்கும்போது, ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டுக்கும் குதிரைகளுக்கும் ஏதோ தொடர்பு இருப்பது உங்களுக்குப் புரிய வருமே. ஆம்! பண்டைய ரோம் சாம்ராஜ்யத்தில் வீரர்களுக்குக் குதிரை ஏற்றம் மற்றும் ஒரு குதிரையிலிருந்து மற்றொரு குதிரைக்குத் தாவல் ஆகிய சாகசங்களை மரக் குதிரைகளில்தான் பயிற்சி கொடுத்து வந்தார்கள். காலப் போக்கில் மரக் குதிரையின் தலையும் வாலும் வெட்டப்பட்டு, இப்போது உபயோகப்படுத்தப்படும் 'சுமைதாங்கி' போன்ற உபகரணம் பழக்கத்திற்கு வந்தது.

பிரிவிலும் ஏ, பி, சி, டி என்று உப பிரிவுகள் உள்ளன. உதாரணமாக, தரைப் பயிற்சியில் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு அந்தரத்தில் பல்டி அடிப்பது 'ஏ' பிரிவு என்றால், அதிலேயே பின்புறம் பல்டியடிப்பது 'பி' பிரிவாக வைக்கப்பட்டுள்ளது. ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்திலேயே இன்னமும் மேம்படுத்தப்பட்ட அம்சங்களாக ஏரோபிக்ஸ், அக்ரோபாடிக்ஸ், டெம்போலின் ஆகியவை ஆடப்படுகின்றன. சுமைதாங்கி உபகரணத்தில் இசைக்கு ஏற்ப, உடலை ரப்பர் போன்று வளைத்து சாகசங்கள் புரிவதும், பல்டிகள் அடித்து நிற்பதும் ஏரோபிக்ஸ். பல வீரர்கள் ஒருவர் தோள்மீது, ஒருவர் நின்று, அந்தக் கட்டமைப்பின் மீது உயரத்தில் இருப்பவர் அங்கே பல்டியடித்து மற்றவர் தோள்களில் பர்ஃபெக்டாக நிற்பது அக்ரோபாடிக்ஸ்.



ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்தில் ஸ்கோரிங், உச்ச கட்டமாகப் பத்து பாயிண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆட்டக்காரரும் தம் திறமையை நிரூபிக்க 30 முதல் 60 வினாடி வரை நேரம் கொடுக்கப்படுகிறது.

பல்டியடித்து நிற்கும்போது சரியான முறையில் லேண்ட் ஆக வேண்டும். இல்லையேல் பாயிண்ட் கட். ஒவ்வொரு

ஸ்பிரிங் போர்டு உபகரணத்தில் பலவித சாகசங்கள் செய்வது டெம்போலின். ஆனால் இந்த ஆட்டங்களெல்லாம் ஆடுவதற்கு இதுவரை இந்தியாவில் வீரர்களோ, வீராங்கனைகளோ உருவாகவில்லை.

கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக சென்னையில் பயிற்சி எடுத்து வருகிறார் தமிழரசி மனோன்மணி. நடுத்தரக்



குடும்பமாக இருந்தாலும் மனோன்மணி தொடர்ந்து தொய்வில்லாமல் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். தேசிய அளவில் சப்-ஜூனியர் லெவலில் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார். ''சிறுமியரை ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்தில் பயிற்சி கொடுத்து அவர்களை நன்கு தயார் செய்ய முடியும். ஆனால் பெற்றோர்கள் குறிப்பிட்ட பருவத்திற்குப் பின்னர் அவர்களைப் பயிற்சிக்கு அனுப்புவதில்லை. இதுதவிர, ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகளின்போது அணியப்படும் 'சிங்கிள் பீஸ்' உடையணிவதற்கும் பெற்றோர்கள் தடை போடுகிறார்கள். நீச்சல் ஆட்டத்தில் இதுபோன்று உடை அணிந்தாலும், தண்ணீருக்குள் சென்று விடுவதால் கூச்சத்தன்மை அவ்வளவாகத் தெரியவில்லை. ஆனால் இந்த ஆட்டத்தில் அப்படியில்லையே. நம் சிறுமியர் யதார்த்தமாகவே மிகக் கூச்சப்படுபவர்களாக இருக்கிறார்கள். இதுபோன்ற உடை காரணமாக, கூச்சம் அதிகமாகிறது. இதுதவிர, பயிற்சியின்போது காயம் ஏற்படுவது சகஜம். விளைவு, ஆட்டத்தையே கைகழுவி விடுகிறார்கள்.

''ஒரு சிறுவனோ, சிறுமியோ நல்ல முறையில் முழுவதும் தயாராக வேண்டுமென்றால் மூன்று வருடம் ஆகும். ஆனால் படிப்பின் அழுத்தம், குடும்பச் சூழல் காரணமாகத் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு, ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்தைத் தொழிலாக ஏற்றுக் கொண்டோர் எண்ணிக்கை இந்தியாவில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இருக்கிறது'' என்கிறார் பன்னீர்செல்வம். காலில் 'ஷூ' போட்டுக்கொண்டும், போடாமலும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

''இந்த ஆட்டம், இன்னமும் அதிக அளவில் பாப்புலராகாமல் இருப்பதற்கு மற்றொரு காரணம், காஸ்ட்லியான உபகரணங்கள். ஜிம்னாஸ்டிக்ஸ் ஆட்டத்தின் சகல பிரிவுகளையும் விளையாட, ஒரு பயிற்சிக் கூடம் ஏற்படுத்த வேண்டுமென்றால் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் தேவைப்படும். ஆனால் சென்னையில் அது போன்ற முழு அளவு பயிற்சிக் கூடம் இல்லை. 'எங்கள் ஜவஹர் பால பவன், அரசு உதவியோடு செயல்படுகிறது. பல்கலை, விளையாட்டு ஆகியவற்றை மிகக் குறைந்த கட்டணத்தில் சொல்லித் தருகிறோம். அந்த வகையில்



முடிந்த மட்டும் சில உபகரணங்களை வாங்கி, இந்த ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் அரசு உதவியுடன் முழு அளவு பயிற்சிக் கூடம் உருவாக்க இருக்கிறோம்'' என்கிறார் மேனேஜர் தங்கநாயகம். இப்போது சினிமா உலகில் ஸ்டண்ட் மாஸ்டர்கள் சிலரும் தங்கள் பிள்ளைகளை ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக்கு அனுப்புகிறார்களாம். காரணம், எதிர்காலத்தில் சினிமாவில் ஸ்டண்ட் மாஸ்டர்களாக அவர்கள் உருவாக இந்தப் பயிற்சி உதவும் என்பதுதான்.

— ப்ரியன்

படங்கள் : ராஜன்

ஆலமரம்




முதல் பரிசு

ரா. ப்ரஷாந்த்,
ஆறாம் வகுப்பு,
ஜவஹர் வித்யாலயா, சென்னை.




இரண்டாம் பரிசு

ஜெ. தியானேஸ்வரன்,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ சங்கரவித்யா சாலா மேல்நிலைப்பள்ளி,
கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.




ஓவியப் போட்டி முடிவுகள்

நவம்பர் இதழில் 'ஆலமரம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து ஆலமரங்கள் இங்கு அணிவகுத்துள்ளன.



மூன்றாம் பரிசு

எஸ். ஸ்ரீவித்யா,
ஏழாம் வகுப்பு,
டவுன் மேல்நிலைப்பள்ளி,கும்பகோணம்.



ஆறுதல் பரிசு

கோ. சந்தனக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு, என்.எஸ்.கே.பி. பொன்னையா கவுண்டர் மேல்நிலைப்பள்ளி, கூடலூர்.



ஆறுதல் பரிசு

கே. சரவணக்குமார்,
எட்டாம் வகுப்பு, பசுபதியப்பா நடுநிலைப்பள்ளி, காரமடை.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

அக்டோபர் இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தனர். சரியான விடை அளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்

1. சி. கார்த்தீஸ்வரன், பத்தாம் வகுப்பு, நாடார் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம்.
2. சொ.பா. ஸ்வர்ண லக்ஷ்மி, பத்தாம் வகுப்பு, தர்ம தாவள விநாயகர் மேல் நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.
3. மு. அகமது ஆதில், எட்டாம் வகுப்பு, தூய அருளின்பர் உயர்நிலைப் பள்ளி, பள்ளங்கோயில், திருத்துறைப்பூண்டி.
4. ஆர். கண்ணன், பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, நாமகிரிப்பேட்டை.
5. வி.மீனாட்சி, ஐந்தாம் வகுப்பு, காமராஜர் மெட்ரிகுலேஷன் பள்ளி, கோவை.

சரியான விடை

1. கனடா – ஒட்டாவா
2. அணில் – கொறி விலங்கு
3. மாசேதுங் – சீனா
4. ஜோக் நீர்வீழ்ச்சி – கர்நாடகா
5. எலுமிச்சை – சிட்ரிக் அமிலம்
6. மார்ட்டினா நவரத்திலோவா – டென்னிஸ் வீராங்கனை
7. மின்னல்
8. தஞ்சை பெரிய கோயில்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

"அம்மா! புதுசா வாங்கின தோட்டை நான் இன்னிக்கு ஸ்கூலுக்குப் போட்டுட்டுப் போறேம்மா!" என்று தன் அம்மாவிடம் கெஞ்சினாள் பத்து வயதான ராதா.

"கண்ணு! அது ஒரு பவுனும்மா. நீ தொலைச்சுடுவே, வேண்டாம்மா!" என்றார் அம்மா.

"அம்மா! நான் தொலைக்காமல் இருப்பேம்மா! நான் என்ன சின்னப் பொண்ணா? எனக்குப் பத்து வயசாகுதும்மா. அந்தப் ப்ரியா தன்னோட ஜிமிக்கியை ஸ்டைலா ஆட்டி எல்லார் கிட்டயும் பந்தா பண்ணிக்கறாம்மா. ப்ளீஸ்ம்மா" ராதா பிடிவாதமாக இருந்தாள். அம்மாவுக்கு அலுவலகம் செல்லும் அவசரம். அதனால், அவரும் அவளுக்குப் போட்டு விட்டார் அந்தத் தோடை. ராதா சந்தோஷத்தோடு பள்ளிக்குக் கிளம்பினாள்.

அந்தச் சில நிமிடங்கள்...

ராதா தினமும் தன் பள்ளிக்கு ஸ்கூல் பஸ்ஸில் போவாள். அன்றும் தன்னுடைய புத்தக மூட்டையையும், சாப்பாட்டுக் கூடையையும் எடுத்துக் கொண்டு பஸ் நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அந்த பஸ் ஸ்டாப்பில் அவள் மட்டும்தான் இருந்தாள். அவளுடைய தோழியான சுஜா அன்று பள்ளிக்கு வரவில்லை.

எப்போதும் ஸ்கூல் பஸ் ஒன்பது மணிக்கு அந்த பஸ் ஸ்டாப்பில் இருக்கும். அன்று என்னவோ தெரியவில்லை, ஒன்பது பத்தாகியும் பஸ் வரவில்லை.

ராதாவிற்குத் தன் புத்தகப் பை கனமாய் இருந்தது. எங்காவது இறக்கி வைத்தால் பரவாயில்லை என்றிருந்தது. அருகில் ஒரு கடையின் ஷட்டர் இறக்கி வைக்கப் பட்டிருந்தது. அதனருகில் பையை இறக்கி வைத்தாள். கால் வலிக்கவே, தானும் அந்த

ஷட்டரின் மேல் சாய்ந்து கொண்டு பஸ்ஸை எதிர்பார்த்தாள்.

சிறிது நேரத்தில் ஓர் ஆள் அவளருகில் வந்து நின்றான். அவன் அவளையே வெறித்துப் பார்த்தான். யதேச்சையாக



ராதா அவனைக் கவனித்து விட்டாள். அவனது பார்வையைப் பார்த்துவிட்ட ராதாவுக்கு அப்போதுதான் தனது தோடைப் பற்றிய நினைவு வந்தது. அவனது திருட்டு முழியைப் பார்த்தவுடன் அவளுக்குப் பதற்றம் அதிகமானது.

யாரையாவது துணைக்குக் கூப்பிடலாம் என்று பார்த்தால் அங்கு அவ்வளவு மக்கள் நடமாட்டமும் இல்லை. 'ஐயோ! இவன் நகையைக் கழற்றிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? ஒரு வேளை நம்மையே கடத்திக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?' போன்ற சந்தேகங்கள் அவள் மனதில் உதிக்கத் தொடங்கின.

தன்னுடைய உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ள முடியாமல் தவித்தாள். பேருந்தும் வருவதாகத் தெரியவில்லை. அவளது பதற்றம் அதிகமானது.

'ஓடி விடலாமா? ஓடும் போது அவன் பிடித்து விட்டால் என்ன செய்வது?' என்று நினைத்ததால் ஓடிவிடும் முயற்சியைக் கைவிட்டாள்.

சற்று நேரத்தில் அந்த மனிதன் அவளை நெருங்கி வரவே அவளுக்குப் பயம் அதிகமானது. அவளது உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்தது. இதயத் துடிப்பு உச்ச கட்டத்திற்குச் சென்றது. அந்த ஆள் அவளிடம் ஏதோ சொல்ல வந்தான்.

"பாப்பா! கொஞ்சம் நகர்ந்துக்கறியா?" என்றான் அவன். கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "ஏன்? எதற்காக?" என்று கேட்டாள் ராதா.

"பாப்பா! ஒன்பதரை மணி ஆயிடுச்சு! கடையைத் திறக்கணும். நீயோ ஷட்டர் மேலே சாஞ்சிட்டிருக்கே! நீ கொஞ்சம் நகர்ந்துகிட்டால் நான் கடையைத் திறப்பேன். நீ வேணும்னா உள்ளே வந்து உட்கார்ந்துக்கோ!" என்று அவன் சொன்னவுடன் ராதா ஆடிப் போய் விட்டாள்.


'ஐயோ! ஒரு நல்ல மனிதரை தவறாக நினைத்ததோடு அவரது தொழிலையும் தடுத்து விட்டோமே' என்று குற்ற உணர்ச்சியோடு ராதா நகர்ந்தாள்.

அதற்குள் ஸ்கூல் பஸ் வந்துவிடவே அவருக்குக் கையசைத்துவிட்டுப் பேருந்தில் ஏறிச் சென்றாள்.


— க. விவேக்

குதிரையின் சேவை!

(ஈசாப் கதை) அமைப்பு, படம்: பிரசாத்




குதிரை பயந்து ஓடியது.
உன்னை எப்படி கவனிக்கணுமோ அப்படி கவனிக்கிறேன்.
உடனே குதிரை அருகில் வசிக்கும் வேட்டைக்காரனைச் சந்தித்தது.
ஐயா, நான் உன்னை மான் வேட்டைக்கு அழைத்துச் செல்கிறேன். வருகிறாயா?
சரி, போகலாம்.
ஆனால் மான் மிகவும் வேகமாக ஓடுமே! நான் எப்படி...?
கவலை வேண்டாம். நீ என் முதுகில் ஏறிக்கொள்.
வேட்டைக்காரன் ஈட்டியுடன் குதிரையின் முதுகில் ஏறி அமர்ந்தான்.
கிளம்பலாமா?
குதிரை சீறிப் பாய்ந்து புறப்பட்டது.
இன்னும் வேகமாப் போ
மான் பாய்ந்து வரும் குதிரையைப் பார்த்து மிரண்டது.
எனக்குத் தொந்தரவு கொடுக்கவே குதிரை வருகிறது. எப்படியாவது தப்பிக்கணும்.



மான் வேகமாக ஓடியது. ஆனாலும் குதிரை மானை நெருங்கியது.
சீக்கிரம் குறி பார்த்து ஈட்டியை வீசு.
வேட்டைக்காரன் குறி பார்த்து ஈட்டியை எறிந்தான்.
மானின் உடலில் ஈட்டி பாய்ந்தது.
ஆ.... ஆ....
அப்பாடி ஒழிந்தது!
ஒரு யோசனை.
வேட்டைக்காரனே உனக்கு நன்றி. உன் வழியைப் பார்த்துக் கிளம்பிச் செல்.
உன்னை எப்படி பயன்படுத்தணும்னு எனக்குத் தெரிந்து விட்டது. உன்னை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். நீ எங்களுக்குச் சேவை செய்யப் போகிறாய்.
மானை விரட்டறேன்னு நானே இப்படி மாட்டிக் கிட்டேனே!ம்..
அன்றிலிருந்து குதிரை மனிதனுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறது.


சார் தபால்

சுப்பம்மாவின் பேராசை, நன்றி கெட்ட மனிதர்கள் ஆகிய கதைகள் சூப்பர். ஜோக்ஸ் படித்து சிரித்தேன். என்னிடம் நிறைய சுவையான துணுக்குகள், பொது அறிவு விஷயங்கள் இருக்கின்றன. விரைவில் அனுப்பி வைக்கிறேன்.

— ஆ. சந்தியா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல் நிலைப்பள்ளி, நல்லூர்.

ஜோக்ஸ் அனைத்தும் அருமை. வீரேந்திர சேவக் போஸ்டர் அசத்தல். வெட்டுக்கிளியைப் பற்றிய தகவல்கள் பயனுள்ளதாய் இருந்தன.

— செ. டாவின் செல்வா,
கேத்தன ஹள்ளி,
தருமபுரி மாவட்டம்.



நீங்கள் சொன்னது போலவே நான் இரண்டு ராட்சதர்களையும் ஸ்கேல் வைத்து அளந்து பார்த்தேன். இரண்டு பேரும் ஒரே அளவாகத்தான் இருந்தனர். கண்ணால் பார்க்கும் போது சிறிதும் பெரிதுமாகத் தெரிந்தனர். என்ன ஆச்சர்யம்! கண்ணால் காண்பதும் பொய் என்பது சரியாகத்தான் உள்ளது.

— ஆர். லாவண்யா,
ஐந்தாம் வகுப்பு,
பாரதி மெட்ரிகுலேஷன்பள்ளி,
வந்தவாசி.

கண்ணால் காண்பதும் பொய்!

புலேந்திரன் எழுதிய 'நிலவுக்குச் செல்ல'... பாடல் நன்றாகப் பாட வந்தது. வெட்டுக்கிளிகள் பற்றிய செய்திகளைப் படித்து என் வகுப்பில் கூறியபோது அனைவரும் அக்கறையுடன் கேட்டுக் கொண்டனர். சின்னமனூர் சின்னப்பட்டாளம் ரொம்பவே விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கிறது.

— வே. சுபஸ்ரீ, பத்தாம் வகுப்பு,
நல்லூர்.

'வலையில் சிக்கியவை' பகுதி ஒவ்வொரு மாதமும் பல சுவையான செய்திகளைத் தாங்கி வருவது பாராட்டுக்குரியது. அதே போல் பல விசித்திரமான தளங்களை அறிமுகப்படுத்தினால் அது இணையப் பிரியர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமே!

— ஆர். வி. மயில்வாகனன்,
மதுரை.

'வலையில் சிக்கியவை' பகுதியில்

கோகுலம் நியூஸ் பகுதியில் 'சாக்லேட்' சாப்பிட்டால் இதய மற்றும் புற்று நோய்கள் வராது என்ற செய்தி என் போன்ற சாக்லேட் பிரியர்களுக்கு ஒரு டெய்ரி மில்க் சாக்லேட் சாப்பிட்டது போன்று உள்ளது.

— டி.என்.எஸ். கிருபாகரன்,
திருப்புலிவனம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.


என்னுடைய ஜோக்கிற்கு முதல் பரிசு கிடைத்திருப்பது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. என் பெற்றோர்கள், நண்பர்கள் என எவ்வளவு பேரிடம் காட்டியிருப்பேன் தெரியுமா? சேவக் போஸ்டருக்கு ஒரு நன்றி.

— லோ. தரணிகுமார்,
திருக்கழுக்குன்றம்.


தொடரை வென்றது இந்தியா



• சச்சின்



• ஹர்பஜன்



• ஆனந்த்

இந்தியா - மேற்கு இந்தியத் தீவுகளுக்கு இடையே இந்தியாவில் 3 டெஸ்ட் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. முதல் இரண்டு டெஸ்ட்களை இந்தியா வென்றது. மூன்றாவது டெஸ்ட் டிராவில் முடிந்தது. 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது இந்திய அணி. கொல்கத்தாவில் நடைபெற்ற இறுதி டெஸ்டில் சச்சின் டெண்டுல்கர் 176 ரன்களைக் குவித்தார். டெஸ்ட் போட்டிகளில் 31வது சதத்தை அவர் எட்டினார். வி.வி.எஸ். லக்ஷ்மண் 154 ரன்கள் எடுத்தார். ஆட்ட நாயகனாக சச்சின் டெண்டுல்கரும், தொடர் நாயகனாக ஹர்பஜன் சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடரை வென்ற இந்திய அணி 'ஒரு தினப் போட்டி'யையும் கைப்பற்றுமா?

மார்க் வாஹ் ஓய்வு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மார்க் வாஹ் சர்வதேச ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். 128 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மார்க் வாஹ் 20 சதங்களுடன் 8029 ரன்களைக் குவித்திருக்கிறார். சர்வதேச அளவில் அதிக ரன்களைக் குவித்துள்ள பட்டியலில் பதினோராவது இடத்தில் இருக்கிறார் இவர். 59 விக்கெட்டுகளை எடுத்துள்ள மார்க் 181 காட்ச்களையும் பிடித்து சாதனை படைத்திருக்கிறார். ஆஸ்திரேலியா உருவாக்கிய மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவர் மார்க் வாஹ்.


மீண்டும் சாம்பியன்

ஹைதராபாத்தில் இரண்டாவது உலகக் கோப்பை செஸ் போட்டிகள் நடந்து முடிந்தன. இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இறுதிச் சுற்றில் உஸ்பெகிஸ்தானின் ருஸ்தம் கசிட் ஜனோவை 29 நகர்த்தல்களில் தோற்கடித்தார் ஆனந்த். இதையடுத்து 1.5 - 0.5 என்ற புள்ளிக் கணக்கில் முதலிடத்தைப் பிடித்தார். ஆனந்துக்கு 23 லட்ச ரூபாய் ரொக்கப்பரிசு கிடைத்தது.

ஷார்ஜாவில் பாகிஸ்தானுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே மூன்று டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. இதில் 3-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி தொடரை வென்றுவிட்டது.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Sub Editor : S. Sujatha
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual : 24 U.S. Dollars, Srilanka Rs.400/-


குதிரை பயந்து ஓடியது.
உன்னை எப்படி கவனிக்கணுமோ அப்படி கவனிக்கிறேன்.
உடனே குதிரை அருகில் வசிக்கும் வேட்டைக்காரனைச் சந்தித்தது.
ஐயா, நான் உன்னை மான் வேட்டைக்கு அழைத்துச் செல்கிறேன். வருகிறாயா?
சரி, போகலாம்.
ஆனால் மான் மிகவும் வேகமாக ஓடுமே! நான் எப்படி...?
கவலை வேண்டாம். நீ என் முதுகில் ஏறிக்கொள்.
வேட்டைக்காரன் ஈட்டியுடன் குதிரையின் முதுகில் ஏறி அமர்ந்தான்.
கிளம்பலாமா?
குதிரை சீறிப் பாய்ந்து புறப்பட்டது.
இன்னும் வேகமாப் போ
மான் பாய்ந்து வரும் குதிரையைப் பார்த்து மிரண்டது.
எனக்குத் தொந்தரவு கொடுக்கவே குதிரை வருகிறது. எப்படியாவது தப்பிக்கணும்.


மான் வேகமாக ஓடியது. ஆனாலும் குதிரை மானை நெருங்கியது.
சீக்கிரம் குறி பார்த்து ஈட்டியை வீசு.
வேட்டைக்காரன் குறி பார்த்து ஈட்டியை எறிந்தான்.
மானின் உடலில் ஈட்டி பாய்ந்தது.
ஆ.... ஆ....
அப்பாடி ஒழிந்தது!
ஒரு யோசனை.
வேட்டைக்காரனே உனக்கு நன்றி. உன் வழியைப் பார்த்துக் கிளம்பிச் செல்.
உன்னை எப்படி பயன்படுத்தணும்னு எனக்குத் தெரிந்து விட்டது. உன்னை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். நீ எங்களுக் குச் சேவை செய்யப் போகிறாய்.
மானை விரட்டறேன்னு நானே இப்படி மாட்டிக் கிட்டேனே!ம்..
அன்றிலிருந்து குதிரை மனிதனுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறது.

சார் தபால்

சுப்பம்மாவின் பேராசை, நன்றி கெட்ட மனிதர்கள் ஆகிய கதைகள் சூப்பர். ஜோக்ஸ் படித்து சிரித்தேன். என்னிடம் நிறைய சுவையான துணுக்குகள், பொது அறிவு விஷயங்கள் இருக்கின்றன. விரைவில் அனுப்பி வைக்கிறேன்.

— ஆ. சந்தியா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல் நிலைப்பள்ளி, நல்லூர்.

ஜோக்ஸ் அனைத்தும் அருமை. வீரேந்திர சேவக் போஸ்டர் அசத்தல். வெட்டுக்கிளியைப் பற்றிய தகவல்கள் பயனுள்ளதாய் இருந்தன.

— செ. டாவின் செல்வா,
கேத்தன ஹள்ளி,
தருமபுரி மாவட்டம்.


புலேந்திரன் எழுதிய 'நிலவுக்குச் செல்ல'... பாடல் நன்றாகப் பாட வந்தது. வெட்டுக்கிளிகள் பற்றிய செய்திகளைப் படித்து என் வகுப்பில் கூறியபோது அனைவரும் அக்கறையுடன் கேட்டுக் கொண்டனர். சின்னமனூர் சின்னப்பட்டாளம் ரொம்பவே விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கிறது.

— வே. சுபஸ்ரீ, பத்தாம் வகுப்பு,
நல்லூர்.

'வலையில் சிக்கியவை' பகுதி ஒவ்வொரு மாதமும் பல சுவையான செய்திகளைத் தாங்கி வருவது பாராட்டுக்குரியது. அதே போல் பல விசித்திரமான தளங்களை அறிமுகப்படுத்தினால் அது இணையப் பிரியர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமே!

— ஆர். வி. மயில்வாகனன்,
மதுரை.

'வலையில் சிக்கியவை' பகுதியில்



நீங்கள் சொன்னது போலவே நான் இரண்டு ராட்சதர்களையும் ஸ்கேல் வைத்து அளந்து பார்த்தேன். இரண்டு பேரும் ஒரே அளவாகத்தான் இருந்தனர். கண்ணால் பார்க்கும் போது சிறிதும் பெரிதுமாகத் தெரிந்தனர். என்ன ஆச்சர்யம்! கண்ணால் காண்பதும் பொய் என்பது சரியாகத்தான் உள்ளது.

— ஆர். லாவண்யா,
ஐந்தாம் வகுப்பு,
பாரதி மெட்ரிகுலேஷன்பள்ளி,
வந்தவாசி.

கண்ணால் காண்பதும் பொய்!

கோகுலம் நியூஸ் பகுதியில் 'சாக்லேட்' சாப்பிட்டால் இதய மற்றும் புற்று நோய்கள் வராது என்ற செய்தி என் போன்ற சாக்லேட் பிரியர்களுக்கு ஒரு டெய்ரி மில்க் சாக்லேட் சாப்பிட்டது போன்று உள்ளது.

— டி.என்.எஸ். கிருபாகரன்,
திருப்புலிவனம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.


என்னுடைய ஜோக்கிற்கு முதல் பரிசு கிடைத்திருப்பது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. என் பெற்றோர்கள், நண்பர்கள் என எவ்வளவு பேரிடம் காட்டியிருப்பேன் தெரியுமா? சேவக் போஸ்டருக்கு ஒரு நன்றி.

— லோ. தரணிகுமார்,
திருக்கழுக்குன்றம்.

தொடரை வென்றது இந்தியா



• சச்சின்



• ஹர்பஜன்



• ஆனந்த்

இந்தியா - மேற்கு இந்தியத் தீவுகளுக்கு இடையே இந்தியாவில் 3 டெஸ்ட் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. முதல் இரண்டு டெஸ்ட்களை இந்தியா வென்றது. மூன்றாவது டெஸ்ட் டிராவில் முடிந்தது. 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது இந்திய அணி. கொல்கத்தாவில் நடைபெற்ற இறுதி டெஸ்டில் சச்சின் டெண்டுல்கர் 176 ரன்களைக் குவித்தார். டெஸ்ட் போட்டிகளில் 31வது சதத்தை அவர் எட்டினார். வி.வி.எஸ். லக்ஷ்மண் 154 ரன்கள் எடுத்தார். ஆட்ட நாயகனாக சச்சின் டெண்டுல்கரும், தொடர் நாயகனாக ஹர்பஜன் சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடரை வென்ற இந்திய அணி 'ஒரு தினப் போட்டி'யையும் கைப்பற்றுமா?

மார்க் வாஹ் ஓய்வு


ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மார்க் வாஹ் சர்வதேச ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். 128 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மார்க் வாஹ் 20 சதங்களுடன் 8029 ரன்களைக் குவித்திருக்கிறார். சர்வதேச அளவில் அதிக ரன்களைக் குவித்துள்ள பட்டியலில் பதினோராவது இடத்தில் இருக்கிறார் இவர். 59 விக்கெட்டுகளை எடுத்துள்ள மார்க் 181 காட்ச்களையும் பிடித்து சாதனை படைத்திருக்கிறார். ஆஸ்திரேலியா உருவாக்கிய மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவர் மார்க் வாஹ்.

மீண்டும் சாம்பியன்

ஹைதராபாத்தில் இரண்டாவது உலகக் கோப்பை செஸ் போட்டிகள் நடந்து முடிந்தன. இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இறுதிச் சுற்றில் உஸ்பெகிஸ்தானின் ருஸ்தம் கசிட் ஜனோவை 29 நகர்த்தல்களில் தோற்கடித்தார் ஆனந்த். இதையடுத்து 1.5 - 0.5 என்ற புள்ளிக் கணக்கில் முதலிடத்தைப் பிடித்தார். ஆனந்துக்கு 23 லட்ச ரூபாய் ரொக்கப்பரிசு கிடைத்தது.

ஷார்ஜாவில் பாகிஸ்தானுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே மூன்று டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. இதில் 3-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி தொடரை வென்றுவிட்டது.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Sub Editor : S. Sujatha
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual : 24 U.S. Dollars, Srilanka Rs.400/-



புள்ளி உள்ள இடங்களை வண்ணம் தீட்டினால்
ஒரு பிராணி கிடைக்கும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 " Registered as a Newspaper in Srilanka